உ

நம்பர் 845

சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
திருவள்ளுவர் நூல் நிலையம்,
பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் [illegible]

அவர்களால்

இனாமளிக்கப்பெற்றது.

ஆண்டு திங்கள் நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

என். ராமசாமிக்கோன்,
அக்கவுண்டு புக்ஷாப்,
கீழாவணி மூலவீதி,
மதுரை.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR

3412

V. V. K. R.

[illegible] [illegible] வா[illegible]

பா[illegible]ணி



தத்துவ. போதகர்

Father Robert Di Nobili

3402

Tamil Essays

PAGANERI

TAMIL ESSAYS

3412

தமிழ் வியாசங்கள்

BY

T. Chelvakesavaroya Mudaliar, M.A.,

Pachaiyappa's College

V. V. K.

Madras

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY

1919

சுகாதார. தருப்பணம்.

செல்வம். . 3412

நட்பு. . .

சாதுரியம். . .

கல்வி. .

வசனம். . .

செய்யுள். .

சுகாதார

தருப்பணம்.

3412

சுகாதார தருப்பணம்.

1. சுகம்.
2. சுகங் கெட்டவன்
3. தன் நோய்க்குத் தானே மருந்து
4. சுத்தம்
வாயு—வாசஸ்தானம்—ஜலம்—ஆஹாரம்—தேகம்
5. ஒளி
6. உழைப்பு
மனோ வாக்குக் காயம்
7. உண்டி. உணவின் அளவு
8. பானம்
9. உறக்கம்
உறக்கத்துக்கு உரிய காலம்
10. உற்சாகம்
11. வைத்தியம் செய்துகொள்ளல்
12. பழக்க வழக்கம்
13. முடிவு

சுகாதார தருப்பணம்.

3412

'நோயற்றவாழ்வே வாழ்வு.' 'நோய்க் கிடங்கொடேல்.' 'விரதங் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்.' சுகமாவது, மனமொழி மெய்கள் வயப்பட்டிருப்பதும், அவற்றால் செய்யலான கருமங்களைச் செய்ய இயலுதலும் ஆகிய நிலைமை: யாக்கை நொய்ம்மை, நோக்கின் றூய்மை, கரணங்கள் தொழிற்குரியவாதல், பசிமிகுதல் முதலாயின குறிகளால், உடலில் யாதொரு பிணியு மின்றெனத் துணிதலான நிலைமை. நாம் உண்ணும் உணவை ஜீரணிக்கச் செய்கிற ஜீரணக்கருவிகளும், உணவிலிருந்து இரத்தத்தை உண்டாக்கி அதை உடல்முழுவதும் பரவச்செய்கிற இரத்தக்கருவிகளும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்படி ஆகாயத்தை உட்கொள்ளும் சுவாசக் கருவிகளும், உடலிலுள்ள மற்றக் கருவிகளும், யாதொரு சேதமும் அடையாமல், அததற்குரிய தொழிலை வருத்தமின்றி நடத்தும்பொழுது, நாம், யாதொரு துன்பத்தையும் அடையாமல், நமக்குள்ள பல காரியங்களைக் குறைவின்றிச் செய்யலான தேக நிலைமையே சுகமெனப்படும் எனச் சுகாதார விளக்கம் உரைக்கின்றது. இதன் மறுதலையான நிலைமையே அசௌக்கியம்.

சுகங்கெட்டவன் தானும் ஒரு பயன் எய்தான்; பிறர்க்கும் பயன்படான். இவன், வறிஞனாயின், தன்னுறவினர் முதலாயினார்க்குக் கால நஷ்டமும் திரவிய நஷ்டமும் உண்டாக்கி, அவர்கட்கு வீண் சுமை ஆகிறான்: தனிகனாயின், தன் பொருளால் நுகர்தலான இன்பம் நுகர்தலின்றி, வறிஞனே யாகிறான். பலாட்டிகராய் யானை போல்வாரும், சுகங் கெட்டால், பலஹீனராய்ப் பூனை போல்வர் ஆகின்றனர்.

'சாதல் விளியாவரு நோயினன்ருல்.' சுகம் கெடாமல் நீடிய ஆயுள் பெற்றவர்களே, நண்பர் உறவினர் முதலானவர்க்கும் உலகிற்கும் பெருநன்மை இயற்றத் தக்கவர்கள்.

பழவினையால் வருவனவும் பாரம்பரியமாக வருவனவும் ஆன பிணிகள் நீங்க, ஏனைய வெல்லாம் சுகாதார விதிகளை உணர்ந்து அவைகளை அனுட்டியாமையால் உண்டாவனவே. அவ்விதிகளை அனுட்டிப்பவர்கள், நோய்க் கிடங்கொடாமல், ஆயுள் முழுவதும் சுகித்திருக்கலாம். சுகத்துக்குச் சாதக மானவற்றைக் கைவிடாமல், அதற்குப் பாதகமானவற்றைக் கடிபவர்களே 'தமக்கு மருத்துவர் தாம்.' இளமையில் மூப் புத்துன்பம் அடைதற்கும், முதுமையில் இளமையின்பம் நுகர்தற்கும், அவரவரே காரணர். 'இளமையை மூப்பென் றுணர்த லினிதே.'

யுரோபிய மருத்துவப் புலவர்கள் சுகாதார சாஸ்திரத்தை இயன்றமட்டில் தீர்க்கமாக வரையறை செய்திருக்கின்றனர். இங்க்லிஷில் பயிற்சியில்லாதவர்பொருட்டு, அதில் சுலபசாத் தியமான சில விஷயங்கள் மாத்திரம், தமிழ்நூற் கருத்துக்களை யும் இடையிடையில் தழுவி, இந்த வியாசத்தில் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

சுத்தத்தின் பெருமையை, 'சுத்தம் சோறிடும்' என்பதனு லறியலாம். சுத்தமாவது மலினமில்லாத தன்மை. ஆங்கி லேயர்கள் தேகசுத்தியை ஆன்மசுத்திக் கிரண்டாவதாகக் கொள்கின்றனர். வீட்டைச் சுத்திசெய்வதும், பாண்டங் களைச் சுத்திசெய்வதும், நீராடுவதும், தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரிப்பதுமே, நமது மதானுசாரத்தில் முக்கியாமிசம். 'கந்தை யானாலும் சகக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி' என் பதே நம்மவர்களில் வறிஞரும் வழங்கும் மூதுரை. ஆகவே இவர்களுக்கு இதைக்குறித்து வெகுவாய் விரித்துரைத்தல் வேண்டா. ஆயினும், சற்றும் அழுக்கு நீங்காமல், சாஸ்திரத் தின் பொருட்டு வஸ்திரம் தோய்ப்பதும் ஸ்நாநம் பண்ணு வதும் முதலிய துராசாரங்கள் சிலரிடத்தில் உண்டு. 'செய் வன திருந்தச்செய்' என்பதை எவரும் எவ்விஷயத்திலும் மறத்தலாகாது. வாயு வாசஸ்தானம் ஜலம் ஆஹாரம் தேகம் என்பவற்றின் சுத்தத்தைக் குறித்து நம்மவர்கள் நன்ருய்க்

கவனிப்பதில்லை. இவற்றின் அசுத்தமே விஷபேதி முதலிய கொடிய வியாதிகட்குக் காரணமாகையால், இவற்றைக் குறித்துச் சிறிது கூறுவது இன்றியமையாத தாகும்.

பருக நீரின்றியும் உண்ணச் சோறின்றியும் சிலநாளளவும் ஜீவித்திருக்கலாம்: சுவாசம் விடாமல் ஒரு நிமிஷநேரமும் இருத்தல் முடியாது. சீவன் எனப் பொருள்படுகிற உயிர் என்னும் தமிழ் மொழி, காற்று என்றும் பொருள்படுகிறது. இதனால் சீவனுக்கு முக்கியாதாரமாவது காற்று என்பது போதரும். காற்றில் ஜீவாதாரவாயு உப்புவாயு கரியமிலவாயு நீராவி என நால்வகை அமிசங்கள் உண்டு. இவற்றில், ஜீவாதாரவாயு சரீரத்தில் உள்ள இரத்தத்தைச் செவ்விரத்தமாகச் செய்யும். செவ்விரத்தம் ஆரோக்கியத்துக்கு ஆதார மானது. கரியமில வாயுவின் சேர்க்கையால் இரத்தம் அசுத்தமாகிய காரிரத்தமாதலால், வியாதி உண்டாகும். மார்பில் நுரையீரலில் பரவுகின்ற இரத்தமானது, நாம் உசுவாசம் செய்யும் காற்றிலுள்ள ஜீவாதாரவாயுவைக் கிரகித்துக்கொண்டு, தான் தேகமுழுவதும் பாவி ஓடிவருகையில் தன்னிடம் சேர்மானமாகும் கரியமில வாயுவை நிசுவாசக் காற்றுடன் வெளிப்படுத்திவிடுகின்றது. ஆகையால், தேகத்தில் இரத்தசுத்திக்குக் காரணம், நாம் சுவாசம் விடும் காற்றே. அசுத்தவாயுவைப் பூரித்தால் செவ்விரத்தம் காரிரத்தம் ஆகும். சுத்தவாயுவைப் பூரித்தால் காரிரத்தம் செவ்விரத்தம் ஆகும். ஆதலால் நாம் எப்போதும் சுத்தவாயுவையே சுவாசித்தல் வேண்டும். தன்னாலும் பிறராலும் இரேசிக்கப்பட்ட காற்றும், துர்க்கந்தம் அளாவிய காற்றும், அசுத்தமாகிய நச்சுக்காற்றாகும். காற்றில்லாத ஒடுங்கிய வீட்டினுள்ளும் நெருங்கிய ஜனக்கூட்டத்தினுள்ளும் இருத்தல் ஆகாது. இருந்தால் அசுத்தவாயுவே பூரிக்கப்படும்.

நம்முடைய வாசஸ்தானங்களில் காற்றுச் சுத்தமாக இருப்பதானால், வீட்டைச் சுற்றிலும் சாலகக் கல்மஷங்களும் குப்பை கூளங்களும் அழுகற் பண்டங்களும் இன்றி, வீடுகளும், அடைபட்டிருக்காமல், பெரிய வாயில்களும் பல கணிகளும் அமைந்து, காற்றுத் தாராளமாய் வரவும் போகவும் தக்கவைகளாக இருத்தல் வேண்டும். வீட்டி னருகில் துர்க்கந்தமான நீர்நிலைகள் இருத்தலாகா. மேற்கூரையில் ஓட்

டடை முதலியவற்றை நீக்கிவிடல் வேண்டும். சுவர்களை, மலி னமாகாமல், பழுதுபார்த்தும் மண் தீற்றியும் சுண்ணும்பு பூசி யும் வைத்திருத்தல் வேண்டும். தரையை, ஓதம் ஏறவொட்டா மல், திருத்தியும் புதுக்கியும் வைத்துக்கொள்ளல் வேண்டும். படுக்கை வஸ்திரங்களை, அப்போதைக் கப்போது சுத்தி செய் தல் வேண்டும். வீட்டினருகில் சேரவொட்டாமல், மலசலங் களை, உடனுக் குடனே நீக்குவித்தல் வேண்டும். ஒவ்வொரு வரும் அவரவர் வீட்டையும் கொல்லையையும் இங்ஙனம் சுத்த மாக வைத்திருந்தால், காற்று, அசுத்தமாகாமல், சுவாசத் துக்கு யோக்கியமாக இருக்கும். மனிதரில் சிலர் துஷ்ட சகவாசத்தால் கெட்டுப்போவது போல, வாயுவும் ஜலமும் கெட்ட வஸ்துக்களோடு கூடினுல், அவை, தம்மளவில் கெட் டுப்போவது மன்றி, அவைகளை உபயோகிக்கின்றவர்களுக் கும் தீங்கை விளைவிக்கின்றன.

ஆகவே, வாயுவின் சுத்தத்தைப் போன்று, ஜலசுத்த மும் அத்தியாவசியம் ஆனதே. 'தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா' என்ற முதுரையை மறவாமல், சிலர் கலங்கற் சின்னீரையும் உண்பர்: குளிக்கப் போயும் சேற்றைப் பூசிக் கொள்வர். பருகவும் சோறு சமைக்கவும் உபயோகிக்கும் நீருள்ள கிணறு குளங்களின் அருகில், குப்பை கூளங்களைக் கொட்டி வைப்பதும், மலஜல மோசனஞ் செய்வதும், ஆடுமாடு களைக் கட்டிவைப்பதும், அவற்றில் வஸ்திரங்களைத் தோய்ப் பதும், காலலம்புவதும், ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதும், அவற்றி னீரை அசுத்தப்படுத்தும் காரணங்களேயாம். இங்ங னம் அசுத்தமான நீரை உபயோகிப்பதே, விஷபேதி முதலிய கொடிய வியாதிகளுக்குக் காரணமாகும் என யுரோபிய மருத்துவ நிபுணர்கள் கட்டுரைக்கின்றனர். 'புறந்தூய்மை நீரா னமையும்.' அந்நீர் தன்னளவில் தூயதன்றுயின், அதனுல் எங்ஙனம் தூய்மை உண்டாகும்? நாம் அனுபவிக்கவேண்டிய எல்லாப் பொருள்களையும் சிருஷ்டித்து உலகத்திலே வைத்து விட்ட கடவுள், தண்ணீரை மட்டும் நம்முடைய ஸ்வாதீனத் தில் விடாமல், ஆகாசத்தில் மேக ரூபமாய் வைத்துக்கொண்டு, வேண்டும்போது மழை பெய்வித்து, நம்முடைய பாஜனங்களை அடிக்கடி புதுப்பித்துக்கொண்டு வருகிருர். இதனுல் ஜலத்தி

னுடைய அருமை பெருமை நன்ருய் விளங்குகிறது.' ஸ்நாந பானங்களுக்கு ஊற்றுநீரும் ஓடுநீருமே யோக்கியம். சூரிய கிரணம் படாத நீரும் காற்றுப்படாத நீரும் பாசிநீரும் அதிக சேறுள்ள நீரும் இலையுதிர்ந்த நீரும் புழுவுள்ள நீரும் துர்க்கந்த முள்ள நீரும் வியாதிகளை விளைவிக்கும். இவைகள் ஸ்நாநம் சமையல் பானம் என்பவைகளுக்கு ஆகா. பானத்துக்கு, எவ் வித நீரையும், தெளிவித்து வடிகட்டிக் கொள்வதும், காய்ச்சி வடிகட்டிக் கொள்வதும் உத்தமம்.

உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

தண்ணீரைச் சேமித்துவைக்கும் பாத்திரங்களின் உட்புறத்தை அப்போதைக் கப்போது நன்ருய்த் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

ஆஹார சுத்தியாவது, அழுகலும் நாறலும் இல்லாத தானிய தவசங்களை, தவிடு மண் கல் கப்பி திப்பி காம்பு கோது முதலியவைகளை நீக்கி, சுத்தமான பாத்திரங்களில், அவசியமான சம்பாரங்களைக் கலந்து, சுவை யுள்ளனவும் ஜீரணிக்கத் தக்கனவுமாக நன்கு சமைத்து, சுத்தமான பாத் திரங்களில் இட்டு உண்ணுதலாம். பித்தளை முதலிய உலோ கங்களால் செய்த பாத்திரங்களினும் மட்கலங்களே உத்தமம். மட்கல மல்லாதவைகளுக்கு ஈயம் பூசுதல் பரிகாரம். இந்த விவரங்களெல்லாம் பதார்த்தகுண விளக்கம், பாக சாத்திரம் முதலியவற்ருல் தெளிவாகும். அநுவசியமான சம்பாரங் களையும் வாசனைப் பண்டங்களையும் சேர்ப்பதனுல், கெடுதி விளைவ தல்லது, நன்மை உண்டாவ தில்லை.

சுவாச வாயுவும் ஸ்நான பானத்துக் குரிய ஜலமும் ஆஹாரமும் சுத்தமாக இருப்பது அவசியமாதல் போலவே, நமது தேகத்தைச் சுத்தமாக வைத்திருப்பதும் தேகாரோக் கியத்துக்கு அவசியமாகும். சரீரத்திலுள்ள மயிர்க்கால்களின் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குக ளெல்லாம் இரத் தத்தினின்று தடையின்றிப் பறியும்பொருட்டும், காற்று வீசு கையில் சரீரத்தின்மேல் வந்து பதியும் தும்பு தூசிகள் ஒழியும்

பொருட்டும், தினந்தோறும் சரீரத்தை ஒழுங்காகத் தேய்த்து ஸ்நாநம் செய்தல்வேண்டும். ஸ்நாநத்துக்குப் பிராதக்காலமே தக்கது.

காலைக் குளிக்குக் கடும்பசியுண் டாநோய்போ
மாலைக் குளிக்கவைகள் மத்திபமே.

வெந்நீரிலே செய்யும் ஸ்நாநத்திலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நாநமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும். வாரத்துக்கு இரண்டுதர மாயினும் ஒருதர மாயினும் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நாநம் செய்தல் வேண்டும். அப்போதைக் கப்போது, அழுக்கு வஸ்திரத்தைக் களைந்துவிட்டு, சுத்தமான வெள்ளைவஸ்திரம் தரித்தல்வேண்டும்.

சருமத்தின்மீது ஒளிபடுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தரை மட்டத்திற் றாழ்வாய் ஓதமும் இருளுமான அறையினுள்ளே யிருந்து வேலை செய்கின்றவர்கள், தமது சரீரம் விளர்த்து, வியாதி யடைகின்றனர். சருமத்தை ஊடுருவிச் செல்லும் ஒளியானது, சருமத்துக்கு மாத்திரமேயன்றி, இரத்தத்துக்கும் நயத்தைக் கொடுக்கும். அந்நயம் அதன் வழியாக உடல் முழுவதிலும் சென்று செறியும். ஆகையால், வீடுகளும் கல்விச்சாலைகளும் கம்மியச்சாலைகளும் மடைப்பள்ளிகளும், காற்றுத் தாராளமாய் வீசத் தக்கவைகளாக இருப்பதுடன், வெளிச்சம் செம்மையாகப் பிரவேசிக்கத் தக்கவைகளாகவும் இருத்தல் வேண்டும். பயிர் பச்சை செடி கொடி முதலிய தாவரங்களுக்குப் போலவே, மனிதருக்கும், சூரியகிரணமானது, நன்மையைக்கொடுக்கும். 'மரத்தின் கீழாகாமரம்' என்றபடி, நிழலிலே யுள்ள பயிர்கள் வளர்ச்சியும் வளமுங் குன்றியிருக்க, சூரியகிரணம் படுவதான வெளியிடத்தில் உள்ள பயிர்கள் செழிப்புற்று வளர்கின்றன. அங்ஙனமே, இருட்டறைகளில் இருப்பவர் வெளுத்து உரம் குன்றியிருக்க, நல்ல வெளிச்சமுள்ள வீடுகளி லிருப்பவர்கள் தேககாந்தியும் உரமும் பெற்று வாழ்வர்

எடுத்தாளாத பொருள் உதவாது. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளாது. உழவு கைத்தொழில் முதலியவற்றைச் செய்வோர், உடலுரம்

பெற்று நோயின்றிப் பலாட்டிகராக நீடிய வாயுள் பெற்றிருக்க, யாதொன்றுஞ் செய்யாமல் சோறுண்டு சோம்பியிருப்பவர், தேகபல மின்றி மெலிந்திருப்பதும், அடிக்கடி வைத்தியரைத் தேடித் திரிவதே உத்தியோகமாக இருப்பதும் பிரத்தியக்ஷம். வாணிபம் இலேககம் உவாத்திமை முதலாகத் தேகப்பிரயாசை யில்லாத ஜீவனமுடையவர்களும், யாதொரு தொழிலு மின் றிப் பிதுரார்ஜிதமான பொருளுதவியால் உண்டுடுத்து நாள் கழிக்கும் சுகஜீவிகளும், கல்வி கற்கு மாணுக்கர்களும், தாந் தாம் உண்ட வுணவு ஜீரணமாகி உடலில் உதிரம் பரவி உறுப் புகளும் நரம்புகளும் உரம் பெறுதற்பொருட்டு, ஏதாவது ஒருவிதத்தில் உழைப்புக்கொள்வது இன்றியமையாதது. இங்ஙனம் உழைக்காதவர்கள் அஜீரணம் காய்ச்சல் கைகால் பிடிப்பு ஸ்தூலம் பாரிசவாய்வு துர்ப்பலம் முதலியவற்ருல் பீடிக்கப் பெறுவர். இவர்களுக்கு ஔஷதங்கள் தத்தத் கால பரிகாரமே யன்றி வேருகா. இவர்களுக்கு உழைப் பே பரமௌஷதம். இந்தப் பரமௌஷதம் கொள்ளாவிடின், இந்த ரோகங்கள் கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமான ரோ கங்கள் ஆகிவிடும். தங்கள் தங்கள் இருப்பிற்கும் வய துக்கும் தேகவியற்கைக்கும் ஏற்றபடி, சிலம்பப்பயிற்சி, மல்லயுத்தம், சாரிபோதல், வெளிக்காற்றில் கானடையாய் உலாவிவருதல், தூரவு குளங்களில் நீஞ்சுதல், நந்தவன முதலி யன வைத்துப் பயிரிடல் முதலியவற்றில் எதையாவது இவர் கள் இரண்டு மூன்று நாழிகை நேரம் தினக்கிரமமாக அனு சரித்துவருதல் வேண்டும். இங்ஙனம் அனுசரிப்பது, ஏனை யரினும் நகரவாசிகளுக்குப் பின்னும் அவசியம். உலாவி வருதலுக்கு மாலைப்பொழுதினும் காலைப்பொழுதே உத்தம காலம். சூரியன் அத்தமிக்கும் காலத்தைவிடப் பகற்காலத் தில் வேலை செய்தலே ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும்.

சிலம்பமுதல் மல்லயுத்தம் தேசிநடை கொள்ளின்
பலம்பரவு மெய்யிறுகும் பன்னத்—துலங்குபசி
உண்டாம் கபவாத மோடுவலி சூலையும்போம்.

யௌவன பருவத்தில் காளைகள்போல் ஆடியோடி உலாவா மல், எழுவதும் இருப்பதுமே மகாப் பிரயாசையாக இருப்ப

வர்கள், விகடமான மன்னூர்சுவாமி விக்கிரகங்களே. ஏன்? இவர்களை எடுக்கவும் பிடிக்கவும் உரமான ஆள்கள் வேண்டுமாகையால், இவர்கள் பாரமான சுமைகளே. உண்ட வுணவு ஜீரணியாமையால் இவர்கள் கட்டுச்சோற்று மூட்டைகளே. யாதொரு வினையு மின்றி எழுவா யுருபுகளாக இருக்கும் இவர்களைக் காரகவேதுவாக்கிப் பயனிலை கொடுத்து முடிவு காட்டாவிடின், நன்னூல் கற்றதனு லாய பயனென்? முத்தகமான இவர்களைக் குளகமாக்குதல் வேண்டும். உண்டுடுத்து எதிர்மறை வினையெச்சமான இவர்களை, உடன்பாட்டுத் தெரிநிலை நிகழ்கால எதிர்கால முற்றுவினையோடு முடிக்கவேண்டும். நிலைத்திணைப் பொருளான இவர்களை, இயங்குதிணைப் பொருள் ஆக்கவேண்டும்.

ஜீவனத்தின் பொருட்டு உழைப்பவர்களும், தேக சௌக்கியத்தின் பொருட்டு உழைப்பவர்களும், வயது தேகவலிமை முதலியவற்றிற்கு ஏற்ற அளவாக வன்றி, அதிகமாக உழைப்புக்கொள்வதும் கெடுதி விளைக்கும். கல்வி கற்பதும் நூல்கள் எழுதுவதும் விஷயசிந்தனை செய்வதும் வாதஞ்செய்வதுமான மனோவியாபாரமுள்ளவர்களும், மனத்தை மிகவும் வருத்தி உழைப்பதும் கெடுதியேயாகும். மன மொழிமெய்களால் செய்யும் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே விட்டொழிக. இந்தத் திரிகரணங்களில் ஆதியும் அந்தமும் இதரேதரம். இவ்விரண்டில், ஒன்று ஏறுபடியாயின், ஒன்று இறங்குபடியாம். இவ்விரண்டையும், ஏறுமாறின்றி இணைத்துப் பிணைப்பவர்களே, எண்ணிய இலக்கை எளிதின் எய்துவோராவர். ஏனையோர் வின்னூண் அற்றவராவர். வாயால் மொழிதலான தொழிலையும் மிதமாகவே செய்க. 'மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்றாது.'

'அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்.' 'அன்னமயம் பிராணமயம்.' 'ஊணற்றபோதே உடலற்றுப்போம்.' 'மண்டவன் உரஞ்செய்வான்.' 'உண்டார்மேனி கண்டால் தெரியும்.' 'ஊணினால் புத்தி (பூணினால் சாதி.)'

உணவின் அளவு இவ்வளவு என நிறுதிட்டமாக உரைத்தலாகாது. அவரவர் கொள்ளுதலான உணவின் அளவு, அவரவர் உடலின் அளவுக்கும் உடலுரத்தின் அளவுக்கும் உழைப்

பின் அளவுக்கும் ஜீரணசக்தியின் அளவுக்கும் ஏற்றதாக இருக்கும். உண்ணும்போது, 'இன்னும் அவசியமில்லை. உண்ட இவ்வளவே போதும்' என்கிற உணர்ச்சி ஒவ்வொரு வருக்கும் இயல்பாக உண்டு. அவ்வுணர்ச்சியின் அளவாக உண்பதே மிதமான ஊண். அதுவே அவரவர்க்கு அவசிய மான அளவு. அவ்வளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷ மாகும். 'மீதூண் விரும்பேல்.' 'அன்னசுரணை அதிகமானால் அக்ஷரசுரணை குறையும்.' 'மட்டான போசனம் மனதுக்கு மகிழ்ச்சி.'

> தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
> நோயள வின்றிப் படும்.

அளவுக் கதிகமாக உண்பார்க்கு 'லங்கணம் பரமௌஷதம்.'

இங்ஙனம் அளவாக உண்ணுமிடத்தும், தேகவியல்பு கால வியல்புகளோடு மாறுகொள்ளாதனவும் சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளாதனவுமான உண்டிவகைகளையே உண் டல் வேண்டும். வைத்தியம் கொஞ்சமேனும் தெரியாதவர்கள் இல்லை. பகுத்தறி வெய்தும் வயதான பிறகு, இதை யெல்லாம் ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்தால் அறியலாம்.

> மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
> தற்றது போற்றி யுணின்.

இங்ஙனம் தேகவியல்பு முதலியவற்றோடு மாறுகொள்ளாத உணவை மிதமாக உண்பதே நீடியவாயுள் பெறுதற்கான உபாயமாம். 'பசித்தால் உண்க; தாக மெடுத்தால் தண்ணீர் குடிக்க' என்பர் ஆங்கிலேயர். 'ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய உண்ணோம்' என்பர் தேரையரும்.

ஜீரணசக்தி மிக்கவர்கள் நாள்தோறும் மும்முறை நான் முறை உண்பதோடு இடையில் சிற்றுண்டி கொள்ளுவர். ஜீரண சக்தியோடு தேகவுழைப்புள்ளவர்கள், இடைவேளைகளில் சிற் றுண்டி கொள்ளினும் கொள்ளாவிடினும், இரண்டுபோ துண் பதே தேகாரோக்கியத்துக்கு அனுகூல மாகும். தேரையரும் 'உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்' என்றனர்.

உழைத்தல் செய்தவுடனே உண்ணுதலும் உண்டவுடனே உழைத்தலும் ஆகா. உண்டபின் தாம்பூலம் தரித்தலால் உற்சாகம் ஜீரணவிருத்தி முதலான பல நன்மைகள் உண்டாவதாக நமது மருத்துவ நூல்கள் கூறுகின்றன. தாம்பூலம் தரிப்பது நமது தேசாசாரம். 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்......' என வருவதுங் காண்க. உண்டபின் அல்லது, இடைவேளைகளில் தம்பலந் தின்பது கூடாது. 'ஊண்பாக் கொழிய வீண்பாக் காகாது.'

தாகம் என்பது தமிழில் நீர்வேட்கை எனப்படும். இது எல்லார்க்கும் இயல்பு. நீர்வேட்கையை வேறொன்றால் தீர்ப்பது ஆகாது. சிலர் நீர்வேட்கையை அடக்க மதுபானம் செய்கின்ற துராசாரத்தை மேற்கொள்கின்றனர். 'எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.' மதுபானம் சீதள மித மண்டல தேசாசாரம். அம்மண்டலத்தவரும் அதனை அமிதமாகக் கொள்வதை அநாசாரமாகக் கொள்கின்றனர். அவர்களுள்ளும் பலர் இப்பொழுது அதனை முற்றும் கடிபவ ராகின்றனர்.

புலி சிங்கம் முதலிய சில வனவிலங்குகள் மாத்திரமே, புதர் குகை முதலிய இடங்களில் பகலில் ஒளித்துறைந்து உறங்கியிருந்து, இரவில் இரைதேடப் புறப்படுகின்றன. பகற்குருடான கூகை முதலிய சில பக்ஷிகளும், பாழ்ம்பொந்துகளில் தங்கியிருந்து, இரைகொள்ள இரவில் வெளிப்படுகின்றன. மாலையானால், பக்ஷிகளெல்லாம் கூடுபுக் கடைகின்றன: வனவிலங்குகள் ஓரிடம் அடைந்து உறங்குகின்றன. சில விருக்ஷங்களும் இலையோடு இலை குவிந்து உறங்குவன போல்கின்றன. அதனால், விருக்ஷங்களில் ஓரின மரம், தூங்குமூஞ்சிமரம் என்றே பெயர் பெறுகின்றது கள்வர் காவலாளர் முதலிய சிற்சிலர் தவிர, மன்பதைகளும் இரவில் உண்டபின் உறங்கிவிடுகின்றனர். குக்ஷிபாதையின் பொருட்டுப் பகலில் உழைப்பதும், அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில் உறங்குவதும், பொதுவில் ஜீவவர்க்கங்களின் பிரகிர்தியாக இரா நின்றது. யாதொரு அவசர நிமித்தமாக ஓரிரா முழுவதும் விழித்திருந்தவர்கள், மறுநாளில் தாங்கள் வழக்கமாகச் செய்யும் தொழிலைச்செய்ய இயலாமல் இடர்ப்படுவது இயல்பு. சில தேசங்களில் சில குற்றங்களுக்குக் கண்ணிரப்பையைச்

சேதித்துவிடுகிற தண்டம் விதிக்கப்படுகின்றது. அவ்வித தண்டம் பெற்றவர் உறக்கம்பிடியாமல் சிலநாளில் மரணம் அடைகின்றனர். இடையிடையில் ஆறவிடாமல், எந்நேரமும் இயக்கப்படும் இயந்திரங்கள், விரைவில் பழுதடைந்து பய னற்றனவாகின்றன. ஆகவே, இளைப்பாறி அயர்ந்து நித்திரை செய்வது, ஜீவவர்க்கங்கள் அனைத்திற்கும் அவசியம் என்பது தெளிவு. பகலில் தொழில் செய்து உழைக்கும்போது சில தாதுக்கள் தேய்தலாய்க் கழிகடை யாகின்றன. அவை, இரவில் நாம் அயர்ந்து நித்திரைசெய்கையில், இரத்த வோட்டத்தினால் மறுபடியும் சரிவர நிரம்பி, மறுநாள் தேக உழைப்பிற்கு ஏற்றன வாகின்றன. உற்றுநோக்கின், உறக்கமே, உழைத்துப் பழுதுற்ற உடலைச் சீர்செய்யும் சிற்பி: அன்றுடம் மரித்தலான தாதுக்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவி: உழைப்பால் வந்த அயர்ச்சியைப் போக்கும் உத்தம பரிகாரி: வாடிய மேனியை மாற்றேற்றி மினுக்கிக்காட்டும் பரிசனவேதி. இரவைப் பகலாக்கும் மாணுக்கர்க்கு, உறக்கமே பகலை இரவாக்கிக் கொடுக்கும் மாந்திரிகன்.

உறக்கத்துக்கு உரிய காலம் இரவே. 'உறங்குவ திராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்' என்றூர் தேரையர். பகலிலுறங்குவது நோய்க்கிடம். 'பகல் வளரார் நோயின்மை வேண்டுபவர்.' இரவிலும் அர்த்தஜாமம் உறக்கத்துக்கு மிகவும் இன்றியமையாதது. 'சேமம் புகினும் சாமத் துறங்கு'. நள்ளிரவுக்குப் பின்னுல் இரண்டு நாழிகை உறங்குவதினும் நள்ளிரவுக்கு முன்னுல் ஒரு நாழிகை உறங்குவது உத்தமம் என்றது ஓர் இங்க்லிஷ் பழமொழி.

அதிகமாக உறங்குவதும், சோம்பலுக்கும் அதனுலுளவாகின்ற குற்றங்களுக்கும் நோய்களுக்கும் காரணமாகும். அதனுலன்றே 'அனந்தலாடேல்' என்றூர் ஔவையார். 'கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும் தோற்று முனக்குப் பெருந்துயில்தான் தந்தானே, ஆற்ற வனந்தலுடையாய்' என்றவாறு, வேண்டிய அளவுக்கு அதிகமாக உறங்குகின்றவர்களை, நம்மவர்கள் மூதேவிக்கு உறைவிடமாக உரைப்பர். உறங்கும் அளவானது, அவரவருடைய தேகநிலைமைக் கேற்றதாயினும்,

சராசரியில் ஏழுமணி நேரம் போதுமான தென்று சுகாதார நிபுணர்கள் உணர்த்துகின்றனர்.

'**பொ**ழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு எழுவதால் ஆரோக்கியமும் ஐசுவரியமும் மனத் தெளிவும் உண்டாகும்' என்றது ஓர் இங்க்லிஷ் பழமொழி. நமது மருத்துவ நூலும் அதிகாலையில் விழித்தெழுவதைக் குறித்து,

> புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
> சுத்த நரம்பினறற் றூய்மையுறும்—பித்தொழியும்
> தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
> காலைவிழிப் பின்குணத்தைக் காண்

என உரைக்கின்றது. 'வைகறைத் துயிலெழு' என்பது நாம் இளமையிற் கற்ற பழம்பாடம். ஒன்பது அல்லது பத்து மணிக்குப் படுத்துக்கொண்டால் நான்கு அல்லது ஐந்துமணிக்கு எழுதலாகும். அர்த்தராத்திரியில் விழித்துக்கொண்டு நெடுநேரம் தூக்கம் பிடியாமலிருப்பவர்கள், அதிகாலையில் விழித்தெழும் வழக்கத்தை அனுஷ்டிப்பாராயின், அங்ஙனம் நித்திரையின் இடையில் எழாமல் நல்ல நித்திரை செய்பவராவர். லௌகிக காரியங்களுக்கு உண்டாகிற இடையூறுகளாலும் வேறு மனக்கவலைகளாலும் உறக்கம் பிடியாதவர்கள், உறக்கத்தினிமித்தம், சாராய முதலிய லாகிரி வஸ்துக்களையும், பூரணாதி முதலிய லேகியங்களையும் உண்ணலாகாது. இயற்கையாய் உண்டாகிற நித்திரையே நன்மையைத் தரும். படுக்கும்போது, அன்றுடம் செய்த குற்ற நற்றங்களை ஆராய்ந்து பார்த்து, அன்றன்றளவில் அடைதலான நன்மையின் பொருட்டுக் கடவுளை நமஸ்கரித்து நிச்சிந்தையாகப் படுத்துறங்குவதே நன்மை.

வயிறு நிறைய உண்டபின்பு, உடனே படுத் துறங்குதலால், அமைதியின்மை முதலிய துர்க்குணங்கள் உண்டாகும். ஒன்றும் உண்ணாமல் பட்டினியாய் உறங்கப் புகுவதும் ஆகாது. கனவுகாண்டல் முதலியன இன்றி, மெய்ம்மறந்து உறங்குவதே நல்ல உறக்கம் ஆகும். பலபேர் படுக்கும் அறைகளிலும், மிகவும் தாழ்வான அறைகளிலும், காற்றுத் தாராளமாய்ப் பரவுதல் இல்லாத அறைகளிலும், ஓதமான தரையிலும், படுத்துறங்குதல் ஆகாது. நிலமட்டத்தில் அசுத்தவாயு

அளாவி யிருத்தலினுலே, கட்டிலின்மேல் படுத்துறங்குவதே உத்தமம். பலகணி முதலியவற்றின் மூலமாய்க் காற்று நேராக உடலின்மீது வீசும் இடத்தில் படுத்தல் ஆகாது. படுக்கை யறையில், மல்லிகை முதலிய புஷ்ப வகைகளும், மாரிகாலத்தில் கும்பிசட்டி முதலியவைகளும் இருத்தல் ஆகாது.

தேகாரோக்கியம் மாத்திரமே சௌக்கியத்துக்குப் போதியதன்று. உண்டிகொள்ளுதல், உறங்குதல், உழைத்தல் முதலியன செய்யும் சமயங்களில், மனச்சிந்தை யாதொன்றும் இன்றி உற்சாகங் கொண்டிருப்பது, நீடியவாயுள் பெறுவதற்கு அநுகூல மாகும். அழுக்காறு, சீற்றம், மனக்கவலை, அதிக ஆனந்தம், வெளியிடாத துக்கம் என்ருற் போன்றவை, ஆரோக்கியத்துக்கு இடையூறு தருதலால், இவற்றைக் கடிதல்வேண்டும். இவற்றுள் யாதொன்றினுலேனும் மூளை நரம்புகள் தாக்குண்டு கலங்கும்போது, சுவல்பமான ஒரு துன்பமும் பிரமாதமாகத் தோன்றும். இங்ஙனம் அமைதி கெடுதல் காரணமாகப் பல வியாதிகள் தொடரும். ஆகவே, தாதுபரீக்ஷையால் நோய் நிதானம் செய்கிற மருத்துவர்கள், ‘மனநோய்க்கு மருந்துண்டா?’ என விதிர்விதிர்ப்பர். ‘அழுதவனுக்கு ஆங்காரமில்லை.’ ‘மனக்கவலை பலக்குறைவு.’ ‘மன மயக்கம் ஸர்வ மயக்கம்.’

‘சமுசாரக் குட்டு வியாதி ரெட்டு’ என்றபடி, சமுசார சஞ்சலத்தினுலும், இராசிக தெய்விகமாக நேரிடும் துன்பங்களாலும் வயது நிரம்பு முன்னரே நரை திரை மூப்பு மேலிடும். ‘உமக்கு மிக்க வயதாகியும் நரையில்லையே’ என்ற சான்ருேரை நோக்கிப் பிசிராந்தையார்,

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்:
யான்கண் டனையரென் இளையரும். வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும். அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்ருேர் பலர்யான் வாழு மூரே

என்றனராம். வயிறுவளர்த்தற்குரிய லௌகிக காரியங்களைச் செய்து முடித்த பிறகு, தினந்தோறும் சற்றுநேரம் ஏதாவது விநோத வேடிக்கைகளில் கழிப்பது, மனதுக்கு ஆரோக்கியத்

தைக் கொடுக்கும். நல்ல சரித்திரங்கள் காவியங்கள் முதலிய வற்றைப் படிப்பது, மனதுக்கு உற்சாகத்தை விளைக்கும். இதனோடு ஸங்கீதம் கேட்பதும், உண்மை நண்பர்களோடு வார்த்தையாடி வம்பளப்பதும், எவ்வகைக் கவலைக்கும் பரமௌஷதம்.

ஜலதோஷம் தலைவலி வயிற்றுக்கடுப்பு வயிறுதள்ளுதல் முதலான சில சில்லறைவியாதிகளுக்கு, உண்டியில் காய்கறி கந்தமூலங்களை ஏற்றபெற்றி வேறுபடுத்திக்கொள்வதே தக்க பரிகாரம். அவரவரநுபவத்துக் கிசைந்தவாறு இங்ஙனம் வேறுபடுத்திக்கொள்வது கஷ்டமன்று. அசாதாரணமான யாதொரு வியாதியின் குறி தேகத்திற் காணப்பட்டால், அது முற்றுகிறவரையில் பராமரிக்கையாக இராமல், உடனே தக்க வைத்தியரைத் தேடுவதே நன்று. நோயை ஆரம்பத்திற் களையாமல் முற்றவிட்டுப் பரிகாரம் தேடுதல், முளையில் நகத்தால் கிள்ளிவிடுவதை முற்றவிட்டுக் கோடரிகொண்டு வெட்டுவதை ஒக்கும். நமது உடற்கூறறிந்தவரிடத்தில் சிகிச்சை செய்துகொள்வதே உத்தமம். கேவலம் ஏட்டுச்சுரைக்காயான வைத்தியரை நம்பாமல், சாஸ்திர ஞானத்தோடு அநுபவ முதிர்ச்சியுமுள்ள விருத்த வைத்தியரிடத்தில் சிகிச்சை செய்துகொள்வதே யுக்தமாகும். '(பால்ய ஜோசியம்) விருத்த வைத்தியம்' என்றது மூதுரை.

நோய்நாடி நோய்முத னாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

என்பது மருந்துவனுக்குரிய லக்ஷணம்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்.' இளமையில் தேசாசாரமாக ஏறிவிட்ட பழக்க வழக்கங்களைப் பிறகு மாற்றப் புகுவது எவ்விதத்திலும் கேட்டுக்கே ஏதுவாகும். தேசாசாரமான பழக்க வழக்கங்கள் அவ்வத் தேயத்தவருக்குக் காலாந்தரமான அநுபவ முதிர்ச்சியினால் ஏற்பட்டவை. ஒரு தேசத்திற்றானே அவ்வம் மாகாணத்தின் சீதோஷ்ண நிலைக்கும் தானிய தவச விளைவிற்கும் ஏனைச் சுற்றுச் சார்புகளுக்கும் ஏற்றவாறாகப் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. பாஞ்சால தேசத்தவருடைய உண்டியும் உடையும், சோழ

மண்டலத்திலும் பாண்டிமண்டலத்திலும் வசிப்பவர்களுக்குப் பொருந்துமா? மலையாளிகளுடைய நடையுடை பாவனைகள், வங்காள வாசிகளுக்கு ஏற்குமா? 'அரசன் வழிப்பட்டது அவனி,' 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்பது உண்மையே. ஆயினும் உஷ்ண மண்டலத்தில் வசிக்கின்ற நாம், உத்தர பரிமித மண்டல வாசிகளான நமது துரைத் தனத்தாரது நடையுடை பாவனைகள் அனைத்தையும் ஒரு தலைமுறையில் அப்படியே மேற்கொள்வது, யுக்த மாகுமா? அவற்றில் யாதொரு கெடுதியு மில்லாமல் நன்மை தருவன வான சில்வற்றை மாத்திரம், வேண்டுமானல், தற்கால நாகரிக நிலைமைக் கேற்ப மேற்கொள்வது உசிதமாகும். தங்கள் தங் கள் வீட்டில் பாரம்பரியமாக அநுசரித்துவரும் ஆசாரங்களை யும், திடும்பிரவேசமாக மாற்றுதல் கூடாது. காலத்துக்கேற்ற கோலமாகவும், ஜீவனோபாய வேறுபாடுகளுக் கியையவும், உண்டி உடை முதலியவைகளை அவசியமானல் நாளடைவில் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்க தேசாசாரமான உண்டி உடைகளை மாற்றிக்கொள்வதனல் நாம் நாகரிக முடையவ ராக மதிக்கப்படுவோம், நமது தேகாரோக்கியம் விருத்தியா கும் என நினைத்து, மாறுவேஷங் கொள்வது, நாடகதாரிகளுக் குரிய வேஷமே யாகும்.

சிலர் தங்கள் ஆரோக்கியத்துக்குப் போதிய அளவு கவ னம் செலுத்துவதில்லை. சிலர், வடக்கே நோக்கியிருக்கும் காந்த ஊசிபோன்று, அதே நினைவாக இருப்பார். இவ் விரு திறவர் செய்கையும் ஒன்றற்கொன்று முரண்பாடுடையன வேனும், இவ்விரண்டும் கேட்டைத் தருவனவேயாம். சுகா தார விதிகளை ஒரு சிறிதும் அநுசரியாமல் பராமரிக்கையா யிருப்பவர்கள், 'உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பருமை, அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பனருமை' என்பதாக, உடலில் ஏதாவது பிரமாதமான வியாதி உண்டான பிறகே, 'என் செய்தோம்? என்னுற்ருேம்? மருந்தெங்கே? மருத்து வன் எங்கே?' என நாடுவர். 'நோய்க் கிடங்கொடேல் என் பதை மறந்து, நோய் வந்தபின் வைத்தியரையும் சுகாதார சாஸ்திரத்தையும் தேடுவது, 'கண் கெட்டபின் சூரிய நமஸ் காரம்' செய்வதை ஒக்கும்.

ஆரோக்கியமே நினைவாக இருப்பவர்கள், சந்தைவிலை வேறுபடுவதைக் கண்டு நடுங்கும் வர்த்தகர்போல், காலநிலை வேறுபடுவதைக் கண்டு நடுங்குவர். இவர்கள், 'உட்டினம் உடலை உருக்கிவிடுமோ ? சீதளம் ஜலதோஷத்தை வரவழைக் குமோ ?' என்றஞ்சி, வாயுவின் சீதோஷ்ண நிலைமைக் கேற்ற வாறு, அப்போதைக்கப்போது, உடைவகைகளையும் உண்டி வகைகளையும் மாற்றிக்கொண்டிருப்பர் : உண்ணும் அளவும் உறங்கும் அளவும், காணி மாகாணியும் ஏறுமல் குறையா மல், இயந்திரம்போன் றியங்குவர். இவர்கள் தின்னாத கடைச்சரக்கு மருந்தில்லை : இவர்க ளறியாத கோரக்கர் வைத்தியமும் இல்லை. ஆரோக்கியமான தேகநிலைமையில் செய்யலான சற்காரிய சிந்தனை யாதொன்றும் இன்றிச் சரீர சுகமே பிரதான நினைவாக இருப்பதால், இவர்கள் செய்கை விரும்பற் பாலதும் அநுசரித்தற் பாலதும் அன்று. பசி தாகம் சீதோஷ்ணம் முதலியவற்றைக் காலத்துக் கேற்றவாறு தாங்கத்தக்க உடலின் தன்மையைக் கெடுத்துக்கொண்டு, இவர்கள் தொட்டாற்சுருங்கியும் நின்றுற்சுருங்கியும் ஆதலால், இவர்களிடம் வியாதி தொடர்வது வெகு சுலபம் : அதை ஓட்டுவது வெகு துர்லபம்.

அறநெறியில் நின்று பொருளீட்டி இன்ப நுகர்ந்து வீடடைதற்குக் கருவியாயிருப்பது சரீரம் ஆகையால், ஆயுள் பரியந்தம் யாவரும் நோய்க் கிடங்கொடாமல் தங்கள் தங்கள் சரீரத்தைப் பாதுகாப்பது கடமை. சரீரத்தை ஆரோக்கிய மாகப் பாதுகாக்கு முறைகளை ஒவ்வொருவரும் அறியவேண் டும். முதலில் அம்முறைகளை நாளடைவில் அநுட்டித்து வரல் வேண்டும். முதலில் அம்முறைகளை அநுட்டிப்பது பிரயாசமாகத் தோன்றும் : அநுட்டானத்தில் வந்துவிட்ட பிறகு யாதொரு பிரயாசமு மின்றி இயல்பாகிவிடும்.

செல்வம்

செல்வம்.

1. பொருளீட்டுதல்
2. தொழின் முயற்சி
3. செலவு—தருமம்—சேர்த்தல்
4. வரவுக்கேற்ற செலவு
5. வரவு செலவு கணக்கு
6. செலவுகளை வரையறுத்தல்
7. வீண் செலவு
8. டாம்பிகம்
9. குடி
10. வரவுக்கு மேற்பட்ட செலவு
11. மிச்சம் பிடித்தல்
12. எய்ப்பில் வைப்பு
13. ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை
14. பணப்பேய்
15. தக்க நோக்கத்துடன் பொருள் சேர்த்தல்
16. சுவதந்தரம்
17. தருமம்
18. பொது நன்மை
19. சில் தர்மிஷ்டர்கள்
20. ஏற்பவர்
21. திருப்தி

செல்வம்.

நால்வர் கூடி வார்த்தை சொல்லியிருக்கு மிடத்தில், அவருள் சிலரறியாத வேற்று மனிதன் ஒருவன் வருவானு யின், அவனைக் கண்டவளவில், அவனை அறியாதவர்கள் அவ னைப் பற்றிக் கேட்கும் முதற்கேள்வி யாவது, 'அவர் யார்? அவருக்கு ஜீவனோபாயம் என்ன?' என்பதே. இது சர்வ ஜன சாதாரணமாக இருக்கின்றது. 'உத்தியோகம் புருஷ லக்ஷணம்.' சோறுண்ணும் ஒவ்வொருவனும் சோம்பித் திரி யாமல் உழைத்தல் வேண்டும். பொருளைச் செலவழிக்கின்ற வன் அப்பொருளைத் தேடுதல் வேண்டும். தோட்டிபோலு ழைத்துத் துரைபோல் சாப்பிடவேண்டும்.

ஈட்டலும் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடிற் றுன்பம் கெடிற்றுன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

என்பது ஒரு ஜைந சந்நியாசியின் வார்த்தை.

நம்மைவிட்டுச்
செல்வமென் றுறுவதற்கும் செல்வமென் றுறும்பேர் நன்று

என்பதும்,

பொருவறு பந்த மெல்லாம் புணர்த்திடும்; தெய்வ சிந்தை
ஒருவமே விட்டு நிற்கும்; உறக்கமும் இறக்கச் செய்யும்;
கருவினுட் புகுத்தும்; இன்ன கரிசுகண் டதனு லன்றோ,
இருநிலத் திடைவெ றுக்கை என்மனூர் புலமை சான்றோர்

என்பதும்,

முறைதவிர் கொடுங்கோன் மன்னர் முனிவிற்கு நனியும் அச்சம்,
கறைகெழு களவு செய்வார் கரத்திற்கும் அழற்கும் அச்சம்;
மறைவறு தாய மாக்கள் வெளவுவர் என்றும் அச்சம்;
அறைபொருள் பெற்று ரல்லர் அச்சமே பெற்றூர் போலும்

என்பதும், புராண வைராக்கியம். 'பணம் என்றால் பிணமும் எழுந்திருக்கும்.' 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்.' 'பொருளுள்ளோர்க்குப் பூலோகம் (அருளுள்ளோர்க்கு அந்த லோகம்).' 'பொருளில்லார்க்கு அருளில்லை.' பாசமற்ற பரதேசியானவரும் 'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்' என்றார். 'பணம் என்ன செய்யும்? பத்து விதமும் செய்யும்.' 'பண முண்டானால் மண முண்டு.'

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையும் எய்தும்.

'கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.' 'இல்லாதவனோ பொல்லாதவனோ?' 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.' 'கைப்பொரு ளற்றால் கட்டுக்கழுத்தியும் பாராள்.' 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.' இன்பமும் புண்ணியமும் கீர்த்தியும் உறவும் நினைத்தது முடித்தலும் யாருக்குண்டு? திரளாகப் பணம் குவித்தவர்களுக்கே உண்டு. இல்லாதவர்கள் உலகத்திலே நடைப்பிணம் ஆவார்கள். ஆதலால் யாவரும் செல்வத்தை இடையறு முயற்சியோடு வருந்தித் தேடல் வேண்டும்.

பாடில்லாமற் பலனில்லை. புத்திசாலிகள் அருமையான காரியங்களைச் செய்வார்கள். பெருமையும் சிறுமையும் அவரவராலேயே வரும். 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.'

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

யாதொன்று சம்பாதிப்ப தருமையோ அதைச் சம்பாதித்தல் வேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்றல் வேண்டும். காப்பாற்றினதை விர்த்தி பண்ணல் வேண்டும். விர்த்தி பண்ணினதைத் தானும் அநுபவித்து உத்தமபாத்திரத்தில் செலவழித்தல் வேண்டும். ஏனென்றால், காப்பாற்றாத திரவியம் நாசமாகும். விர்த்திபண்ணாதது குறையும். தானும் அநுபவித்துச் சற்பாத்திரத்தில் செலவழியாதது வீணாகும். பொருள் வரும் வழிகளாவன, வேளாண்மை சிற்பம் வாணிகம் கைத்தொழில் வித்தைகற்பித்தல் இராசசேவை நியாயவாதம் நல்ல நூல்களையும் உரைகளையு மியற்றுதல் முதலாயின.

யாதொரு வழியால் பொருள் தேடுமிடத்துத் தருமநெறியாலே தேடுதல் வேண்டும். களவு பொய்ச்சான்றுரைத்தல் பொய் வழக்கு பொய்ப்பத்திரம் விசுவாசகாதம் பரிதானம் வாங்குதல் முதலிய பாவ நெறியால் பொருள்தேட லாகாது. பாவ நெறியால் வந்த பொருளானது தீராத வசை இராச தண்டம் மனக்கவலை முதலிய தீமைகளைத் தரும். ஏதேனும் ஒரு தொழில் செய்து ஜீவனம் பண்ணத் திறனுடையவர்கள், அது செய்யாது, தாயப்பொருளைக்கொண்டும், மனைவியருடைய ஸ்ரீதனத்தைக்கொண்டும், அவ்விரண்டும் இல்லையாயின் யாசித்தும் சீவிப்பது, மான மின்மையேயாம். அறிவும் ஆண்மையும் மானமும் உடையவர்கள் எக்காலும் இது செய்யார். 'தேடாதழிக்கிற் பாடாய் முடியும்.' 'போனக மென்பது தானுழந் துண்டல்.' கூழே யாயினும் தமது தொழின்முயற்சியாலே கிடைத்தது அமிர்தமே யாகும். சுவதேசத்தில் தொழின் முயற்சிகள் பலிக்காவிடின், தேசாந்தரம் சென்றும் தாமே வருந்திச் சம்பாதித்து ஜீவனஞ் செய்தலே மனிதர்க்கு அழகு. 'பழையது மிகுந்த இடம் காணியாட்சி.' ஆகையால், 'திரைகட லோடியும் திரவியம் தேடு.'

அப்போதைக் கப்போது நாம் தேடும் பொருளை நான்கு பாகமாகப் பகுத்து, அவைகளுள் இரண்டு பாகத்தை நமது அநுபவத்துக்குச் செலவிட்டு, ஒரு பாகத்தைச் சேர்த்து வைத்து, மற்றதைக் கொண்டு தருமம் செய்தல் வேண்டும் என நமது நூல்கள் வரையறுத் திருக்கின்றன. 'வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்' என்றது இக்கருத்துப் பற்றியே. ஆயினும் இவ்விதியைத் தவறாமல் அங்ஙனமே கடைப்பிடித்து நடப்பது லௌகிகத்தில் கஷ்டசாத்திய மாகும். எவ்வித அளவாக வாயினும் பகுத்துச் செலவிடுவதும் சேர்ப்பதும் தருமஞ்செய்வதும் மனிதனைப் பொறுத்த கடமை.

நமது அநுபவத்தின் பொருட்டுச் செலவிடுவதில், நாம் தேடும் பொருள் முழுவதையும் எவ்வாற்றானும் அழித்தலாகாது. வருவாயின் அளவிலும் செலவின் அளவு சுருங்குதல் வேண்டும். அது இயலாதாயின் வரவுக் கொப்பவாயினும் செலவிடுதல் வேண்டும்.

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு.

எவனிடத்தில் வருவாயிற் செலவு மிகுமோ, அவன் வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இல்லாமற் கெடும்.

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

'அளகேச னானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்.'

வரவு செலவு கணக்கு அப்பொழு தப்பொழுது எழுதுதல் வேண்டும். எல்லா அமிசங்களையும் பன்னிப்பன்னி எழுதவேண்டு மென்கிற அவசியம் இல்லை. வந்த வரவு எவ்வளவு? வாங்கவேண்டிய பண்டங்களின் விலை எவ்வளவு? இன்னும் என்னென்ன செலவுகள் நேரிட் டிருக்கின்றன? என்னென்ன செலவுகள் நேரிடுவதாக இருக்கின்றன? அவை அத்தனையும் அவசியமான செலவுகள் தானா? இவைகளை ஒருவாறாக அறிதல் வேண்டும். வந்த வருமானம் இவ்வளவு, செலவழிந்த மொத்தம் இவ்வளவு என்று அப்போதைக் கப்போது எச்சரிக்கையாகப் பார்த்து வருபவன் ஆராதாரித்தனமாகச் செலவிடமாட்டான். பாங்கு பரிசனை யறிந்து குடும்ப பாரத்தை நிர்வகிப்பவர் தமது வருவாயில் பாதிக்கதிகம் செலவிடல் ஆகாது. தனிகராக விரும்புவோர் மூன்றிலொரு பங்கில் தமது செலவுகளை அடக்கவேண்டும் என்பது யுரோபியரில் அநுபவமுதிர்ச்சி உடையவர்களது கொள்கை.

மிதமான வருமானம் உள்ளவர்கள், உயர்ந்த உடுப்பு உடுத்தால், அன்னப்பிடி வெல்லப்பிடி ஆகிவிடும். 'உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு.' இவர்கள் போக்கியமான உணவை உண்ண விரும்பினால், சாதாரண உடை உடுப்பதும் கஷ்டமாகும். ஐசுவரியவான்களும், பலவிதத்திலும் கங்கு கரையின்றிச் செலவு செய்துவந்தால், விரைவிலே ஊதாரிகளாய் அழிவர். எப்படிப் பட்டவர்களும் அததற்குரிய செலவைத் தங்கள் வருமானத்துக்கும் இருப்பிற்கும் ஏற்ற

வாறுக வரையறுத்துக் கொள்ளவேண்டும். ஓரொரு சமயம் ஏதாயினும் ஒரு வழியில் செலவு மிகுவதாயின், மற்றொரு வழியில் நேர்தலான செலவைக் குறைத்தல் வேண்டும். 'குந்தித் தின்றால் குன்று மாளும்' ஆகையால், தனிகரானவரும் கலியாணம் முதலான விசேஷங்களில், தங்கள் நிலைமைக்கும் இருப்புக்கும் ஏற்றவாறு செலவைச் சிறிது தளரவிட்டாலும், மற்றை வாலாயமான செலவுகளை வரையறைப்படுத்தியே வைத்திருக்கவேண்டும். இன்னதற்கு இவ்வளவென்று செலவு ஏற்பட்டுவிட்டால், பின்பு அதைக் குறைப்பது இலகுவாய் இயலாது.

'உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை. ஆகையால் கையிருப்பாக ஒரு பண்டம் இருக்கும்போதே மேலுமேலும் வாங்குத லாகாது. அது செலவாகி முட்டுற்ற பின்னர் வாங்குவதே நலம். அப்போதுதான் அதன் அருமை விளங்கி, அதனைத் திட்டமாகக் கையாளும் வழக்கம் உண்டாகும். யாதொரு பண்டம் மலிவாக இருக்கிறதே, எப்படியும் கையில் பொருள் இருக்கிறதே என்று, அந்தப் பண்டத்தை வாங்கவேண்டா. பார்த்த பார்த்த பண்டங்களையெல்லாம் வாங்க விரும்புவது கேவலம் குழந்தைகளின் இயற்கை. இன்றியமையாதவை நீங்க, ஏனையவற்றை வாங்குவது, வீண் செலவே. இவ்வகைச் செலவு, உப்பின் குவியலிற் படிந்த நீருக்குச் சமானம்.

பண்டங்களைப் பாழாக்காமல், வீண்செலவு செய்யாமல், செய்த மட்டில் சீருஞ்செட்டு மாகச் செய்யும் குடித்தனப் பாங்கைக் கண்டு எல்லோரும் நன்குமதித்து மெச்சுவர். உள்ளபடி தமக்குள்ள நிலைமையைப் பின்னும் பெரிதாக ஊரிலுள்ளவர் மெச்சுமாறு, கூழ் குடித்தும் பன்னீர் கொப்புளிக்கின்ற வீணர்கள் விருதுக்கு வேட்டையாடுவோரா்வர். உத்தியோகத்துக்குத் தக்க சுகம் தேடாமல், காலத்துக் கேற்ற கோலங் கொள்ளாமல், குடுமிக் கேற்ற கொண்டை போடாமல், வீம்புக்கு வேடங்கொண்டு வீண் விபரீதத்தால் பேதையர் வீண்செலவு செய்ய உடன்படுவர். இங்ஙனம் டால்டம்பாரம் போட்டுக்கொண்டு திரியும் டாம்பிகர்களுண்டாய கதி கடன்பட்டுக் கடைகெடுவதே ஆகும்.

இங்கிலாந்தில், கல்வி கற்று இராசசேவை இராணுவ சேவை முதலிய சேவை செய்வோரினும், இரும்புவேலை நெசவுவேலை முதலிய கைத்தொழில் செய்வோர், அதிகமாகப் பொருள் தேடியும், அநேகர், அப்பொருளில் பெரும் பாகத்தைச் சாராயத்திற் கரைத்துவிட்டுப் பஞ்ஞதிகளாகி, இருக்க இடமும் உண்ணச் சோறும் உடுக்கக் கந்தையும் இன்றி அலைகின்றனர். இந்து தேசத்திலும், இருப்புப்பாதை பஞ்சாலை முதலிய தொழிற்சாலைகளில் பல கூலியாள்கள் தினந்தோறும் இரண்டணு முதல் ஒன்றரைரூபா வரையில் பெறுகின்றனர். சகல கலாசாலைகளில் கல்வி கற்றுப் பட்டதாரிகளான அநேகர் இராச சேவையிலும் இதர சேவையிலும் பெறும் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாகப் பெற்றும், இக் கூலியாள்களில் அநேகர் குடிக்குக் கொத்தடிமைகளாய்ப் பெண்டிர் பிள்ளைகளைத் தெருவில் அலையவிடுகின்றனர். பட்டதாரிகளாய்ப் பெரிய உத்தியோகங்களை நிர்வகிப்பவர்களிலும் சிலர் (பலரென்றும் வதந்தி), சில காலமாய் இந்தக் குடியென்னும் அரசனுக்கு அடிமைகளாய், வரவுக்கு மேல் செலவு செய்து, கடனாளிகளாய் இடர்ப்படுவதும், கடன் கொடுக்க நிர்வாக மில்லையென்று நியாயஸ்தலத்தில் தாக்கல் செய்வதும், மான முள்ளவர் வைரத்தை இழைத்துக் குடித்து அகால மரணம் அடைவதும், நாணத்தை விளைவிக்கின்றன. ஆகவே கூலியாளர்களைப் பழிக்க நா எழுகின்றிலது. முன்னோர் சரியாகப் போனு லல்லவோ பின்னோர் சரியாகப் போகும்

வரவுக்கு மேற்பட்ட செலவு செய்யப் புகுவோர், களவு முதலிய பாவச் செய்கைகளைச் செய்யப் புகுவர்; அல்லது கடன்படத் தலைப்படுவர். கடன்படத் தலைப்பட்டவர், 'கடனோடு கடன், கதம்பப் பொடி காற்பணம்' என்று மேலு மேலும் கடன்வாங்கி, இதை எப்படித் தீர்க்கப்போகிறோம் என்றெண்ணுமல், கண்ணை மூடிக்கொண்டு செலவிடுவர். வரவு கொஞ்சமும் வலிப்பு மெத்தவுமாய்க் கடன்பட்டவர்கள், பின்னல் கடனைக் கொடுக்க வழியில்லாமல் கலக்க மடைவர். கடன் வாங்குகிறபோது இனிப்பு, கடன் கொடுக்கிற தென்றால் கசப்பு. கடன் வாங்குகிறவர் கடைத்தேற மாட்டார்.

மாமேறிக் கைவிட்டவனும் கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். ஆகையால் 'கடனில்லாச் சோறு கால் வயிறு போதும்.' எதிர்பாராத செலவு நேரிடுவதாயின், அது அவசிய மானதாக இருக்கிற பக்ஷத்தில், அதை எவ்விதத்திலும் நிர்வகிக்க வேண்டும். 'கடங்கொண்டும் செய்வார் கடன்.' அப்படிப்பட்ட தறுவாயிலும், கடன்படுவோமாயின், 'இதைத் தீர்த்தற்குப் பொருள் வரும் வழி உண்டா? இல்லையாயின், கடன்படாது நம்முடைய தாவர சங்கமப் பொருளிலே சிலவற்றை விற்றே செலவு செய்யலாமே' என்றிங்ஙனம் செம்மையாக ஆலோசித்து, எது செய்வது யுக்தமென்று தோன்றுகிறதோ அதனைச் செய்க. கடன்படுகிற வழக்கம் உண்டாகிவிட்டால் பின் அதனை ஒழிப்பது கஷ்டம். கடன்படக் கூசாதவர், பொய்யுரைக்கவும் பொய் வழக்குத் தொடுக்கவும் விசுவாசகாதஞ் செய்யவும் கூசார்: வழக்குத் தீர்ப்பிலே பரிதானம் வாங்கவும் களவு கொலைகளைச் செய்யவும் கூசார். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித் தழைக்கும் தூது.

'அழகுக் கிட்டால் ஆபத்துக் குதவும்' என்றபடி, சில பூஷணங்களைத் தேடிவைத்தாலும், ஆபத்துக்கு அவை உதவியா யிருக்கும். வீடு வாயில் தோட்டம் துரவு நிலம் நீர் முதலியவைகளைத் தேடிவைத்தாலும், அவைகளால் வரும் வருமானம் அவ்வாபத்துக் காலத்துக்கு ஆதாரமாக இருக்கும். செலவுகளும் தான தருமங்களும் போக, வருவாயில் எஞ்சியதை இறுகப் பிடித்துச் சேர்த்துவைத்தால் மாத்திரமே, இவைகளைத் தேடுதல் முடியும். வரவுக்கு மிஞ்சின செலவு செய்யாமலும், வரவத்தனையுஞ் செலவழிக்காமலும் இருப்பவர்களே, ஏதாவது சேர்த்தல் கூடும். வரவத்தனையும் செலவழிப்பதே பெரும்பாலார்க்கு இயல்பாக இருக்கின்றது. கொஞ்சமாயினும் இறுகப்பிடித்துச் சேர்மானம் செய்கிற வழக்கத்தைக் கஷ்டப்பட்டாயினும் செய்துகொள்ளல் வேண்டும். வரவுக்குமேல் செலவிடுதலான துர்வழக்கத்தை ஒழிப்பதற்கு இதுவே உபாயம். (செலவுகாரனாகிய ஓர் உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன் கேட்டான். 'திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்?' என்று கேட்க, 'என் சம்பளத்தில் மாதந்

தோறும் சேர்த்துத் தருவேன்' என்றான். அதன்மேல் அந்தச் செல்வன் 'இதற்கு முன்னேதானே ஏன் அப்படிச் செய்து கொள்ளவில்லை?' என்ன, உத்தியோகஸ்தன் 'தெரியாமல் இருந்துவிட்டேன்' என்றான். அது கேட்டுச் செல்வன் 'ஆனால் நான் தெரிவிக்கிறேன். எப்படியெனில் கடன் தர மாட்டேன் போ' என்றான். அப்பால் உத்தியோகஸ்தன் பணம் சேர்க்கத் தொடங்கினான். இப்படிப்பட்ட செல்வர்களே வரவுக்கு அதிகமாக ஓடும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஏழைகளுக்கும் பரமோபகாரிகள்). வயது ஏறஏற, சமுசார பாரம் வெகுவாய்ப் பலத்துவரும். சமுசாரம் பெருகும் போது அதற்கேற்ப வருமானமும் பெருகாவிட்டால், சமுசார பாரத்தை நிர்வகிப்பது மிகவும் கஷ்டமாகும். பிள்ளைகளுக்குக் கல்வியாவது வேறு வித்தையாவது கற்பித்தல் வேண்டும். பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு, பூஷணம் ஸ்ரீதனம் முதலியவைகளைத் தேடல் வேண்டும். பொருள் ஊறுநாளில் குருட்டுத்தனமாய் அதை வீணில் வாரி இறைத்துவிட்டால், பொருள் வரும்வழி தூர்ந்து போகும்போது, சமுசாரம் வாடி வதங்கிப்போகுமே. யாதொரு தொழிலாகிற வயலிலே, சோம்பலென்னும் களையைப் பிடுங்கி, ஊக்கமாகிய எருவிட்டு, உழைப்பென்னும் நீர் பாய்ச்சி, குடி சூது முதலிய பட்டிமாடுகள் மேயாமல், தனமாகிய தானியத்தை விளைத்தவர்கள், தருமமான கடமைகளை யிறுத்து, உண்டது போக எஞ்சியதைப் பாங்கியாகிய குதிரில் சேர்த்து வைக்காவிட்டால், கைவறட்சியான கருப்புக் காலத்தில் முதலாளிகளுக்குக் கொத்தடிமை குலவடிமையாகிப் பஞ்சுபடாத பாடும் படுதலாகுமே. வருவாயிற் சிறிது தொகையும் இறுகப் பிடியாமல் விடுபவர், இந்த இன்னல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். தங்கள் எதிரிலே காணப்படும் புதுப் பாடங்களையும், இறந்தகாலத்திற் கண்ட பழம் பாடங்களையும், பல முறையும் சிந்தித்து, அறிவு தெளிதல்வேண்டும்.

எறும்பானது கிடையாத காலத்துக்கு உதவுமாறு கிடைத்த காலத்தில் உணவிற்கு உரியவற்றைச் சேர்த்து வைத்துக் கொள்கின்றது. வெய்யிற் காலத்தில் பயிர்பச்சைகளுக்கு ஆகும்படி மாரி காலத்தில் ஏரி குளங்களை நீர் நிரப்பி வைத்

துக்கொள்ளுகிறோம். ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இராது. ஓடம் விட்ட ஆற்றிலும் அடி சுடும். ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கும் உண்டு. ஆகவே, மனிதனானவன், கார்காலத்தில் இன்புற்று வாழ்வதற்கு ஆவனவற்றைக் கோடைக்காலத்தில் தானே தேடி வைத்துக்கொள்ளவும், இரவில் சுகமாக உண்டுறங்குவதற் கின்றியமையாதனவற்றைப் பகற்காலத்தில் தானே சம்பாதித்து வைத்துக்கொள்ளவும், முதுமைப் பருவத்தில் முட்டுப்பா டின்றி உண்டு உயிர்வாழ்வதற்கு வேண்டுமவைகளை இளமைப் பருவத்தில்தானே ஈட்டி வைத்துக் கொள்ளவும், முயற்சிசெய்யக்கடவன். 'பொருடனைப் போற்றி வாழ்.'

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

வருமுன் காப்பவன் புத்தியை வந்தபின் காப்பவன் தள்ளினதுபோல், சிலர், என்ன சொன்னாலும் கேட்காமல், முன் பின் பாராமல், 'ஊதாரிக்குப் பொன் துரும்பு' என்றபடி, கையிற் கிடைத்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டு, எய்ப்பில் வைப்பின்றி இடர்ப்படுவர்: பிணியினாலேனும் முதுமையினாலேனும் வேறு இடையூறுகளாலேனும் பொருள் தேடும் வழி இல்லாத பொழுது, ஒரு காசு கிடைப்பது குதிரைக்கொம்பாகிப் பெண்டிர் பிள்ளைகளோடு இடருறுவர்.

கையில் ஒருகாசு மிகுந்திருக்கும்போது, இந்த ஒரு காசு எதற்காகும், இதனால் என்ன நன்மை உண்டாகப் போகிறது என்று அலக்ஷியமாக எண்ணி, அதை வீணிலே செலவழித்த லாகாது. ஒரு காசு பேணின், ஒரு காசு தேறும். தம்படி தம்படியாகச் சேர்ந்துதானே ரூபா ஆகும். பல துளி பெரு வெள்ளம் அல்லவா? அன்றன்று இரண்டணா சம்பாதிப்பவன், தம்படி தம்படியாகச் சேர்த்துவந்தால், ஒரு வருஷத்தில் அந்தச் சேர்மானம் ஒரு ரூபா பதினாலணா ஐந்து பை யாகும். தினந்தோறும் நாலணா சம்பாதிப்பவன், கால் காலணாவாகச் சேர்ப்பானானால், அவன் ஒரு வருஷத்தில் ஐந்து ரூபா பதினோரணா மூன்று பை சேர்க்கலாமே. தினந் தினம் அரை ரூபா சம்பாதிப்பவன், ஓர் அணா வீதமாகச் சேர்த்தால், ஒரு வருஷத்தில் இருபத்திரண்டு ரூபா பதின்

மூன்றணு சேர்க்கலாம். 'ஆயிர மாகாணி அறுபத்திரண்டரை' என்கிற கணக்கின்படி, அதாவது ஆயிரநாளில், அதாவது சுமார் இரண்டு வருஷம் ஒன்பது மாதத்தில், அவன் அறுபத்திரண்டரை ரூபா சேர்க்கலாம். இங்ஙனம் சேர்மானமாகிற தொகை வட்டி முதலியவற்றுல் விருத்தியாகிற பக்ஷத்தில், அவன் பத்துவருஷ காலத்தில் முந்நூறு ரூபாவுக்குக் குறையாத முதற்பொருள் உள்ளவ ஞகலாம். தினமானம் அரை ரூபா சம்பாதிப்பவனுக்கு இது எவ்வளவு சிறந்த முதற்பொருள். தபாற் சாலைகளில் பணஞ் சேர்க்கிற பாங்கி ஏற்படுத்தியிருக்கிறது. அதில் நாலணு முதல் எவ்வளவு வேண்டுமானுலும் கட்டிக்கொண்டு வரலாம். மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாவுக்குக் காலணு வீதமாக வட்டி கிடைக்கும். எழுநூற்றைம்பது ரூபா வரையில் அங்கே சேர்மானம் பண்ணலாம். இது ஏழைகளுக்கென்றே ஏற்பட்டிருக்கின்றது. அவசரமான செலவு நேரிட்டாலும், அவசியமான தொகையை வாரத்துக் கொருமுறை வாங்கிக்கொள்ளலாம். வாரத்துக் கொருமுறை நாலணு கட்டிக்கொண்டு வந்தால், சுவல்ப வருமான முள்ளவர்களும், ஒருவருஷ காலத்தில், வட்டி நீங்கலாகப் பதின்மூன்று ரூபா சேர்க்கலாமே. மெய்தான்: இவ்விதம் காலணு அரையணு வாகச் சில்லறை சில்லறையாகச் சேர்த்து, எக்காலத்திற் செல்வராகிறது என்று நினைக்க லாகாது. கொஞ்சம் வருகிறபோதே பொருள் சேர்க்கிற வழக்கம் இல்லாவிட்டால், அதிகம் வருகிறபோது அவ்வழக்கம் உண்டாகமாட்டாது. சீருஞ் செட்டுமாக வரவு செலவுகளை வரையறை செய்யும் குடித்தனப்பாங் கறியாது திடும்பிரவேசமாகச் செல்வம் பெற்ற வறிஞர்களுக்கு, அதை வைத்துப்படைக்க வழி தெரிகிறதில்லை. நிதியைக் கண்டநித்திய தரித்திரர்கள் செய்கை, நகைபிழை நாடக மாகவே முடியும். ஆகையால், சிறிது சிறிதாகச் சேர்த்து வழக்கப் பட்டவர்களுக்கே பணத்தின் அருமை தெரியும். அவர்களிடம் திடும்பிரவேசமாக வந்த செல்வமும் சீரழியாது நல்வழிப்படும்.

'பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்தது' போல், சிலர் பணஞ்சேர்க்கத் தொடங்கிப் பணப்பேய்களாக

முடிகின்றனர். அங்கத்தைக் கட்டியும் சிலர் தங்கத்தைச் சேர்ப்பவர் ஆகின்றனர். சிலர், 'தாக்ஷிணியம் தந நாசனம்' என்று கொண்டு, நிர்த்தாக்ஷிணியராகி, பணமே பெண்டிர், பணமே மக்கள், பணமே உறவு, பணமே நட்பு, பணமே மற்றும் முற்றுமாகி, ஊணும் உறக்கமும் ஒழித்து, தாமும் அநுபவியாமல், பிறரையும் அனுபவிக்கவொட்டாமல், உலோபிகளாகின்றனர். இவர்களிடத்தில் சேர்ந்த பணம், 'சமண சந்நியாசி கையில் அகப்பட்ட சீலைப்பேனும்,' 'நாய்பெற்ற தெங்கம் பழமும்' ஆகும். அப்பொருள் அவரிடம் இருப்பினென்: இராவிடினென்? பொருளைச் சேர்த்துவைத்தும்

> உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
> துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
> வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
> இழந்தானென் றெண்ணப் படும்.

இதற்கு 'உய்த்தீட்டும் தேனீக் கரி'. இறுதியில் பாவம் 'உண்ணுமல் தின்னுமல் ஊரம்பல மானேனே' என்று ஏங்கும்படி நேரும். 'உண்ணுச் சொத்து மண்ணுய்ப் போகும்.' மூவகை யாசையில் ஒன்றுன பணவாசையாகிய பேயைப் பரிஷ்காரமாக ஓட்டிவிடுதல் வேண்டும். அப்பேய் கோட்பட்டார்க்கு உய்வில்லை. 'பணமென்ன பாஷாணம்' எவருமில்லாத காட்டில் பணம் பசிக்காகுமா? அதை உரைத்துக் குடித்தால் தாகம் தீருமா? அது போகிற பிராணனை மீட்டுக் கொடுக்குமா? செலவிடுதலொழியப் பணத்தாலாகும் பயன் என்ன? செலவிட்டாலொழிய, அதனுலாகும் நன்மையைப் பெறுதல் இல்லையே. பணத்தைச் சேர்ப்பதெல்லாம், எய்ப்பினில் வைப்பாகும் பொருட்டன்றி வேறில்லை. ஆபத்து ரக்ஷகம் ஆகுமென்று சேர்த்த நிக்ஷேப தனத்தை அதற்காக்காமல் பூசிப்பவர், தங்கள் பணத்துக்குத் தாங்களே அடிமைகளாகிவிடுகின்றனர். இவர் செல்வம் எவர்க்கும் நன்றியில் செல்வமே. அது 'நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று.'

பொருளைச் சேர்த்துப் பெட்டியில் நிறைய வைத்துப் பார்க்கவேண்டும் என்கிற அவாவுடன் அதனைச் சேர்த்தல் ஆகாது. ஏதாவது ஒரு தகுந்த நோக்கத்துடன் மாத்திரமே

பொருளைச் சேர்த்தல் வேண்டும். எதிர்பாராத சில செலவுகள் அப்போதைக் கப்போது நேரிடுவது உண்டு. அவைகளின் பொருட்டு அவரவர்களுடைய வரவிற்கும் நிலைமைக்கும் ஏற்ப இயன்றவளவு சேர்த்துவைத்தல் வேண்டும். கட்டோடு போனால் கனத்தோடு வரலாமென்கிற விதமாகச் செல்வர்கள் வீட்டிற் பிள்ளைகளுக்குப் பெண்கொள்ளு நிமித்தம் வேண்டிய அளவு சேர்ப்பது ஒன்று. முதுமைப் பருவத்தில் வேண்டிய சௌகரியங்களுக்கு முட்டுப்படாம லிருப்பதற்கு அவசிய மான அளவு சேர்ப்பது ஒன்று. மக்களுக்குக் கல்வி கற்பிக்க வும் மணம் புரிவிக்கவும் அவர்களுக்கு வீடு வாயில் முதலிய சௌகரியங்களை ஏற்படுத்தவும் கொள்ளலான தொகையைச் சேர்ப்பது ஒன்று. வர்த்தக முதலியன செய்து மக்கள் உய்தற் குதவியாகும் மூலதனத்தைத் தேடிவைப்பது ஒன்று. தான் குடியிருக்கும் ஊரில் குறையான ஒரு காரியத்தைச் செய்து முடிப்பது உபகாரமாக இருக்குமென்று தோன்றினால், அதனை நிறைவேற்றுதற்கான முதற்பொருளைச் சேர்ப்பது ஒன்று. ஆயினும் அவ்வக்காலத்தில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் அத்தியாவசியமான சௌகரியங்களைத் தேடிக்கொள்ளாமல் உலோபஞ்செய்து இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென் றெண்ணிப் பணம் சேர்ப்பது குற்றம். பிள்ளைகளுக்குக் கல்வி நல்லொழுக்கம் ஜீவிக்குமுபாயம் முதலியவைகளைக் கற் பிக்காமல் செல்வத்தை மாத்திரம் சேர்த்து வைப்பது சீக்கிரத் தில் சீரழிந்துபோகும் நெறியை அவர்களுக்குக் கற்பித்தலே யாம். நாறல் வாயன் தேடவும் ஊத்தைவாயன் உண்ணவு மா? இங்ஙனம் நாறல் வாயன் தேடிவைத்தால், நாளைக்கு எவனாவது கற்பூரவாயன் கைக்கொள்வான்.

பிறரிடத்தில் கூலிவேலை செய்து இடர்ப்பட்டுப் பிழைப்ப வர்கள், தங்கள் வருமானத்தில் சிறிது நிலுவை பிடித்துச் சேர்த்துவந்தால், அச்சேர்மானத்தைக்கொண்டு தாங்கள் சில காலத்தில் சுவதந்தரராகித் தங்கள்மட்டிலே ஏதாவது ஒரு தொழின்முயற்சி செய்து ஜீவிக்கலாம். ஊதாரிகளான எச மானரிடத்தில் உத்தியோகம் செய்பவர் எத்தனைபேர், இங்ங னம் சுவதந்தரர்களாகிவிட, அவ்வெசமானர் பரதந்தரராவதை நாம் காண்கிறோம். 'என் வர்த்தகசாலையில் வேண்டுமள

வுக்கு அதிகமாகவே இலேககர்களும் மற்ற ஆள்களும் இருத்தலால் உன்னை வைத்துக்கொள்ள அவசியமில்லை' என்ற சாவகாரியின் வார்த்தையைக் கேட்டு மனம் புழுங்கித் தலை குனிந்து திரும்பிச் செல்கையில், கீழே விழுந்துகிடந்த ஒரு குண்டூசியைக் கண்டு, சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவுமாகையால் இந்த ஊசியும் ஓர் ஆபத்துக்கு உதவுமென்று அதை யெடுத்துத் தனது உடையில் செருகிக்கொண்ட லப்பீட் என்பவன், அதுவே வியாஜமாக அந்தச் சாவகாரியிடம் வேலையி லமர்ந்து, தனது உழைப்பினாலும் யோக்கியதையாலும் அவ்வர்த்தகசாலையில் மேன்மேலுயர்ந்து, தலைமை உத்தியோகஸ்தனாகி, கடைசியில் தான் சேர்த்துவந்த சேர்மானத்தின் உதவியால் வர்த்தகத்தில் பாகஸ்தனாய், அப்பால் தனியே ஒரு வர்த்தகசாலையும் ஏற்படுத்திக்கொண்டு, இறந்துபோன சாவகாரியின் மைந்தனுக்கு நன்றியறிவுடனே பொருளுதவியும் செய்துவந்தான்.

'தானமது விரும்பு.' 'தருமத்துக்குத் தாழ்ச்சி வாராது.' 'தருமமே தலைகாக்கும்.' 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.' 'ஈயாதார் வாழ்ந்தென்ன, இண்டஞ்செடி தழைத்தென்ன?' தொழில்செய்து சீவனம்பண்ணச் சக்தி யிருக்கவும் அது செய்யாத சோம்பேறிகளுக்கு யாதோருதவியும் செய்யலாகாது. குருடர் முடவர் முதலான அங்கவீனம் உள்ளவர்களுக்கு அவசியமான உதவிகளை இயன்றமட்டில் செய்ய வேண்டும். 'பாத்திர மறிந்து பிச்சையிடு (கோத்திர மறிந்து பெண்ணைக் கொடு).' ஒருவர் நமக்குச் செய்த நன்மைக்குப் பிரதியாக ஒரு நன்மை செய்வது உபகார மன்று. 'மாறீவார்க் கீதல் பொலிகட னென்னும் பெயர்த்து.' தன்னளவிலே முட்டுப்பாடுடையவன் தருமஞ்செய்வது இயலாது. 'தனக்குக் கண்டு தானம் வழங்கவேண்டும்.' தாய் தந்தையர் பொருளின்றி வருந்தாநிற்கத் தநயர்கள் ஏனையர்க்குத் தானஞ்செய்வது கிரமமாகாது. நம்முடைய உறவினரில் நொந்திருப்பார்க்கு உதவிசெய்யாமல் மற்றவர்க்கு உபகாரம் செய்வதும் பேதைமையே. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.' குடும்பச் செலவிற் குரியதுபோக, இங்ஙனம் உறவினர் முதலியோர்க்குச் செயக்கடவ கடப்பாடுகளைச் செய்து எஞ்சிய

பொருள், வறியார்க்கு ஈதற்குரியது. 'பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே' போவது நன்றே. பாழாய்ப் போகிறதைப் பசுவின் வாயிலிடுவது மாத்திரமே தரும மாகாது. தனது பதவிக்குரிய செலவுகளிலும், தனக்குரிய சௌகரியங்களிலும், அநாவசியமான சிலவற்றைக் குறைத்தாயினும், தான் கருதிய நன்மையை மனப்பூர்வமாய்ச் செய்வதே, தரும சிந்தையோடு செய்வதற்கு அறிகுறி.

நமது நூல்கள் வரையறுத்திருக்கும் தானவகை முப்பத்திரண்டில் சிலவற்றை, இக்காலத்தவர், ஏற்புடையனவாகக் கொள்ளார். அங்ஙனம் தள்ளுபடி ஆயின போக, ஏனையவற்றில் பல, வெகுஜன நன்மைக்கு உரியனவே. ஏழைகள் தங்களளவில் தனித்தனியாகவும் பலர் கூடி ஒருமிக்கவும், தேடிக் கொள்ள முடியாத நன்மைகளைத் தேடுவதே, செல்வர்கள் செய்தற்குரிய சிறந்த தானம். செல்வர்களும் தங்களளவில் தனித்தனியாக இப்படிப்பட்ட தானங்களைச் செய்து முடிக்க இயலாவிட்டால், பல செல்வர்கள் ஒருங்கு கூடி அவற்றை நிறைவேற்றுவது உசிதம். கல்விச்சாலை ஸ்தாபித்தல், தரும வைத்தியசாலை ஏற்படுத்தல், அநாத பிள்ளைகளைக் கல்வியுங் கைத்தொழிலுங் கற்பித்து வளர்த்துவிடுதல், திக்கற்ற விதவைகளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்தல், ஏழைகள் தீயொழுக்கத்தை விட்டு நல்வழியில் நடப்பதற்கான உபாயங்களைத் தேடுதல் என்பன போன்றனவே, இலக்ஷாதிகாரிகளும் கோடீசுவரர்களும் மேற்கொண்டு செய்யத்தக்க தருமங்கள்.

பொம்பாயில் வசிக்கும் பாரசீகர்களில் மிகவும் எளிய குடியில் பிறந்த ஜம்ஸெட்ஜீ ஜிஜிபாய் என்பவர், தமக்குக் கிடைத்த இரண்டு வெறுமையான குப்பிகளையே முதற்பொருளாகக் கொண்டு, குப்பி வியாபாரம் செய்து, குபேரசம்பத்துடையவராயினர். மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பெற்றவராயினும், இவர் வெளிப்படையாகச் செய்த தானதருமங்கள் மாத்திரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்டன. ஏழை பேழைகளுக்கு இவர் நேரிற்செய்த சாதாரண தருமங்களுக்கு இவ்வளவென்று கணக்கில்லை. கல்விச்சாலைகளைக் கட்டுவதும், அவை நன்கு நடத்தற்கான மூலதனத்தைக் கொடுப்பதும், தேவாலயங்களைப் பிரதிஷ்டை செய்து திரவிய சகாயஞ் செய்

வதும், தரும வைத்தியசாலை தருமசத்திர முதலியவற்றைக் கட்டிப் பரிபாலிப்பதும், புதிய பாதைகளை ஏற்படுத்துவதும், பாலம் கட்டுவிப்பதும், ஏரி குளங்களை வெட்டுவிப்பதும். ஆகிய பலவித தருமங்களைச் செய்தனர். இந்தியாவில் மாத்திரமே யன்றி, இதரமான தேச தேசாந்தரங்களிலும், தீவு தீவாந்தரங்களிலும், குடிகளின் கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்கவும், அமிதமான திரவிய சகாயம் செய்துவந்தனர். இவருடைய மனைவியாரும். இவற்றுக்கெல்லாம் இணங்கியிருந்ததுமன்றி, தம்முடைய செலவிலே சில பொது நன்மையான தருமங்களைச் செய்தனராம். காஞ்சீபுரம் பச்சையப்ப வள்ளலும், பி. டி. லி செங்கல்வராய நாயகரும், தேவாலயம், தரும சத்திரம், கல்விச்சாலை, அநாதபிள்ளைகள் பாடசாலை முதலியவைகளுக்கான சாசனங்களை எழுதிவைத்து, என்றுமழியாது நின்று நிலவுதலான புகழுடம்பை எய்தினர். இங்கிலண்டிலும் அமெரிக்காவிலும் சில தர்மிஷ்டர்கள் செய்துள்ள தானங்கள் புகழி லடங்குவன வல்ல.

தானங் கொடுப்பவர் இல்லையாயின் தானம் ஏற்பவரும் இலராவர். தானம் ஏற்பவர் இலராயின் தானம் கொடுப்பவரும் இலராவர். ஆயினும் உலகியல் அங்ஙனம் நடத்தல் இல்லை. 'அச்சையிலும் உண்டு பிச்சைக்காரன.' 'அளகாபுரியிலும் விறகுதலையன் உண்டு.' "யாதும், கொள்வாரிலாமைக் கொடுப்பார்களுமில்லை மாதோ" என்றும், "எல்லாருமெல்லாப் பெருஞ் செல்வமு மெய்தலாலே. இல்லாருமில்லை யுடையார்களுமில்லை மாதோ" என்றும், "என்று மில்லாதனவு மிரவே" என்றும் கூறுவனவெல்லாம் உயர்வுநவிற்சியணியே. கடப்பாடானவுப் புரவுகளை ஏற்றுக்கொள்வது இகழ்ச்சியாகாது. வறுமையால் 'ஏற்பதிகழ்ச்சியே' ஆயினும், எவரும் கசக்கி மோருதலாகாது. 'புண்ணியத்துக் குழுதமாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்த்த' லாகாது. கொடுப்பவர் திருப்தியாகக் கொடுத்ததை, ஏற்றுக்கொள்பவரும் அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு வந்தன பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லையே யென்று வருந்தலும் அருவருத்தலும் மடமை.

விசேஷ செல்வத்தால் இன்பமும் அஃதில்லாமையால் துன்பமும் உண்டாகும் என்பதில்லை. எவ்வளவு இருந்தும் அவா அடங்காதவர்கள் எளியரே. வருந்தித் தேடியது சிறிது பொருளேயாயினும், அதனாலாகக்கூடிய சௌகரியங்களைத் தேடிக்கொண்டு திருப்தியாக அமைந்திருப்பவர்களே, அஷ்டைசுவரியம் பெற்றவர்கள். 'போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து.'

நட்பு

நட்பு.

1. தோற்றுவாய்
2. நட்பின் திறம்
3. நன்னட்பும் தீநட்பும்
4. இயற்கை வாசனை—சேர்க்கை வாசனை
5. இளைஞரிணக்கம்
6. நட்பாராய்தல்
7. நட்பிற் பிழை பொறுத்தல்
8. நட்பால் விளையும் நன்மைகள்
    நண்பனிடம் இன்ப துன்பங்களை உரைத்துக் கொள்வது
    நண்பரிடம் உரைத்தலால் மனதிலுள்ள எண்ணங்கள் ஒழுங்கடைதல்
    உசாத்துணை
    ஒல்லுவ்வா யூன்றுநிலை
9. சிநேகபங்கம்
10. நட்பாட்சி

நட்பு.

சிங்கம் புலி முதலிய சில வனவிலங்குகளே தனித்துறை வன. பலர் ஒருமிக்க வாழ்வதே மானுடவியற்கை. ஆன்ம விசாரம் செய்யும் யோகியர்க்கே ஏகாந்தம் இனியதாகும். ஏனை விசாரம் செய்வாரும் ஒருசார் ஏகாந்தத்தை நாடுவர். மனித ரோடு மனிதர் கூடிவாழ்வதே மானுடவியற்கையாயினும், அன் பிலாவிடத்து அவ்வாழ்க்கையாற் பயனில்லை. நல்லாரோடு நட்புக்கொள்ளும் இயல்பிலான் தனித்தியங்கும் வனவிலங் கனையான். பலர் தம்மிடை அன்புடையராதல் கூடும். பலரும் தம்மிடை நட்புக் கோடல் இயலாது. ஒருவனைப் பலர் அறிந் திருத்தல் கூடும். அவரெல்லாம் அவனுக்கு அறிமுகமானவர் களே யன்றி நண்பினரல்லர். தாம் அவர் என்னும் வேற்றுமை யில்லாத இருவரிடத்தே இயைவதாகும் நட்பென்பது. '(அரு மற்றதே தாரம்:) ஊரிலொருவனே தோழன்.'

ஒருவரோ டொருவர் நட்பாதற்குக் காரணமாவன:— அவர் ஒரு தேயத்தராதலும், பலகாற் கண்டும் சொல்லாடியும் மருவுதலும், ஒத்த வுணர்ச்சிய ராதலுமாம். இவற்றுள் உணர்ச் சியொத்தலே சிறப்புடைத்து. தாம் அவர் என்னும் வேற்று மை யின்றி உணர்ச்சியொத்த இருவர்நட்பே உள்ளும் புறமும் ஒத்ததாம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

இவர் ஒருவரை யொருவர்

இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னு நட்ப

நன்னட்பால் உளதாகும் இன்பமும் தீநட்பால் உளதாகும் துன்பமும்

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்.—நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று

என்றவாறும். நன்னட்பால் உளதாகும் இன்பம்

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு

என்றபடி, ஒருகாலைக் கொருகால் மிகுவதாகும். 'சற்சனருறவு சர்க்கரைப்பாகு.'

கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே.—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

தீநட்பால் உளதாகும் இன்பம் ஒருகாலைக் கொருகால் குறைவதாகும். நன்னட்பு நாட்குநாள் வளரும்: தீநட்பு நாட்குநாள் தேய்த லாகும்.

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இங்ஙன மிருத்தலின் இணக்கமறிந் திணங்குதல் வேண்டும். ஆயினும் நன்னட்புக் குரியாரை அறிவது திரிபுடைத்து.

இற்பிறப் பெண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது,—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று.

ஆகவே,

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

ஏனெனின்,

நாடாது நட்டலிற் கேடில்லை. நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

அங்ஙனஞ் செய்வதில்,

> குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
> கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

நட்பியல் பில்லாரை எவ்வாற்றானும் ஒழித்தல் வேண்டும். 'பாம்புக்குப் பால் வார்த்தாலும் படுவிஷத்தையே கொடுக்கும்.' ஆயினும், பாம்பின் விஷம் பல்லளவே யாகும்: துற்சனருக்கோ அங்கமுழுதும் விடமேயாம். ஆதலின் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு'

> மருவுக மாசற்றார் கேண்மை. ஒன்றீத்தும்
> ஒருவுக ஒப்பிலார் நட்பு.

யானைக்கு எல்லா நன்மைகளையும் செய்யும் பாகன், ஒரு குற்றம் செய்வானாயின், அது, அவன் செய்த நன்மை அவ்வளவையும் மறந்து, குற்றம் ஒன்றனையே நினைவில் வைத்திருந்து, அற்றம் பார்த்து அவனைக் கொல்லும். அங்ஙனமின்றி, நாயானது, தனக்கு அன்ன மிட்டவன் தன்னைக் கொல்லவரினும், அவன் செய்த நன்றியையே பாராட்டி, அவனைக் கண்டு வாலைக் குழைக்கும்.

> யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
> கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்.

தீயினத்தால் வரும் குற்றம் ஸஹவாஸ தோஷம் எனப்படும். நண்பனுக்கு நண்பன் பரிசனவேதி.

> நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும். மாந்தர்க்
> கினத்தியல்ப தாகும் அறிவு.

அவரவருக்கு இயல்பில் உள்ள குணம் இயற்கை வாசனை என்றும், ஸஹவாஸத்தால் உண்டாகும் குணம் சேர்க்கை வாசனை என்றும் சொல்லப்படும். அவரவருடைய குண தோஷங்களை அவரவருடைய ஸஹவாஸத்தால் அறிதலாகும். ஒருவனை அறிய அவன் நண்பனே உரையாணி. அவரவர் தேடிக்கொள்ளும் நட்பும் அவரவர் இயற்கைக் கேற்றதாகவே இருக்கும். 'சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்.' 'சனத்தோடு சனஞ் சேரும்; சந்தனத்தோடு கர்ப்பூரஞ் சேரும்.' கிரீஸ் தேசத்திலிருந்த டை-

யோனிஸியஸ் என்னும் கொடியோன் ப்ளேடோ என்னும் பெரி யோரைத் தன்னிடம் அழைத்துவர ஆள் விடுத்தபோது, அவர் ' அறம் மறத்தினிடம் பொருந்துத லின்று. டையோனிஸியஸ் இடத்தில் ப்ளேடோ செல்வது தகாது ' என மறுமொழி கூறி விட்டனராம் ' தாட்டோட்டக்காரனைக் கூடுவதிலும் தனியே இருப்பது நலம்.' நல்லோர் தீயோரை நாடார் : அவரை அஞ்சு க்வும் அஞ்சுவர். இனம் தீதெனினும் நல்லறிவாளர் தம்மன வில் மனந்திரியார். இவரோடு மருவிய தீயினத்தர் பூவோடு சேர்ந்த நார் போல் மணம்பெறுவர். ' அறிவுடையாரை அடுத் தால் போதும்.'

இளைஞர் இனத்தை இளைஞர் நாடுவது இயற்கை. நல் லொழுக்கம் இல்லாத இளைஞரிடத்தில் பாவம் குடிகொள்ளும்; நன்மை யாதொன்றும் இருப்பதில்லை. அவர்களோடு கூடின இளைஞர் அக்கூட்டுறவின் பலனைப் பெறுதொழியார். ஒட்டு வியாதிக்கும் உய்தலாம் ; தீநட்புக்கொண்டவர்க்கு உய்வில்லை. ' அல்ப ஸஹவாஸம் ப்ராண ஸங்கடம் ' ' நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.' தனிகரான இளைஞரோடு வறியரான இளை ஞர் நட்புக்கொள்ளின், இச்சகம்பேசும் இழிந்த வழக்கம் மே விடுவ தாகும். இளமையிற் பழக்கம் இடுகாடு மட்டில் : அப் பால் அதனைக் கடியலாகாது. ஆகையால் பிள்ளைகளை இணக்க மறிந் திணக்குதலே பெற்றோர் மேற்கொள்ளத்தக்க முதன்மை யான பாலசிக்ஷை. இளைஞர் இணக்கமறிந் திணங்காவிடத்து, உவாத்தியான், பஞ்சதந்திரத்தில் தான் மித்திரபேதம் வல்ல ணய், பிள்ளைகளை இரண்டாவது தந்திரத்தில் நன்கு பயிற்றல் வேண்டும். இது செய்யகில்லாதவன் உவாத்திமைத் தொழிற்கு அருகன் ஆகான்.

ஒருவர் நமது நட்பை நாடியவிடத்து, நாம் யாதேனும் ஒரு தீக்கருமத்தில் அடியிடுவதாகப் போக்குக்காட்டுதல் வேண்டும். அங்ஙனம் செய்கையில் எவ்வாற்றானுயினும் அவர் அதினின் றும் நம்மை விலக்க முயல்கின்றனரா இலரா என்பதை யூகித் தறிக. இதனால் அவர் யாதொரு சுயநன்மையை நாடியே நமது நட்பை விரும்பினவரா அல்லரா என்பது புலப்படும். பிறகு, வெளியிட்டவிடத்தும் தீங்கு விளைதலில்லாத சில அந்தரங்க காரியங்களை அவரிடம் உணர்த்தி, அவற்றை அவர் வெளியிடு

வதையும் இடாமையையும் அயலவரால் அறிந்துகொள்க. இன்னோரன்ன ஆராய்ச்சிகளே நட்பியல்புடையாரை அறிந்து கொள்வதற் கான உபாயங்கள். இஃதன்றியும், 'ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை.' தனக்கென்று வைத்து யாதொரு பயனையும் விரும்பாமல் நட்புக் கொள்பவன் உத்தமன்.

ஒன்றும் பெறாத லிலரெனினும் உற்றபெ ருஞ்செல் வத்தினர்பால்
சென்று கொளுநட் புடையரெனத் தேயஞ் சொலற்கே சிலர்சூழ்வார்.

இங்ஙனம் நட்பவன் மத்திமன். யாதொரு பயனை விரும்பி அதன்பொருட்டே நட்பவன் அதமனாவான்.

கடையாயார் நட்பிற் கமுகனையர். ஏனை
இடையாயார் தெங்கி னனையர்.—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

இதனாலும் நட்பினர் திறம் இனிது விளங்கும்.

உண்மை நண்பர்கள் கருமமாயின செய்யுங்கால், நட்புரிமையாலே கேளாது செய்தலும், கெடும்வகை செய்தலும் தமக்கு வேண்டியன தாமே கோடலும் உண்டு. இங்ஙனம்

அழிவந்த செய்யினும் அன்பறார், அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அன்றியும்,

இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ?—நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

பொறுமை யின்றிப் பகைகொள்வதும் மீண்டும் கூடுவதும் ஆகின்ற நட்பு, நட்பினருடைய பெருமைக்குக் குறைவாகும். அந்நட்பிற்குத் திட்பமில்லை.

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றுந் துணையும் பொறுக்க. பொறானாயின்,
தூற்றாதே தூர விடல்.

மேலும்,

> இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
> நன்னயம் செய்து விடல்.

வேற்றுமை யின்றி நண்பரது இன்ப துன்பங்களைத் தம வாகக் கொள்ளும் உணர்ச்சியொத்த உண்மை நண்பினர்க்குத் தமது நட்பால் விளையும் நன்மைகள் பலவுள.

> சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
> மாரிபோன் மாண்ட பயத்ததாம்.

அவற்றுட் சில வருமாறு:—

இன்ப துன்பங்கள் மனத்தில் அடைபட்டுக் கிடப்பதும் ஒரு பிணியாம். 'மனக்கவலை பலக்குறைவு.' நீரடைப்பு முதலிய பிணிகட்கு ஆயுள்வேதியர் பரிகாரம் கூறுவர். 'மன நோய்க்கு மருந்தில்லை.' மனத்தில் அடைபட்டிருக்கும் இன்ப துன்பங்களை வெளிப்படுப்பதே மனநோய்க்குப் பரமௌஷதம். ஆயினும் அடைபட்டிருக்கும் இன்ப துன்பங்களை மனத்தினின்றும் வெளியிடுதற்கு ஒரு போக்குவீடு வேண்டும். அங்ஙனம் போக்குவீ டாகின்றவன் நண்பனே. உண்மை நண்பனிடத்தில் உள்ளத்தி லுள்ளதை உரைத்துக்கொள்வதனால் நன்மைகள் இரண்டு உளவாம். துன்பம் பாதியாம். உவகை ஒன்றிரண்டாம். உண்மை நண்பனே, தாயப்பொருட்கு வழக்கிடாமல், தானாகவே துன்பத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும் பங்காளி : உள்ளக் கவலையை ஏற்றுக்கொள்ளும் சுமைதாங்கி. உலகில் 'ஒன்றிரண்டாம் வாணிகமில்லை.' உண்மை நண்பனே ஒருவகையை இரண்டாக்க வல்ல வணிகன் : அஷ்டசித்தியிலும் அடங்காத இவ்வற்புதத்தைச் செய்ய வல்ல சித்தன். இதுபற்றியே யன்றோ, வேந்தர் முதலியோர் சிலர், சிலரை மிக மேம்பட்ட பதவியில் வைத்துத் தம்மோடு ஒப்பக் கொள்வது. துரியோதனன், சூதன் மகனை நட்புக் கொண்டு அங்கதேசத்துக்கு அதிபதி யாக்கினான். நந்தியென்னும் தொண்டைமான், ஒரு கம்மியனை அமைச்சனாக அமைத்துக்கொண்டான். பிசிராந்தை என்னும் புலவர் கோப்பெருஞ் சோழனுக்கு உயிர்போன்ற நட்பினராதல், தமிழில் பிரசித்தம். இன்னோரன்ன வரலாறுகள் உரோம சரிதத்தில் பல

வுள. மனைவி மக்கள் முதலிய தொடர்புடையார் உளராகவும், அனையோர் இங்ஙனம் செய்தற்குக் காரணம், நட்பாலுளதாகும் நன்மை, சுற்றத் தொடர்புகளால் உளதாவதில்லையென்பதே. ‘நல்வினைத்திலும் நட்பு வலிது.’ ‘உற்ற சிநேகன் உயிருக்கு அமிர்தம்.’

முன்னும் பின்னுமாகச் சிந்தித்தும் தெளிவடையாமல் மலங்கிக் கலங்கியிருக்கும் பல எண்ணங்கள் மனதில் நிறைந்த ஒருவன் அவற்றைப் பிறரிடம் வெளியிட்டால், அவனுடைய அறிவு தெளிவடைந்து நுட்பம் பெறும். அங்ஙனம் வெளியிடுங்கால், ஒவ்வோரெண்ணமும் ஒழுங்காகப்புறப்படும். எண்ணங்களை வார்த்தையில் அமைத்து உரைக்கும்போது, அவற்றின் நோக்கம் நன்கு புலப்படும். வெளியிடாமல் ஒருநாள் முழுவதும் ஓயாமல் சிந்தித்தவிடத்தும், அவை ஒழுங்காக உருப்படுவதில்லை. அரைநாழிகை நேரமாயினும் அவற்றை ஒருவனிடத்தில் உரைக்கப்புகுந்தால், அறிவு தெளிவாக விளக்கமாகின்றது. கல்லானது தன்னளவில் கருக்கிலதேயாயினும், அதனிடம் தீட்டிய கத்தி கருக்கடையுமாறு போல, ஒருவன் தன்னளவில் மந்தனே யாயினும், அவனிடம் உரைத்துக்கொண்ட எண்ணங்கள் ஒழுங்காக உருவடையும். இந்நன்மை நட்பினரால் மாத்திரமே உளதாவதொன்றன்று. நமது எண்ணங்களை, எவரும் இல்லையாயின், மனத்தில் அலையவிடாமல், ஒரு கல்லுருவினிடத்திலாயினும், ஒரு புல்லுருவினிடத்திலாயினும், உரைத்துக்கொள்வதே உத்தமம். நட்பினரிடத்தில் உரைத்துக்கொள்வது உத்தமோத்தமம். சித்திரப் பட்டாடைகளைச் சிப்பமாகக் கட்டிவைத்தால், அவற்றின் சீர் சிறப்புக்கள் விளங்கமாட்டா: விரித்துவைப்பின், கண்டமாத்திரத்தில், அவற்றின் அருமை நன்கு விளங்கும். வெளியிடாத எண்ணங்கள், சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரத் துணிகளே.

நண்பனே எதற்கும் ஏற்றபெற்றி சூழ்ச்சிசொல்லுதற்கு உரியவன். தன் தொழிலைக் குறித்து ஒருவன் தானே சூழ்ந்திடல், தன்னைப் புகழ்ந்து முகமனுரைப்பாரொருவனிடத்தில் சூழ்ச்சிசெய்வதை ஒக்கும். ஒருவனுக்கு நண்பன் உரைக்கலான சூழ்ச்சி இருவகைத்து. ஒன்று ஒழுக்கத்தை

நோக்கியது : மற்றொன்று காரியசித்தியைக் கருதியது. தனது ஒழுக்கம் தவறியவிடத்து அத்தவற்றினை நீக்கித் தன்னை ஒழுக்கத்தில் உய்க்கத் தக்கவன் நண்பனே. ஒருவன் தன் தவறுகளைத் தானே குறித்தறிந்து அவற்றைத் திருத்திக்கொள்வது வெறுப்புத் தரலான அதம பரிகாரமாகும். அங்ஙனம் திருத்திக்கொள்ளும் பொருட்டு நன்னெறிவிளக்கும் நீதிநூல்களை ஓதுவதும் மந்தமான பரிகாரமே. ஏனையரிடத்திற் கண்ட தவறுகளின் உதவியால் ஒருவன் தனது தவறுகளைத் திருத்திக் கொள்வது, தனது சுற்றுச் சார்புகளோடு பொருந்துவதில்லையாகக்கூடும். நண்பன் உரைக்கும் கழற்றுரையே உத்தம பரிகாரமாகும். கழறியுரைக்கும் நண்பன் இன்மையால், உன்னத பதவியிலுள்ளார் சிலர், பெருந்தவ றிழைத்துச் சீருஞ் செல்வமும் இழந்து இடர்ப்படுவது பிரத்தியக்ஷம். இவர்கள் கண்ணடியிற் கண்ட தங்கள் உருவை உடனே மறப்பவரை ஒப்பர்.

காரியசித்திக்கும் நண்பனுடைய சூழ்ச்சி இன்றியமையாதது. 'கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தானறியான்.' எல்லாப் பொருள்களையும் கண்டறிகின்ற கண், தன்னைத் தான் காண்பதில்லை. 'கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?' தன் கருமத்தின் குற்றநற்றங்கள் ஒருவனுக்குத் தோன்ரு. 'தீவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது.' ஆகையால், தான் தொடங்கும் கருமம் சித்தியாதற்பொருட்டு, ஒருவன் தனது நண்பனுடன் உசாவுதல் ஒருதலை.

சிலர் ஒரு தொழிலினிமித்தம் ஒருவனிடத்தும், மற்றொன்றினிமித்தம் மற்றொருவனிடத்தும் சூழ்வர். இதனால் இருவகைத் தீமை விளையும். உண்மையான நண்பனல்லாதவன், தான் கருதியிருக்கும் சில கருமங்களுக்குச் சாதகமாகும் விதமாய்ச் சூழ்ச்சி கூறுவதல்லது, சூழ்ச்சி கேட்டவனுக்கே நன்மை விளையுமாறு கூறுவது அரிது தனது உடற்கூறு அறியாத மருத்துவன் கொடுக்கும் மருந்தால், அதற்குரிய நோய் நீங்கியும், உள்ளடங்கியிருந்த வேறுநோய் மேலெழுவதாகி, உயிர்க்கிறுதி விளைவதும் உண்டு : அங்ஙனமே தனது சுற்றுச் சார்புகளை நன்குணராத ஒருவர் கூறும் சூழ்ச்சி, நற்சிந்தையுடன் பொருந்திய தாயினும், அதனால் ஒரு கூறு நன்மை

உண்டாகியும், வேறு எதிர்பாராத தீமையால் தன் கருமம் சிதைதலும் கூடும். ஒருவனுடைய கருமங்கள் அனைத்தையும் உள்ளபடி நன்கறிந்த உண்மை நண்பன் கூறும் சூழ்ச்சியால், ஏனைக் கருமங்களும் பழுதுறாது, கருதிய கருமமும் கடைபோவதாகும். அவ்வக் கருமத்தின் தொழிற்றிறங்களைத் தீரவுணர்ந்தவரான பலரிடம் சூழ்ச்சி கேட்பினும், அவர் உரைப்பனவற்றில் தன் கருமத்துக்கு ஆவதை அறிந்துகொள்ள வல்லவன். நண்பனிடத்தில் மாத்திரமே சூழ்தல் வேண்டும் என்கிற நியதி யில்லை. தனக்கு ஆனவற்றைத் தானே உய்த்தறியும் ஆற்றலில்லாதவன், தனது கருமங்களையும் சுற்றுச் சார்புகளையும் முற்றும் நன்குணர்ந்த நண்பனிடத்தே சூழ்தல் வேண்டும்.

தன் திறங்களை ஒருவன் பிறரிடம் அறிவிக்கத்தக்க சந்தர்ப்பம் நேர்தலாகும். அப்போது அவற்றைத் தானே எடுத்துரைப்பது தற்புகழ்ச்சியாகக் கொள்ளவும்படும். தன் காலைத் தானே கும்பிட்டுக் கொள்ளலாமா? தானே தன்னைப்புகழ்ந்து கொள்ளுதல் தகுதியன்று. பிறரிடத்தில் ஒன்றை விண்ணப்பித்துக்கொள்வதும், ஒரு பொருளை இரந்துகொள்வதும், ஒருவன் தானே செய்வது தகுதியாகக் காணப்படாது. தன்னளவிலே நாணுதலும் கூசுதலுமான இவற்றை நண்பன் செய்வது பொருந்தும். மைந்தனிடத்தில் தந்தை முறையாகவும், தந்தையிடத்தில் மைந்தன் முறையாகவும், தம்முனிடத்தில் தம்பி முறையாகவும், தம்பியிடத்தில் தம்முன் முறையாகவு மன்றி, ஒருவன் வேறு முறையாக ஒன்றுரைத்தலும் செய்தலும் ஆகா: பகைவனிடத்தும் பகை பாராட்டாமல் தன் பெருமைக் கேற்றவாறு ஒன்றுரைத்தலும் செய்தலும் ஆகா. தான் உத்தியோகிக்கும் உத்தியோக நிலைமையில். தான் கருதிய சில பொது நன்மைகளை, அவ்வுத்தியோகத்துக்குப் பாதகமின்றி, ஒருவன் தானே செய்ய இயலாத சந்தர்ப்பங்கள் உண்டு நண்பனுயின், அவ்வத்திறத்துக் கியைந்தவாறு உரைத்தும் செய்தும், தனது எண்ணங்களை அநுகூலமாக முடித்தல் கூடும். மக்களுக்கு மணம்புரிதல், பொருளைப் பங்கிடுதல், கருதிய கருமமுடித்தல் முதலியவற்றைத், தாம் விரும்பியவாறு நிறைவுறுத்துமுன்னரே, பலர் ஆயுளின் எல்லையைக் கடந்துவிடுகின்றனர்.

ஆயினும், உண்மை நண்பன் ஒருவன் உளனாயின், தன் விருப்ப மெல்லாவற்றையும், தான் விரும்பிய விதமே, அவன் தலைக்கட்டுவான் எனக் கடைப்பிடித்திருக்கலாம். இங்ஙனம் நண்பனாலன்றி, ஒருவன் தானே செய்துகொள்ளலாகாத கருமங்கள், எத்தனையோ உள்ளன. எக்காலத்தும் எக்கருமத்தினும் உதவிசெய்யத் தக்கவன் நண்பனே.

> நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
> ஒல்லும்வாய் ஊன்று நிலை.

தாமவரென்னும் வேற்றுமை யின்மையால், உண்மை நண்பராற் பெறலான இவ்வகை நன்மைகட்குக் கங்குகரை யில்லை. இதனைப் பலபடப் பாரித்தல் வேண்டா. ஒரு காரியத்தை முடிக்ககில்லாதவன், உண்மை நண்பன் இல்லாவிடத்து, அதனை அகாரிய மென்றே விட்டொழிதற் பாலன்.

நட்பினர் இருவருள் ஒருவன், உயர்குலமமதை உத்தியோகமமதை வித்தியாமமதை திரவியமமதை முதலியன கொள்வானாயின், அவ்விருவரது நட்பின் திண்மை, நாட்குநாள் நெகிழ்ச்சி அடைவதாகும். ஜீவனோபாய நிமித்தமாக நட்பினர் வேறுவேறு தேயத்தராதலாலும், கட்சி வேறுபாடு சமயத்துவேஷம் முதலியவற்றாலும், சில சமயங்களில் சினேகத்துக்குப் பங்கம் வருதலும் உண்டு. சத்தியந்தவறுதல், சந்தேகாஸ்பதமான காரியஞ்செய்தல், சுயநலம் பாராட்டுதல், நயவஞ்சகம், முரட்டாட்டம், விசுவாசகாதகம் முதலியனவும் நட்பைக் கெடுத்தற்கான காரணங்கள். பொறாமை கொண்டும், சுயகாரிய சித்தியை நாடியும், சிலர் கோள் சொல்லியும் புறங்கூறியும், நட்பினரிருவ ரிடையே மித்திரபேதம் செய்வதுண்டு. இங்ஙனம் சினேகபங்க மாகின்றவைகளை எச்சரிக்கையாக ஓம்புதல் வேண்டும்.

நண்பன் தீயொழுக்கத்திற் புக்கவிடத்து அதற்கு அநுகூலித்தலும், நண்பனுக்கு உவகையுண்டாகும் பொருட்டுக் குற்றமான காரியங்களையும் கௌரவஹீனமான காரியங்களையும் செய்வதும், தனக்கு உவகையுண்டாகும்பொருட்டு நண்பனை அவ்விதமான காரியங்களைச் செய்விப்பதும் இன்றி, ஒவ்வொருவனும் தன்தன் மரியாதையைத் தான்தான் காத்துக்

கொள்ளவேண்டும் உண்மையான நண்பரென்று தேர்ந்து கொண்டவரிடம், அடிக்கடி ஐயங்கொள்ளுதல் இன்றி, முழு நம்பிக்கை வைத்தல்வேண்டும். 'வினை விதைத்தவன் வினை யறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்.' வைஷம்யம் பாராட்டுகின்றவன் வைஷம்யம் பெறுவான். மைத்திரம் பாராட்டுவோன் மைத்திரம் பெறுவான். மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோலே, நட்பைக் காட்டியே நட்பைப் பெறுதல் வேண்டும். நிறைக்கு நிறையாகக் கொள்வதல்லது, நட்பென்பது, கொடுப்பது குறையும் கொள்வது மிகையுமான வாணிகப்பொருளன்று. நண்பனுக்கு நண்பன் கண்ணாடி. நண்பனும் நண்பனும் பிம்பப் பிரதிபிம்பங்கள். பிரதிபிம்பத் திலுள்ள தோஷம் கண்ணாடியாலுமாம், பிம்பத்தாலுமாம்

சாதுரியம்

சாதுரியம்.

1. சாதுரியத்தின் இயல்பு.
2. மற்றவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி நடத்தல.
3. ஸம்பாஷணை.

    ஹிதமான ஆலோசனை.

    வெளியிடத் தக்கவை தகாதவை.

    கண்ணின் குறிப்பால் கருத்தை யறிதல்.

    நயமொழி.

    பேசுகின்ற விதம்.
4. திறமை மிக்கவரிடத்தும் குறைந்தவரிடத்தும் நடக்கும்விதம்.
5. பிறரை அவமதித்து நிஷ்டூரம் தேடிக்கொள்ளாமை.
6. தருணம் பார்த்துக் காரிய முடித்தல்.
7. பரஸ்பர நம்பிக்கை.
8. லளிதங் காட்டுதல்.
9. நுண்ணிய கருமமும் எண்ணித் துணிதல்.
10. ஒழுங்காக உடுத்தல்.
11. பிறர் பரிகாசம் பண்ணினபோது சமாளிக்கும் உபாயம்.
12. இயல்பின்படி நடத்தல்.
13. நம்முடைய காரியங்களை நன்கு கவனித்தல்.

சாதுரியம்.

I

மனிதருடைய காரியசித்திக்குக் காரணம் சாமர்த்தியம். சாதாரண சாமர்த்தியத்தால் மாத்திரமே காரியங்கள் சித்தியாவது துர்லபம். இடம் காலம் முதலியவற்றிற் கேற்ற சாமர்த்தியத்தால் காரியசித்தி சுலபமாகும். இங்ஙனம் சமயோசிதமான சாமர்த்தியமே சாதுரியம் என்பது. கெண்டையைப்போட்டு வராலை இழுப்பதும், காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வதும், சாதுரியமே. கல்லைக் குத்துவா னேன் கை நோகிறதென் றழுவா னேனென்று சும்மா இருப்பதும், மௌனம் கலகநாஸ்தி யென்று சில சமயங்களில் பேசாமலிருப்பதும், சாதுரியமே.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து: மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

என்றது இதுவே.

"வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்
யானையால் யானையாத் தற்று"

என்றபடி, கம்புக்குக் களைவெட்ட அழைத்துக்கொண்டு போய்த் தம்பிக்குப் பெண்கொள்ள முடிவுசெய்ததும் சாதுரியமே யன்றோ! இவ்விதமான சாதுரியம் லௌகிக சித்திக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும். சமயோசிதமான சாமர்த்திய மாகையால் இதற்குப் பொதுவிதி இல்லை. ஆயினும் சில உபாயங்களை அறிந்திருப்பது உபயோகமாகும்.

எல்லா ரியல்புகளும் அறிந்து ஒவ்வொருவ ரிடத்தும் மேதை மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்து நடப்பது

கஷ்டமல்ல. அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை ; எல்லாருக்கும் மகிழ்ச்சியே உண்டாகும். பணத்தால் விளையாத பல நன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதை இளமையிலேயே பழகிக்கொள்ளல் வேண்டும். வயதேறினபிறகு இந்த வழக்கம் உண்டாவது ஏகதேசம். வேறு விசேஷ திறமை இல்லாதவர் அநேகர் இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக சித்தி அடைகின்றனர். இவைகளை அநுசரிக்காதவர்கள், மிக்க திறமை வாய்ந்திருந்தும், வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவாராகின்றனர். மற்றவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதனால் நமக்கு மகிழ்ச்சியே உண்டாவது அநுபவத்தில் பிரத்திக்ஷமாகும்.

இங்ஙனம் நடப்பதில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க உபாயங்களுள் ஸம்பாஷணை ஒன்று. எவரெவரோடு எதெதை எவ்வளவு பேசலாம் என்பதறிந்து, நமக்குரிய வரம்பிலே நின்று பேசவேண்டும். பேச்சின் நிமித்தமாக வீண்வார்த்தை பேசுவது குற்றம். அதைக்காட்டிலும், பேசாதிருத்தலால் பிழை ஒன்றுமில்லை. பரிஷ்காரமாய்ப் பேசாமலிருப்பதும் யுக்த மல்ல. ஆவதற்கும் பேச்சே காரணம் : அழிவதற்கும் பேச்சே காரணம். ஆகையால் முன்பின் பார்த்து மிதமாய்ப் பேசுதல் வேண்டும். மிதமாய்ப் பேசுவதையும் பட்டுக்கத் தரித்ததுபோல் ஒழுங்காய்ப் பேசுதல்வேண்டும்.

நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லுதல்வேண்டும். வித்தியாமமதை திரவியமமதை முதலிய காரணங்களால் பராமுகமாக இருப்பார் சிலர் உண்டு. நாம் அதைப் பாராட்டாமலிருப்பதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் கவனமாய்க் கேட்கவேண்டும். கவனமாய்க் கேட்பதனால் அனேக உபயோகமான விஷயங்களை அறியலாம். நாம் கவனமாய்க் கேட்பவர்கள் என்றறிந்தால் நம்மை உருக்க முடையவர்கள் என்றுகொண்டு, நம்மிடம் அன்பு அதிகரித்து, சிலர் தங்களுடைய கஷ்டநஷ்டங்களை நம்மிடத்தில் முறையிட்டுக்கொண்டு தக்க யோசனை சொல்லும்படி வேண்டுவர். அதனால் அவர்களுக்கு ஹிதமான ஆலோசனைகளை எடுத்துரைத்தலான நன்மை நேரிடும்.

சாராயத்தை வார்த்துப் பூராயம் கேட்பார் சிலர். எச்ச்ரிக்கை அற்றிருக்கிற ஸமயம் பார்த்து ஏதோ ஒன்றைக் கேட்டு, நாம் வெளியிடலாகாத ரகசியத்தைக் கிரகிக்க முயல்வர் சிலர். ஆதலால் வினவிடைகளைக்கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே, வெளியிடக் கூடிய விஷயங்களை வெளியிடல் வேண்டும்: மற்றவைகளை அடக்கி வைத்தல் வேண்டும். "மனதில் இருக்கும் ரகசியம்; மதிகேடனுக்கு வாயிலே."

கவிகளுடைய கருத்தின் ஆழத்தையும் கண்டறியலாம்: மனிதருடைய மனதின் ஆழத்தை உள்ளபடி கண்டறிவது எளிதன்று. "நீராழங் கண்டாலும் நெஞ்சாழங் காண முடியாது." உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் மிகச் சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று; வாயினால் சொல்லுவது வேறொன்று. ஆகவே வார்த்தையால் மனத்தை அறிவது அசாத்தியம். வார்த்தையின் அளவாக மாத்திரமே ஒருவனை நாம் சத்துருவென்றும் மித்துருவென்றும் கொள்ளலாகாது. முகத்துக்கு முகம் கண்ணாடி.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

வஞ்சனையில் பழகி முதிர்ந்தவர்களை முகத்தால் மாத்திரமே அறிவதும் எளிதன்று. முகத்தைக்காட்டிலும் கண்ணானது ஒருவன் கருத்தை நன்குணர்த்தும். மிக்க யூகை உள்ளவர்கள், கண்ணின் குறிப்பால் கருத்தை அறியலாம். அங்ஙனம் அறிந்து, அவரவர்களுக்கேற்ற விதமாக வார்த்தை சொல்லுவது, காரியசித்திக்கு அநுகூலமாகும்.

கோபத்தால் ஒருவர் வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமாக வார்த்தை சொன்னால், அவர் கோபம் தானே தணிந்துபோகும். கோபத்துக் கிடங்கொடுத்தால் காரியம் கெடும். பயமுறுத்தியும் பலாத்காரம் பண்ணியும் ஆகாத காரியங்கள், நயத்தால் ஆகும். "நயமொழியால் ஜயமுண்டு."

பேசும்போது காவடமில்லாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசுதல்வேண்டும். நிஷ்கபடமாய் நேர்மையாகப்

பேசுவது நல்லதே. ஆயினும் ஓட்டைவாயாகப் பேசுவதும் சரியல்ல. நம்மைப்பற்றியாவது நமது சார்பிலாவது நமக்கு விரோதமாயாவது அதிகம் பேசுவது யுக்தமல்ல. வீண் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும் விஷயங்களை இடையிடையிலே சுட்டிப்பேசுத லாகாது. நிர்நிமித்தமாகப் பரிகாச வார்த்தைகள் பேசிச் சிநேகபங்கம் உண்டாக்குவது பேதைமை.

II

இனி வேறு உபாயங்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்கலாம். படாடோபம் உள்ளவர்கள் தம்மிடத்தில் இல்லாத திறமையும் இருப்பதாக நடிப்பர். அவர்களைக் கண்டு அஞ்சுவது யுக்தமல்ல. திறமை மிக்கவர் சிலர் தோற்றப்பொலிவின்றி யிருப்பர். அவர்களை இகழ்வதும் யுக்தமல்ல. நம்முடைய திறமையின் நிலைமை நமக்கே விளங்காமல் இருப்பது உண்டு. லௌகிகத்தில் விவகாரங்களில் பழகும்போதுதான், அவரவர்களுடைய திறமையின் நிதானம் ஏற்படும். பிறப்பு கல்வி கேள்வி சுற்றுச்சார்பு முதலிய வேறுபாடுகளே திறமை வேறுபாட்டிற்குக் காரணமாகையால், திறமை குறைந்தவர்களைப் பிறர் இகழ்வதற்கு நியாயம் இல்லை. திறமை மிக்கவர்களிடம் அடக்கமாகவும், திறமை குறைந்தவர்களிடம் விநயமாகவும் நடப்பது, வசிகரத்துக் குரிய செய்கை.

நம்மை விவேகிகளாகப் பாவித்துக்கொண்டு வெளிப்படையாக ஒருவனை மூடனென்று அவனிடம் எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளுதல் ஆகாது. நம்முடைய அபிப்பிராயம் பிசகாக இருப்பினும் இருக்கலாம். எப்படி இருப்பினும் நம்முடைய அபிப்பிராயம் பிசகென்றே கொண்டு அவன் நம்மை மூடனென்றே கொள்வான். மனிதர் பிறர் செய்த கெடுதியை மறந்தாலும் மறப்பர்: நிந்தித்து அவமதித்த குற்றத்தை எக்காலமும் மறவார். பிறரை இங்ஙனம் அவமதித்து நிஷ்டூரம் உண்டாக்கிக்கொள்வது காரியசித்திக்குப் பிரதிகூலமே தவிர இதனால் ஒரு நன்மையும் உண்டாகாது.

எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடியும் என்று உறுதியாக இருத்தலாகாது. "நல்லது செய்வதில்

நாலிடையூறும் வரும்." "கைக்கெட்டினது வாய்க்கு எட்டா மற்போகிறதும் உண்டு." தருணம் வாய்த்தபோதே தக்கபடி காரியத்தை முடித்துக்கொள்ளல் வேண்டும். தூண்டிற்கார னுக்கு மிதப்பின்மேலே கண். தருணம் வாய்க்கிறவரையில் தூங்காமற் காத்திருக்கவேண்டும். தூங்கினவன் கன்று சேங்கன்று. சில காரியங்களில் தருணம் வாய்க்குமென்று காத்திருப்பது வீணுகும். "அலை ஓய்ந்து கடலாடுவதில்லை." "அலை மோதும் போதே தலைமுழுகவேண்டும்."

மனுஷசுபாவத்தைச் சூட்சுமித்தவறிவது மிகவும் உபயோ கமான வித்தை. மற்றெந்தவித்தைக்கும் இது குறைந்ததன்று. நம்பத் தகுந்தவர் இன்னார் தகாதவர் இன்னார் என்பதோடு, நம் பத்தக்கவரை எவ்வெவ்விதத்தில் எவ்வளவாக நம்பலாம் என் பதையும் உய்த்துணர்வது மிகவும் முக்கியம். இங்ஙனம் உணர் வது எளிதன்று. இதற்கு அநுபவம் அதிகம் வேண்டும். நமக்கு உடந்தையாய் வேலைசெய்யவும் நமக்குக் கீழே வேலை செய்யவும் அவசியமானவர்களைத் தக்கபடி தேர்ந்து கொள்வது பிரதானம். ஒருவனிடத்தில் சந்தேகம் உண்டா யிருந்தால், அவனை வேலையில் அமர்த்திக்கொள்ளல் வேண் டா. அமர்த்திக்கொண்ட பிறகு ஒருவன்மீது சந்தேகம் கொள்ளல் வேண்டா. ஒருவன்மீது வைத்தால் முழு நம்பிக் கை வைத்தல் வேண்டும். முன்பின் பாராமல் நம்பிவிடுகின்ற வர்களே, நம்பி மோசம் போகின்றவர்கள். நாமும் மற்றவர் கள் நம்மை நம்புமாறு நடத்தல்வேண்டும். பரஸ்பர நம் பிக்கை இல்லாவிட்டால் எவ்வித காரியமும் இனிது முடி யாது.

மற்றவர்களுடைய விருப்பங்களை இயன்றமட்டில் நிறை வேற்றல்வேண்டும். இயலாத விருப்பமாயின், 'இது என்னுல் முடியாது' என்று சொல்லப் பின்வாங்க லாகாது. 'இது என் னுல் ஆகும்' என்றுரைப்பது எவருக்கும் சுலபமே. ஆயி னும் ஒவ்வொருவரும் எல்லா ஸந்தர்ப்பங்களிலும் ஸந்தோஷ மாய் அங்ஙனம் உரைப்பது முடியாது. ஆகவே 'இது என் னுல் முடியாது' என்றுரைப்பது பின்னும் கஷ்டமே. 'இது என்னுல் முடியாது' என்று சொல்லப் பின்வாங்கினவர்கள் அநேகர் அழிவுற்றிருப்பது பிரசித்தம். சில விவகாரங்க

ளில் 'இது என்னால் ஆகாது' 'இது செய்ய நான் சம்மதிக்க மாட்டேன்,' 'இதில் நான் பிரவேசிப்பது யுக்தமல்ல' என்று ரைப்பது அவசியமே. ஆயினும் இவ்வித ஸந்தர்ப்பங்களில் கேவலம் வெளிப்படையாக உரைத்து மனஸ்தாபமும் நிஷ்டூரமும் விளைவிப்பது யுக்தமல்ல. உரைக்கலானதை லளிதமாக உரைத்தல்வேண்டும். லளிதமில்லாதவனிடம் போகவும் அவனோடு காரியங்களை நடத்தவும் எவரும் விரும்பார். லாபங் காட்டுகின்றவர்களைக் காட்டிலும் லளிதங் காட்டுகின்றவர்களுக்கே காரியங்கள் கைகூடும். அதனால் உண்டாகிற நன்மை வேறெதனாலும் உண்டாகாது.

அற்பகாரியமானாலும் ஆராய்ந்து பார்த்தே அதில் அடியிடவேண்டும். "ஆராய்ந்து பாராதவன் காரியம் தான்சாந் துயரந்தரும்.' "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி." அடியிட்ட காரியங்களை அநுகூலமாக முடிப்பதானால், சாவதானமும் நிதானமும்வேண்டும். காரிய சம்பந்தமான விவகாரங்களைப் பொறுமையாய்க் கேட்டறியவேண்டும். கேட்டபின் சிக்கறுக்கத் தக்கவைகளை ஒழுங்காகச் சிக்கறுத்தல் வேண்டும். பொறுமை கடலினும் பெரிது. ஆத்திரப்படுதல் ஆகாது. ஆத்திரம் அடைந்தாலும், அவசரப்பட்டு அதை வார்த்தையாலும் செய்கையாலும் வெளியிடலாகாது. "அவசரக்காரனுக்கும் ஆத்திரக்காரனுக்கும் புத்தி மட்டு." "பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும்." "பதறாத காரியம் சிதறாது."

நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூலேன் என்றிருத்தலாகாது. பிரபஞ்ச நாடகத்தில் அவரவருக்குரிய வேஷம் அவசியமே. "இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும்." "ஆடையில்லாதவன் அரைமனிதன்." "வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி." திட்டமாக உடுப்பவன் திட்டமாக வேலை செய்வான் என்பது பொதுஜன அபிப்பிராயம். டால் டம்மாரம் போட்டுக்கொண்டு போகவேண்டும்: டம்பாசாரியாய்த் திரியவேண்டும் என்பதில்லை: ஒழுங்காக உடுப்பது போதும்.

தூரத்தில் இருவர் பேசி நகைத்திருந்தால், நம்மைக் குறித்தே அவர்கள் ஏதோ பேசிக்கொள்ளுகிறார்கள் என்று

நினைப்பதும், நம்மையே அவமதிக்கிறார்கள் என்று சந்தேகிப்பதும் ஆகாது. எவராகிலும் நம்மை நேரில் பரிகாசம் பண்ணி நகைக்கிறபோது, நாமும் அவர்களோடு கூடக் கலந்து நகைத்துச் சமாளிப்பது அவர்களைத் தோற்பிக்கும் உபாயமாம். சமாளிக்க முடியாவிட்டாலும் நாமும்கூட நகைத்து விட்டால், பரிகாசம் முனைமழுங்கிப்போகும். பரிகாசம் பண்ணினவிடத்துக் கூடக்கலந்து நகைப்பவனை எவரும் விரும்புவர். அவன் ஸரஸமுள்ள விவேகி என்பது விளங்கும். நம்முடைய குறைவைக் கண்டவிடத்து நாமே நகைத்து விட்டால், மற்றவர்கள் நம்மைக் கண்டு நகையார்கள்.

ஒவ்வோர் ஸமயத்தில் பிறர் நம்மைக் கண்டு பரிகசித்து நகைப்பது சகஜமே. அதனால் நமக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது. பிறர் நகைப்பதற்கு இடமாகுமே என்று நம்முடைய கொள்கைகளைக் கைவிடலாகாது. நம்முடைய இயல்பின்படி நடந்தால் பிறர் நகைப்பதற்கு இடமில்லை. நம்முடைய இயல்புக்கு வேறாக நடப்பதுதான் பிறர் நகைப்பதற்குக் காரணமாவது. பிறர் தம்மை அவமதித்தால் நிஷ்காரணமாகச் சிலர் வீணிலே மனஸ்தாபம் கொள்வதுண்டு. நம்முடைய தாழ்வுக்கு நாமே காரணம். ஒருவருடைய அவமதிப்பால் யாதொரு தாழ்வும் உண்டாகாது.

நாம் கவனித்துச் செய்யத்தக்க காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. சரியாக அவைகளை நடத்துவதே கஷ்டம். அப்படியிருக்கப் பிறர் முயலுதலான காரியங்களில் பிரவேசிக்கும்படி நாமே வழிதேடுவது உசிதமல்ல. நம்முடைய உதவியை விரும்பினால் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால், அழையா வீட்டுக்கு நுழையாச் சம்பந்திபோல் நம்முடைய காரியங்களை நன்கு கவனிப்பதே நமக்கு அழகு.

க ல் வி

க ல் வி.

1. கல்வி—வித்தை—சாஸ்திரம்.
2. நூல்.
3. ஆசிரியன்—மாணுக்கன்—பாடசாலை—பாடம்.
4. பாலசிக்ஷை.
5. ஆசிரியனிலக்கணம்.
6. குருவிசுவாசம்.
7. தண்டனை.
8. கல்வியின் அவசியம்.
9. கல்வியின் பெருமை.
10. கற்கு முறை.
11. ஓலைச் சுவடிகள்—அச்சுப் புத்தகங்கள்.
12. தமிழிலக்கியங்கள்.
13. வசன நூல்கள்.
14. வர்த்தமான பத்திரிகை ழ.
15. தமிழ் வித்தியார்த்திகள் முன்னுளில் கற்றுவந்தவை.
16. வித்தியா விநோதிகள்.
17. நெட்டுரு.
18. மாணுக்கன் கடமைகள்.
19. தன் முயற்சியால் மேலுமேலும் கற்றல்.
20. ஆராய்ந் தமைவுடைய கற்றல்.
21. பாட புத்தகம்.
22. பார்த்தெழுதல்
23. பாடம் பண்ணுதல்.
24. நெட்டுருப் பண்ணத் தக்கவை.
25. சுருக்கம் எழுதல்
26. சாஸ்திர அபிவிர்த்தி
27. தொழின் முயற்சியில் அபிவிர்த்தி

கல்வி.

கல்வி என்பது கற்றல் அறிவு வித்தை எனப் பொருள் படும். கல்வி என்பது கற்றல் என்கிற பொருளில் தொழிற் பெயரும், அறிவு வித்தை என்கிற பொருளில் தொழிலாகு பெயரும் ஆகும். கல்வி என்பதில் கல் என்பது பகுதி. கல்லுதலாவது கிண்டல் : கிண்டலாவது தோண்டுதல், ஆராய் தல். சப்தார்த்தத்தின்படி, கற்றலாவது யாதொரு விஷயத் தைத் தோண்டி ஆராய்தல் என்பதாம். அங்ஙனம் ஆராய்ந் தறியப்பட்டது கல்வி. வித்தை என்பது, வித்யா என்கிற வடசொல். அது, அறி தெரி எனப் பொருள்படும் வித் என் பத னடியாகத் தோன்றியது. விஷயங்களை ஆராய்ந் தறியும் ஞானமே கல்வி யென்றும் வித்தை யென்றும் வழங்கப் பெறும். அதனு லன்றே, கலைகளையும் கைத்தொழில்களை யும், கல்வி யென்றும் வித்தை யென்றும் வழங்குகிறோம். அழகு மாதுரியம் இராகவிகற்பம் எனப் பொருள்படுவதான லளிதம் என்கிற வார்த்தையை வித்தை என்பதோடு புணர் த்தி, ஓவியம் சிற்பம் இசை கவிதை முதலியவற்றை, லளித வித்தை என வழங்குவது பொருந்தும். வமிச பாரம்பரிய மாய் அனுசரிக்கப்பட்ட ஜீவனோபாயம், குலவித்தை எனப் படும். மனிதன் அறியலாவனவற்றை யெல்லாம் வடமொழி வாணர் அறுபத்துநான்கு கலைகளாக வகுத்திருந்தனர். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித்தையே. அந்தந்த வித்தை யின் இலக்ஷணங்களைச் சூட்சுமித் தறிவிப்பது சாஸ்திரம்.

தமிழில், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந்நூல்களை அறிதற் குக் கருவிகளான நிகண்டு இலக்கணம் கணக்கு முதலிய நூல்களும், கற்றற்குரிய நூல்கள் என்றும், கற்றற்குரிய அந்

நூல்களைக் கற்றலே கல்வி என்றும் கொள்வது இயல்பு. கற்றற்குரிய விஷயங்களை உரைப்பது நூல். அது உவமையாகுபெயராய் அமைந்த பெயர். வடமொழியில் புஸ்தகம் கிரந்தம் தந்திரம் என்பன வழங்கும். நூலைச் செய்தவன் ஆக்கியோன்—நூலாசிரியன்—கிரந்தகர்த்தா எனப்படுவான். சான்றோர் செய்த நூல்கள் பொதுவில் இலக்கியம் எனப்பெறும். எதைக் குறித்து இலக்கணம் உரைக்கப்படுகின்றதோ, அது இலக்கியம். இலக்கியத்தின் அமைதியை விளக்குவது இலக்கணமாம். இலக்கியம் என்பது லக்ஷ்யம் என்னும் வடமொழி. இலக்கணம் என்பது லக்ஷணம் என்னும் வடமொழி.

வித்தை கற்பிப்போன் குரு வித்தியாகுரு. ஆசாரியன் ஆரியன் உபாத்தியாயன் என்பன ஒருபொருட் கிளவிகள். குரு என்கிற சொல்லுக்கு அஞ்ஞானத்தை நீக்குவோன் என்பது பொருள். ஆசாரியன் என்பது, தமிழில், ஆசிரியன் என்றும், ஆசான் என்றும் வழங்கும். அத்தியாயனம் என்பது வேதமோதுதல். ஒத்தாசையாக உடனிருந்து வேதம் ஓதுவிப்பவன் உபாத்தியாயன். இது நாளடைவில் எந்நூலையும் எந்த வித்தையையும் படிப்பிப்பவனை உணர்த்துவதாயிற்று. இது, உவாத்தியான் உவாத்தி என மருவியும் தமிழில் வழங்குகின்றது. போதம் என்பது அறிவு, ஞானம்: அதைக் கொடுப்பவன் போதகன். உவாத்தியானுக்குத் தமிழில் ஈவோன் என்றும் கற்பிப்போன் என்றும் கற்கப்படுவோன் என்றும் பரியாய நாமங்கள் உண்டு. உலகவழக்கில் உவாத்தியான் (வாத்தியார்) என்பதே பெருவரவிற்று.

வித்தையைத் தேடுவோன் வித்தியார்த்தி, வித்தியாபாரகன். எட்டு வயதுக்கு மேற்பட்டவனாய்ப் பதினாறு வயதிற் குறைந்தவன் மாணவகன். எட்டு வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ள பருவமே வித்தியாப்பியாசத்துக்கு உரிய பருவமாதலால், வித்தியார்த்திக்கு மாணவகன் என்ற அப்பெயர் வழங்குவதாயிற்று. இவ்வடசொல், இவ்வுருவிற் றாகவும், மாணாக்கன் எனத் திரிந்தும் தமிழில் வழங்குகின்றது. சிஷ்யன் என்னும் வார்த்தையும் மாணாக்கனைக் குறிக்கும். படிப்பிக்கை என்பது வடமொழியில் சிக்ஷை எனப்படும். அதனடியாக உபாத்தியாயருக்கு சிக்ஷாகரன்

என்றும், மாணாக்கனுக்கு சிக்ஷன் என்றும் பெயர்கள் வழங்கும். நன்றாய்ப் படிப்பிக்கப்பட்டவனை, சிக்ஷிப்பட்டவன் என்பது மரபு. இளைஞரைப் படிப்பித்தல் பாலசிக்ஷை. படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் கற்பிக்கும் உபாத்தியாயனைக் கணக்காயன் என்பது தமிழ் மரபு. கல்வி பயிலிடமானது கல்வியூரி (கல்லூரி) பள்ளிக்கூடம் கழகம் பாடசாலை கல்விச்சாலை வித்தியாசாலை என்ற பெயர்களால் வழங்கும். கலாசாலைகளைக் கல்லூரி எனல் பொருந்தும். பாடம் என்பது படிப்பு—படிக்கும்படி நியமித்த அளவு - படித்தது மனதி லமைதல்-கற்பிக்குமளவு என ஒன்றுக்கொன்று சம்பந்தமான பல பொருளைக் குறிக்கும். இப்பொருள்களைப் பாடங்கொடுத்தல் - பாடஞ்சொல்லல்-பாடங்கேட்டல் - பாடம் படித்தல்-பாடம் பண்ணல்-பாடமாக்கல்-மனப்பாடம்-வாய்ப்பாடம் என்னும் வழக்குகளால் அறியலாம்.

'பிள்ளைக்கு வாத்தியாரும் பெண்ணுக்கு மாமியாரும்' என்றது முதுமொழி. அஃதாவது பாலசிக்ஷை அவசியம் என்பதாம். 'ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?' துள்ளித் திரிகின்ற காலையில் பிள்ளைகளைத் துடுக்கடக்கிப் பள்ளியில் வைத்தல் வேண்டும் பிள்ளைகளைப் பள்ளியில் வைப்பது பிள்ளைகளுக்கு இளமையில் செய்யும் சடங்குகளில் ஒன்றாய் வித்தியாரம்பம் எனப்படும். இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும். சிறுவயதிற் கற்ற கல்வி சிலையில் எழுதிய எழுத்துப் போலாம். ஆதலால் 'இளமையிற் கல்.' கல்வியோடு நல்ல பழக்க வழக்கங்கள் பதிவதற்கும் இளமையே தக்க பருவம். 'இளமையிற் பழக்கம் எப்போதும் மறவாது.' குறித்த காரியங்களைக் குறித்த காலத்திற் செய்தல், உண்மை யுரைத்தல், ஊக்கம், பணிவு, சுத்தம், ஜீவகாருண்யம், தேவபக்தி முதலிய பழக்க வழக்கங்கள் பள்ளிக்கூடத்தில் பாலசிக்ஷையால் நன்கு நிலைத்துவிடும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்' தொடருமாதலால், குழந்தைப் பருவத்தில்தானே இப்பழக்க வழக்கங்கள் அநுஷ்டானத்தில் வரவேண்டும். 'முன் ஏர் போன வழி பின் ஏர்' ஆகையால், வீட்டில் தாய்தந்தையர் முதலியோர்

இப்பழக்க வழக்கங்களை ஒழுங்காக அநுட்டித்துவரின், சிறுவர்களுக்கும் அவை சுவபாவமாக அநுஷ்டானத்தில் வந்துவிடும். 'இளமையிற் பழக்கம் முதுமையிற் சுபாவம்.' ஒருவர் கல்வியில் எவ்வளவு விற்பனராயினும், இப்பழக்க வழக்கங்கள் பதியப்பெறுவிடின், அவர் தினைத்துணையும் சீர்ப்படுதல் இல்லை. ஆதலால் பெற்றோர்கள் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

குருவினிடத்தில் உள்ள துரப்பியாசங்கள் சிஷியர்களிடம் இளமையில் சுலபமாக ஒட்டிக்கொள்ளும். ஆகையால் சிஷ்டாசாரங்கள் உள்ள சற்குருவினிடத்தில் பிள்ளைகளைப் படிப்பித்தல் வேண்டும். ஒரு கையில் பிரம்பும் ஒரு கையில் புத்தகமுமாய்க் 'குருவேஷங் கொண்டவனெல்லாம் குரு ஆவானோ?'

குலனும் குணனும் குரவரைப் பேணும்
நலனும் கடவுளை நயத்தலும் கருணையும்
புலனவித் தொழுதலும் பொறையும் தோற்றமும்
உலகிய லறிந்துயிர்க் குறுதி கோடலும்
கற்றவர் காமுற வாழ்தலும் காந்தியும்
மதிநிகர் கல்வியும் கதிர்நிகர் வனவாம்
வாய்மையும் தூய்மையும் வழுவுத லின்றாய்க்
கற்றன யாவுங் கழகத் துதவும்
பெற்றியன் மறந்தும் பிறர்பழி கூறான்
சதிருடை யேனெனத் தற்புகழ்ந் தறியான்
முதுமொழி யிலக்கண விலக்கிய முறையே
புதுமொழி புணர்க்கும் புலமை யோனே

ஆசிரிய னாதற்கு உரியவன். இத்தகை யிலக்கணம் வாய்ந்த ஆசிரியனது அருமை நோக்கியே அன்றோ 'தாரமும் குருவும் தலைவிதி' என்றொரு பழமொழி வழங்குகின்றது.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதனால், குருபீடத்தின் கௌரவம் விளங்கும். 'கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.' உவாத்தியான் ஐங்குரவரில் ஒருவனாக மதிக்கப்படுகிறான். 'குரு வில்லார்க்கு வித்தை யில்லை (முதல வில்லார்க்கு இலாப மில்லை).' ஆசாரியப் பிரதிபத்தி பண்ணுவதை விசேஷமாகக்கொள்வது இந்துக்களில் என்றும் உள்ள

படியே ஆகும். ஒரு நூலை ஓதத் தொடங்குகையில் 'நன்ருக, குருவாழ்க, குருவே துணை' என்று தொடங்குவதே தமிழ் மரபாக இராநின்றது. எல்லா நன்மையையும் 'குரு கடாக்ஷம் கூட்டுவிக்கும்' என்பதும் நமக்குத் துணிபே. திருமாலையாண்டானிடத்தில் இளையாழ்வார் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டு வருகையில், ஓர் அர்த்த ப்ரஸ்தாவத்திலே ஆண்டான் பிரதிபாதித்த அர்த்தங் கேட்டு, இளையாழ்வார் 'இங்கே ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார்' என்று விண்ணப்பித்த அளவில், ஆண்டானும், 'நீர் ஆளவந்தாரைக் கண்ணுலும் காணு திருக்க, இப்படி அருளிச்செய்யார் என்கைக்கு நிதானம் ஏது?' என்று கேட்டாராக, இளையாழ்வாரும் 'நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யன் அன்ருே' என்று உரைத்தனராம். குரு விசுவாசம் இல்லாமல் குருவினிடத்தில் வஞ்சகம் பாராட்டினேரைக் குருத்துரோகி என்று எவரும் நிந்திப்பர். இவ்வித குருத்துரோகிகளுக்கு எந்த வித்தையும் ஈடேருது என்பதும் நம்மவர்க்குத் துணிபு. தன்னை வழிபட்டொழுகும் மாணக்கனை வஞ்சிக்கின்ற ஆசிரியனை முடத்தெங்கோடொப்ப இழித்துரைப்பர். மொழிகுணமின்றி இழிகுணமுடையாரும், வரலாற்று முறைமையில் வந்த ஆசிரிய பரம்பரையில் கல்வி பயிலாத சுயாசாரியரும், ஆசிரியர் ஆகார். இன்னேரன்னே ரிடம் கல்வி பயில்வோர் வித்தியாபிவிருத்தியும் விளக்கமும் எய்தார்.

கால்பிடித்து மூக்கணங்கயிறு கோத்துத் திருப்புகையில் 'அடியாத மாடு படியாது.' 'அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா.' 'பரிந்த விடம் பாழ்.' 'கல்வி என்கிற பயிருக்கு கண்ணீர் என்கிற மழை வேண்டும்.' அம்மழைக் குரிய மேகம் உவாத்தியே. துஷ்டச் செயல்களைச் செய்தவிடத்தும், படிக்கவேண்டும் பாடங்களைப் படியாது பராமரிக்கையாக இருந்தவிடத்தும், ஒழுக்கம் தவறினவிடத்தும், பிள்ளைகளைத் தண்டிக்காமல் விடலாகாது. நற்செயல்களைச் செய்தவிடத்தும், பாடங்களைச் செவ்வையாகப் படித்தவிடத்தும், நல்லொழுக்கத்தை மேற்கொண் டொழுகுமிடத்தும், நன்மையைப் பாராட்டி உற்சாகம் உண்டாக்கவேண்டும். 'வித்தியாசாலை விநோதசாலை'

யாகையாலும், வெகுண்டுரைப்பான் பள்ளியை அறிவுடை யார் குறுகாராகையாலும், உவாத்தியான் எப்போதும் கடு கடுப்பும் வெடுவெடுப்பும் கொள்ளாமல், 'அடிக்கு மொருகை அணைக்கு மொருகை' என்கிற மர்மத்தை அநுசரித்து, பயத் தாலும் நயத்தாலும் பிள்ளைகளைத் திருத்தி நல்வழிப் படுத் தல் வேண்டும்.

நம்முடைய நாட்டில் ஜீவனோபாயங்கள் வமிச பாரம் பரியமாக அனுசரிக்கப்பட்டு வந்தனவெல்லாம் குலாசாரத் தொழில்கள். ஆகவே அத்தொழில்களைச் செய்து பழக வித் தியாசாலைகள் இருந்தில. 'அப்பியாசம் குலவிருது' 'மக னறிவு தந்தையறிவு.' 'வைத்தியன் பிள்ளை வைத்தியன்.' ஆகையால், எப்படியும் 'குலவித்தை கற்றுப்பாதி கல்லாமற் பாதி'யாக வந்துவிடும் கண்ணிற் கண்டதைக் கையினற் செய்கிற குலவித்தைகளை அனுசரிப்பவர்கள், நூற்பயிற்சியை வெகுவாய் வேண்டாவிடினும், அவர்கள் எழுதவும் படிக்க வும் கணக்குப் பார்க்கவும் அறிவது அவசியம். 'கற்றவனுக்கு எந்த வித்தையும் கால் நாழிகை'யில் வருமாகையால், இவற் றையேனும் 'கல்லாதவரே கண்ணில்லாதார்' ஆவர். 'எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும்.' ஆதலின் 'வித்தை விரும்பு.' 'வித்தை யுள்ளவன் பெரியவன்.' 'தனக்குப் பாழ் கற்றறி வில்லா வுடம்பு.' 'படித்தவனும் படியாதவனும் கொக்கும் அன்னமும் போல்வர்.'

விலங்கொடு மக்க ளனையா இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

கல்வி என்பது ஒருவாறு தொழிற்பண்புப்பெய ராயி னும், அதனைச் செல்வப்பொருளோடு ஒப்புமையாகக் கல்விப் பொருள் என்பது தமிழ் வழக்காக இருக்கின்றது. 'கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு செல்வமுஞ் செல்வ மெனப்படும்.' 'கைப்பொரு டன்னின் மெய்ப்பொ ருள் கல்வி.' ஏனெனின், 'கைப்பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது.' கைப்பொருள் அறமும் இன்பமும் பயக்கும். கல்விப்பொருளோ 'அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும்.' பொருட்செல்வம் பொருந்தியிருப்பினும், 'கல்வி யில்லாச் செல்வம் கற்பில்லா வழகே.' 'மன்னனுக்குத் தன்

றேச மல்லாற் சிறப்பில்லை.' வித்துவானுக்கு எது பரதேசம்? 'கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு.' 'கற்றோர்க்குக் கல்வி யழகே அழகு.' 'தோழனுவது துலங்கிய கல்வி.' 'வித்துவான் தனவான்.' 'புத்திமான் பலவான்.'

இம்மை பயக்குமால்: ஈயக் குறைவின்றால்:
தம்மை விளக்குமால்: தாமுளராக் கேடின்றால்:
எம்மை யுலகத்தும் யாங்காணேம், கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து.

கல்வி கற்றவர் தம்மளவில் சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், முத்தி நெறியை அடைபவ ராதலாலும், இடையறு இன்பம் பெறுபவராவர். அறியாத பல அரிய விஷயங்களையெல்லாம் இவர்களை யடைந்து அறிந்தோமென உலகத்தவர் பலரும் அவரிடம் அன்புடையவராவர். வாலிபனே யாயினும், 'கல்வியுள்ள வாலிபன் கன கிழவனே.'

ஒவ்வொருவரும் நல்லாசிரியர்களிடத்திலே கல்வியை ஐயந்திரிபறக் கற்றல் வேண்டும். ஐயமாவது, பழுதையோ பாம்போ, குற்றியோ மகனோ, இப்பியோ வெள்ளியோ, இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாதுநிற்றல்: திரிபாவது, பழுதையைப் பாம்பென்றும், குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும், ஒரு பொருளின்கண் இல்லாத தன்மையை இருப்பதாக நிச்சயித்து, ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். கல்வியிலே தேர்ச்சியடைய விரும்புவோர், ஒருநாள் ஊக்கமாகவும் மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், தங்கள் தங்கள் சக்திக் கேற்ப, எப்போதும் ஓரேவிதமாய்க் கல்வியிலே இடைவிடாது பயிலல்வேண்டும். 'ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்.' ஏனெனின், 'நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்.' ஆகையால், சோர்வடையாமல் நாடோறும் சிறிதாயினும் கிரமமாகக் கற்பவர் எப்படியும் அறிவுள்ளவ ராவர். 'பாட மேறினும் ஏடது கைவிடேல்' என்பதைப் பாராட்டாமல், தங்களை மிகவும் சூக்ஷுமக் கிராகிகள் எனக் கருதி ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்பவர், அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார்.

தொட்டனைத் தூறு மணற்கேணி: மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

ஆகையால் கல்வியைச் சிறிது கற்றவளவில் அமையாது மேலு மேலும் கற்றலே தகுதி. தம்மினும் குறைவாகக் கற்றவரை நோக்கி, 'நாம் இவரினும் இத்துணை வல்லமை உடையோ மன்றோ' என இறுமாந்து மகிழாமல், ஒவ்வொருவரும்

தம்மினும்

கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

முற்காலத்தில் ஓலைகளில் எழுதிய புத்தங்களே வழங்கி யிருந்தன. காகிதம் செய்யும் வித்தை விர்த்தியடைந்த பிறகு அச்சுவித்தை விர்த்தியடைவதாயிற்று. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய புத்தகங்களை எழுதிப் படிப்ப தென்றால், தனிகரல்லாதவர் பல நூல்களைப் படிப்பது இயலுமா? ஆயி னும் நூல்களைத் தாங்களே எழுதிப் படிப்பதனால், படித்த நூல் படித்தவளவில் அழுத்தமாக மனதிற் பதிந்திருக்கும் அநுகூலம் ஒன்று மாத்திரம் இருந்தது. முற்கால வித்துவான் களுக்கு ஞாபகசக்தி விசேஷித் திருந்ததற்கு முக்கிய கார ணம் இதுவே. கற்ற கற்ற விஷயங்கள் எல்லாவற்றையும் மறவாமைப் பொருட்டே, இலக்கணம் மருத்துவம் சோதி டம் முதலிய சாஸ்திரங்கள் சூத்திரமும் செய்யுளுமாக எழு தப்பட்டு வந்தன. அச்சுவேலை இங்கே அனுசரிக்கலான பிறகே தமிழில் வசன நூல்கள் தோன்றலாயின. அதற்கு முன் நூல்களின் உரையன்றித் தனியாக வசனநூல்கள் இல்லை. வசனரூபமாக எழுதப்பட்ட இராமாயணம் பாரதம் முதலிய சில நூல்களே, பாமர ஜனங்களுக்குப் படித்துப் பொருள் தேடும் சிலரிடத்தில், எழுவாய் பயனிலை பிறழ்ந்தும், இடையின வல்லின பேதம் விளங்காமலும், விட்ட இடம் தொட்ட இடம் தெரியாமலும், இரண்டு மூன்று முழ நீளமான வாக்கியங்களோடு, தற்குறிப்பேற்றம் முதலியன பொருந்திப் பிண்டாகாரமாக இருந்தன. வசன நூல்கள் இல்லாமையால் வித்தியார்த்திகள் சுலபமாக வித்தியாபிவிர்த்தி அடையக்கூடா மல் இடர்ப்பட்டனர்.

காலங்கண்ட தமிழிலக்கியங்களை வகைப்படுத்திப் பரிசோதிக்கையில், நீதிநூல்களும், நவரசாநுபவ ஜநிதமான காவியங்களும், ஸ்தல மகாத்மியமாய்ப் பெரும்பாலு மொழிபெயர்ப்புக்களான புராணங்களும், சமய சித்தாந்தங்களும், பக்திரஸம் பெருக்கெடுக்கும் சமயச்சார்பான தோத்திரப் பாக்களும் ஆகிய சில பாகுபாடுகள் மாத்திரமே பெறப்படுகின்றன. புராணங்களிற் பெரும்பாலான பிற்காலத்தனவே. தமிழ் வித்துவான்கள் சமயக்ஷாத்திர மின்றிப் பொதுவில் கற்பனவெல்லாம் நீதிநூல்களும் காவியங்களுமே. இதனோடு நிரம்பிய இலக்கணப் பயிற்சியும் நீதிநூல்கள் நீங்கலான ஏனைச் சங்கநூற் பயிற்சியும் உடையவர்கள், அவருள்ளும் சிலரே யாவர். இச்சிலருள்ளும் பிராமணராகின்றவர்களில் ஒரு சிலரே ஒருவாறு வடமொழிப் பயிற்சி உடையோர். ஏனையோர் தமிழன்றி வேறுபாஷை நூல்களையும் சாஸ்திரங்களையும் கற்பது அருமையிலும் அருமை. ஒன்றுலொன்று குறைவின்றிப் பலதுறைப்பட்ட நூல்களைப் பல பாஷைகளினின்றும் மொழிபெயர்த்தும் புதுவது புனைந்தும் நாட்குநாள் தங்கள் இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் வர்க்கசங்கலிதமாகப் பெருக்கிவருகின்ற ஆங்கிலேயரே, இரண்டு பாஷையில் விற்பத்தி யில்லாதார் புலமை நடாத்துவதை, பறவைகள் ஒரு சிறகைக் கொண்டு பறப்பதனோடொக்கும் என்பர். தமிழில் விற்பத்தியடைய விரும்புவோர், வடமொழியாயினும் இங்க்லிஷாயினும் கற்ற லன்றி, அறிவு தெளிவடைந்து பயன்படலான நூல்களை இயற்றவும், தமிழின் குறைபாட்டை அறிந்து ஆவனவற்றைச் செய்யவும் வகையறியாது, 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்' என்பதாக, தங்களையும் தாங்கள் கற்ற தமிழையுமே, பாவம், பெருமை பாராட்டாநிற்பர். இவர்கள், பெரியோர் தேடிவைத்த தனத்தை அழியாமற் பாதுகாக்கும் அவ்வளவினரே யன்றி, அதனை வேறு சாதனங்களால் மேன்மேலும் பெருக்கிச் சிறந்த முதலாளிகள் ஆவா ரல்லர். இயற்றமிழானது பாவகையில் வேறெந்தப் பாஷையினும் வெகுவாய் இளைத்துக்காட்டுவதில்லை. சிறுவர்க்கான வசனநூல்களும் சாஸ்திரங்களுமே தமிழில் சுத்த சூனியமாக இருத்தலால், இக்குறைவை நிறை

வுறுத்தாது விடுவோமாயின், நமது பாஷையிலுள்ள இலக்கியங்களால் மாத்திரமே அறிவு தெளிவடைந்து காரிய நிர்வாகஞ் செய்தலான எதிர்காலம் நேர்கையில், நாம் கல்வியறிவு சாலாத கடையர்கள் எனப் பிற தேயத்தரால் இகழ்ச்சி யடைபவர் ஆவோம். அவ்வத் தேயத்தருடைய இலக்கியத் தொகுதியே அவ்வத் தேயத்தர் திறத்தை நிறுத்துக்காட்டும் துலையாகும்.

தீர்க்கமான வசன நூல்கள் தமிழில் இன்னும் வெகுவாய்ப் பல்கவில்லை. புராணேதிகாசங்களில் முக்கியமான எல்லாம் கத்தியபாகத்தில் வந்துள்ளன. தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்த பஞ்சதந்திரம் சிறுவர்கள் வசன நடையில் பழகுதற்கு மிகவும் பொருந்தியது. வீராசாமி செட்டியார் தினவர்த்தமானி என்னும் பத்திரிகையில் எழுதியவற்றைத் தொகுத்துக்கொண்டு விநோதரசமஞ்சரி என வழங்கும் நூலும், பலருக்கு விநோதம் விளைவிக்கத்தக்கதே. ஆறுமுக நாவலர் எழுதிய வசன நூல்கள், செந்தமிழ் நடையில் பழகி விருத்தியடைய விரும்புவோர்க்கு நல்ல சாதனங்களாக இருக்கின்றன. மயூரம்-வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், பெண் கல்வி, பெண்மதிமாலை முதலியன, சிறியரும் பெரியரும் பலமுறை படித்து நன்மை எய்தலான நூல்களாகும். வைஷ்ணவத்தில் வழங்கும் குருபரம்பரா ப்ரபாவம் ரஹஸ்ய க்ரந்தங்கள்போல்வன கத்தியபாக மானவைகளே யாயினும், பெரும்பான்மையாய் வடமொழிகளும் வடமொழித் தொடர்களும் வடமொழிச் சுலோகங்களும் மல்கி, மணிப்ரவாளம் என்பனவாய் இருத்தலின், இவை செந்தமிழ் வசன நூல்களான கணக்கில் வைத்துக் கருதப்படுவதில்லை. தற்காலம் பிரசுரமாகி வருகின்ற அபிநவ கதைகளையும் உரையிடையிட்ட நாடகங்களையும் வியாசங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் பற்றிப் பெரியோர்களுடைய அபிப்பிராயம் இன்னும் திட்டமாக ஏற்படவில்லை. வர்த்தமான பத்திரிகைகளுள் சில, இங்க்லிஷில் மிக்க பாண்டித்தியம் உடையவர்களாலும், சில, தமிழில் மாத்திரமே விற்பத்தி உடையவர்களாலும் நடைபெற்றுவருகின்றன. தமிழில் நிரம்பிய புலமையோடு இங்க்

லிஷிலும் போதுமான விற்பத்தியுடையவர்கள் இத்துறைகளில் உழைக்கப் புகுவார்களாயின், தமிழில் கத்தியபாகம் நாட்கு நாள் அழகும் ஆற்றலும் அடைவதாகும். ஆயினும் தமிழின் தற்கால கதியானது நன்மையை நாடிச் செல்வதாகவே புலப்படுகின்றது. தமிழ் வசனத்துக்கு இங்க்லிஷே தற்காலம் செல்வச் செவிலியாக இருத்தலின், இந்தத் தாயின் போஷணையால், நாளடைவில் தமிழ் வசனம் புஷ்டியடையும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எப்படியும் காலாந்தரத்தில் சாரமில்லாத நூல்கள் சூனியமாகிச் சத்துள்ள நூல்களே நிலைபெறுவனவா மாதலால், தமிழின் எதிர்கால நிலைமையையும் எதிர்காலத்தில் தமிழ் மாத்திரமே கற்போருடைய நிலைமையையும் குறித்து இப்பொழுது நாம் இடர்ப்பட வேண்டா.

முற்காலத்தில் பிரதேச வர்த்தமானங்களையும் பிறதேச வர்த்தமானங்களையும் அப்போதைக்கப்போது அறியலான வாயில்கள் இல்லை. தீர்த்தயாத்திரை செய்வோரும் கப்பல் வர்த்தகரும் வாணிகச்சாத்தும் தேசாந்தரப் பிரயாணிகளும் படையெடுத்துச் செல்லும் போர்வீரரும் துறவிகளான சந்நியாசிகளும் முதலியோருமே ஒரு தேச விசேஷ வர்த்தமானங்களை மற்றொரு தேசத்தில் பரவுவிப்பவர்கள். அந்த விசேஷங்களும் தத்தத் காலத்தில் உடனுக்குடனே பரவுவது இயலாது. அவைகள் நாள் சென்று பரவுவதில் உண்மை சிதறி உயர்வு நவிற்சி ஆதலும் உண்டு. இக்காலத்தில் சிறிது கல்வி கற்றவர்களும் வர்த்தமான பத்திரிகைகளை வாசித்துப் பல விஷயங்களை அறிந்து அறிவு தெளிவதும் பல தொழிற்றுறைகளில் பிரவர்த்திப்பதும் ஆகின்றனர். கல்வி யபிவிர்த்திக்கும் வர்த்தக வபிவிர்த்திக்கும் நாகரிக வபிவிர்த்திக்கும், அச்சியந்திரமும் இருப்புப்பாதையும் நீராவிக்கப்பலும் தபாலும் தந்தித் தபாலும் பெருஞ்சாதனங்கள் ஆகிவிட்டன.

குலாசார வித்தையை அனுசரிப்போரும் மற்றையோரும் சிறுவயதில் கல்வி கற்கும் இடமானது பள்ளிக்கூடம் கணக்காயர் கழகம் எனப்படும். இது, இங்க்லிஷ் பாடசாலைகள் ஏற்பட்டபிறகு, தெருப்பள்ளிக்கூடம் கிராமபாடசாலை என வழங்குவதாயிற்று. இதில் நடந்தேறிவந்த பாடங்களாவன:—

அரிச்சுவடி, பெயர்ச்சுவடி ; ஔவையா ரருளிச்செய்த நீதிவாக்கியங்கள், வாக்குண்டாம், நல்வழி ; சில சதகங்கள், நைஷதம், நாலடியார், திருக்குறள் முதலியவற்றின் மூலம் ; எண்சுவடி, நெல்லிலக்கம், பொன்னிலக்கம் ; முறையஞ்சொல்லுதல், சட்டமெழுதல் முதலியன்வாம். எந்தநூலுக்கும் பொருள் உரைப்பது இல்லை. பின்னல் வித்துவான்களிடத்தில் கல்வி கற்பதற்கு ஆதாரமான விஷயங்கள் மாத்திரமே இக்கழகங்களில் அடிகோலிக் கற்பிக்கப்பட்டுவந்தன. கணக்காயரிடம் கற்ற கல்வி மற்றைப்படி ஒன்றுக்கும் பற்ருது என்பதற்கு

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

என்ற நாலடியே போதிய சான்று. கணக்காயரிடம் கற்குந் தனையும் மாணக்கர்கள் கிளந்தவாறு கிளக்கும் கிளிகளே யாவர். பிறகு வித்துவான்களிடம் பெரும்பான்மையாய்க் கற்பனவாவன,—கணக்காயரிடம் கற்ற மூலபாடங்களுக்குப் பொருளும், இலக்கணமும், செய்யுள் செய்யக் கற்றலுமாம். கணக்கதிகாரம் கற்பாரும் உண்டு. அப்பால் சமயச் சார்பான நூல்களில் பழகுவது வழக்கம். சமயநூற் பயிற்சி வேண்டுவோர்க்குப் பெரும் பான்மையாய் மடங்களே ஆதாரமாக இருந்தன. சைவ மடங்களில், சமயநூல்கள் மாத்திரமேயன்றி, இலக்கண இலக்கியங்களும் கற்பிக்கப்பட்டுவந்தன. மடங்களின் சகாயமும் சன்மானமும் இல்லையேல், தமிழ் நெடுநாள் முன்னரே சீரழிந்துபோயிருக்கும். பற்பல இலக்கண விலக்கியங்களை மடாதிபதிகள் பிரதிசெய்து பரிபாலித்து வந்தனர். சென்ற இரண்டு மூன்று நூற்ருண்டுகளில் விசேஷ வித்துவான்களாக இருந்தவர்களில் பெரும்பான்மையோர் சைவ மடத்தைச் சேர்ந்தவர்களே.

மேலுமேலும் பேரிலக்கியங்களையும் உரைகளையும் பார்த்தலும், கல்விமான்கள் சபையிலே பிரசங்கிப்பதைக் கேட்டலும், சமயோசிதமாகத் தனிப்பாடல்கள் பாடலும், வழிநூல்கள் சார்புநூல்கள் இயற்றலும், நூல்கள் அரங்கேறுகையில் ஆக்ஷேபனை சமாதானங்கள் உரைத்தலும், இவைபோல்வன

பிறவும், வித்தியாவிநோதிகளுக்குக் காலக்ஷேபமாக இருந்தன. தமிழில் சாஸ்திரப்பயிற்சி வேண்டுவோர்க்கு வியாகரணம் ஜோதிஷம் வாகடம் முதலியன தவிர வேறில்லை. தருக்கம் முதலியன அறியவேண்டுவோர் வடமொழியிற் பயிலல் வேண்டும். பிராமணர் தவிர வடமொழிப் பயிற்சியுடையவர்கள் தொகை தமிழ் நாட்டில் மிகச் சுருக்கமாகவே இருந்தது. தொழிற்றுறைகள் எல்லாம் குலாசார வித்தைகளாக இருந்தமையால், சாஸ்திர அபிவிர்த்திசெய்வோர் மிகச் சிலரே. பூகோள சாஸ்திரம் தேசசரித்திரம் வீசகணிதம் திரிகோணமிதி வசனநூல்கள் எனு மிவைகள், இங்கே இங்க்லிஷ் பாடசாலைகள் ஏற்பட்ட பிறகே கற்கப்படுவன ஆயின.

'சதசுலோகீ ஏகபண்டிதஃ' என்று வடமொழியில் ஒரு முதுரை வழங்கும். நல்லாசிரியரிடத்தில் நூறு சுலோகங்களைக் கிரமமாகப் பொருள் உணர்ந்து பஞ்சலக்ஷணப் பிரயோகம் பண்ணக் கற்றறிந்த மாணுக்கன் ஒரு பண்டிதனே என்பது அம்முதுரையின் கருத்து. இக்காலத்தில் அச்சுவேலை மலிவாகி உரையும் இலக்கணக் குறிப்பும் விசேஷக் குறிப்பும் பெருகிவிட்டபடியால், இங்க்லிஷ் பாடங்களைப் படித்துச் சலித்த மாணுக்கர்கள், இவ்வுரைகளையும் குறிப்புக்களையும் இயன்றமட்டில் நெட்டுருப்பண்ணி, பரீக்ஷையில் வந்தமட்டில் ஒப்பித்துவிடும் இயந்திரங்களாகி விடுவாராயினர். சில இங்க்லிஷ் பாடங்களும் இந்த இயந்திரங்களுக்குக் குருட்டுப் பாடமே. 'பாடமே யோதிப் பயன்றெரிதல் தேற்றாத மூடர்' ஆவார் இவர்களே யன்றோ. பரீக்ஷையில் நூற்றுக் கித்துணைவர் தேறு கடை யாயினர் என்பதே நோக்கமான உவாத்திகள் இன்னும் கண்மூடிக்கொண் டிருப்பா ராயின், மாணுக்கர்க ளனைவரும் உடையும் உண்டியும் உறக்கமும் வேண்டும் எடிஸன் போனோகிராப்புகளே யாவர். நூல்களான வரத்துக்கால்களை இயன்றமட்டும் ஏற்றுக்கொண்டு பரீக்ஷைகளாகிற பைங்கூழை விளைவிக்கும் ஏரிகளாக்காமல், மாணுக்கர்களை, ஆசிரியர்கள், இறைக்கவூறும் மணற்கேணிக ளாக்கிவிடவேண்டும். ஆசிரியர்கள் மலைகளாக நின்றால், மாணுக்கர்கள் ஆறுகளாய்ப் பெருகுவார்கள். ஆசிரியர்கள் அணைக்கட்டுக்களும் ஆவாராயின், சாஸ்திர நன்செய்கள் சாலவும் பயன்படும்.

ஆசிரியரிடத்தில் நூல்களைக் கற்கும்போது மாணுக்கன் அனுசரிக்கத்தக்க கடமைகள் அடியிற்கண்ட சூத்திரத்தால் விளங்கும்.

நூல்பயி லியல்பே நுவலின், வழக்கறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்,
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,
வினுதல், வினுயவை விடுத்தல், என்றிவை
கடனுக் கொளினே மடநனி இகக்கும்.

ஓராசிரியரிடம் கல்வி கற்றுப் புலமை நிரம்புமுன்னே பல ஆசிரியரிடம் அலைந்து திரிபவர், செடிதோறும் அலைந்து தழை மேயும் ஆடுகளே போல்வர். உலக்கைமேல் காக்கைபோல் இவர்கள் நன்மை அடைவதில்லை. நீரை வார்க்குந்தோறும் அதனை ஒழுகவிடுகின்ற இல்லிக்குடம்போல், ஆசிரியர் கற்பிக்குந்தோறும் நூற்பொருள்களை மறந்துவிடாமல், வயிறு நிறையப் புல்லை மேய்ந்து ஓரிடத்திருந்து அசைபோடும் ஆவைப் போல், ஆசிரியனிடத்தில் நூற்பொருளை உள்ளநிறையக் கேட்டுக்கொண்டு, பின்பு மாணுக்கர்கள் ஏகாந்தமான இடத்திலிருந்து, ஆசிரியன் கற்பித்தவற்றை ஒழுங்காகச் சிந்தித்து மனதிற் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

கல்வி கற்கு மாணுக்கன் ஆயுள் முழுவதும் ஆசிரியனிடம் பாடங்கேட்ப தில்லை. நூல்களைப் படித்தறிய ஒருவாறு அர்த்தஞானம் உண்டாக்கிக் கல்வியில் ஊக்கத்தைப் பிறப்பித்துச் சிறிதாறு வழிகாட்டியாகத் தொடர்ந்து, அப்பால் மாணுக்கனைத் தன்போக்கிலே போகவிடுவது ஆசிரியனுடைய கடமை. இறகு முளைத்த பறவைக் குஞ்சுகள் தத்தித் தொத்திப் பறக்கத் தொடங்கிச் சில நாளில் தாங்களே இரைதேடிப் பிழைக்கின்றன. தாய்ப்பாலுண்டு இடுப்பிலும் தோளிலும் எடுத்து வளர்க்கப்பட்ட பச்சிளங் குழந்தைகள், நாளடைவில் தவழ்ந்து நடத்தலாய் ஓடத்தொடங்குகின்றன. ஆசிரியரிடம் கற்கலாயினவற்றைக் கற்றபின்னர், மாணுக்கர்கள் அவ்வளவில் அமையாது, அகராதி, இலக்கணம் முதலிய கருவிநூல்களின் உதவிகொண்டும், தெரியாதவைகளைப் பலரைக் கேட்டுத் தெளிந்தும், மேலும் மேலும் கற்றல் வேண்டும். ஆசிரியரிடம்

கற்ற அளவிலே கல்வியை விட்டவர்கள், எத்துறையிலும் எந்தச் சாத்திரத்திலும் பாண்டித்திய முள்ளவர் ஆகார். ஆசிரியரிடம் கல்வி கற்கையில் குசாக்கிரபுத்தி யின்றி இடைமாணுக்கர்களாய் இருந்தபேர்களில் பல்லோர், பின்னர்த் தாங்கள் ஊக்கங்கொண்டு மேலும் மேலும் செய்த அபிவிர்த்தியால், பெரும் புலவர்களாகிப் பேரும் புகழும் அடைந்துளார். எப்படியும் நாம் கற்ற கல்வி ஜீவனுர்த்தத்துக்குப் போதியதாக இருத்தலால், மேலும் மேலும் கற்று மண்டை வெளுப்பானேன் என்பவர்கள், சாப்பாட்டிராமரே யாவர். 'செவிக்குணவில்லாத போது சிறிது, வயிற்றுக்கு மீயப் படும்.' கல்வி கற்பிக்கும் மர்மத்தை நன்குணர்ந்த ஆசிரியர்களிடம் பழகிய மாணுக்கர்கள், ஆசிரியர் விட்டுவிட்ட இடத்திலேதானே நிலைகொண்டிருக்க ஒருப்படார்.

ஆசிரியரிடங் கற்பன கற்று, வயிற்றுப்பாட்டுக்கு ஒரு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொண்ட பிறகு, மேன்மேலுங் கற்று அபிவிர்த்தி செய்ய அவாவுகின்றவர்கள், எல்லா இலக்கியங்களையும் பல துறைப்பட்ட சாத்திரங்களையும் கற்கப் புகுவது அசாத்தியமாகும். ஏனெனின் 'கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல.' ஆகவே அன்னோர் 'தெள்ளிதின், ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப், பாலுண் குருகிற் றெரிந்து.' சாத்திர அபிவிர்த்தி செய்வதானாலும், இலக்கிய அபிவிர்த்தி செய்வதானாலும், நூல்களைக் கற்காமல் ஒன்றும் செய்ய முடியாது. நூல்களைக் கற்குமிடத்தில் ஒழுங்கான சில முறைகளை அநுசரித்தல் வேண்டும். வழிதுறையில்லாமல் 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்று நம்பி, கண்ட கண்ட நூல்களையெல்லாம் கற்பவர், 'பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்? என்பது போல, உபயோகமான யாதொரு காரியமும் செய்ய உதவமாட்டார். ஓட்டமும் நடையுமாய்த் தாண்டுகால் பாய்ச்சி நுனிப்புல் மேய்ச்சலாக எல்லா நூல்களையும் கற்பதிலும், கற்றறிந்த புலவர்கள் தேர்ந்துரைக்கும் சில நூல்களை மாத்திரம் சாவகாசமாய் நிதானத்தோடு ஆழ்ந்தறிந்து கற்றலே கற்றதனாலாய பயன் தருவதாகும். அகல உழுவதினும் ஆழ உழுவதே நன்றன்றோ? அங்ஙனம் உழுவதிலும் களர் நிலத்தை உழுவ

ருளரோ? சாரமின்றி நிஷ்பிரயோசனமான நூல்களிற் பழகுவது வீண் காலக்ஷேபம்.

முதலில் படித்துத் தீரவேண்டிய பாட புத்தகமாக ஒரு நூலைத் தேர்ந்துகொள்ளல் வேண்டும். அதிலுள்ள விஷயங்களைச் செவ்விதின் உணர்ந்து பாடம் பண்ணுகிறவரையில் வேறெதிலும் கையிடல் ஆகாது. ஒவ்வொரு துறையையும் பற்றிய நூல்கள் பலவாக இருத்தல்கூடுமாகையால், புலமை நிரம்ப விரும்பு மாணாக்கன் அவைகளை நாளடைவில் பாராமலும் படியாமலும் திருப்தி அடையமாட்டான் என்பது உண்மையே. ஆயினும் தான் கற்க விரும்பிய சாஸ்திரத்தின் முக்கிய சாராம்சங்களைக் கற்கும்போதே பல நூல்களைப் பார்வையிடுதல் மயக்கம் எய்தற்குக் காரணமாகும். ஒருவன் இலக்கணம் கற்கப் புகுவதாக வைத்துக்கொள்வோம். எழுத்தும் சொல்லும் கற்பதற்கு நன்னூலும், யாப்புக் கற்பதற்கு யாப்பருங்கலக்காரிகையும், அணி கற்பதற்குத் தண்டியலங்காரமும், அகப்பொருள் கற்பதற்கு நாற்கவிராச நம்பி யகப்பொருளும், இயற்றமி ழாசிரியரிடம் பாடங்கேட்டுத் தீர வேண்டிய புஸ்தகங்களாக வழங்கிவருகின்றன. பாடங்கேட்டுத் தீரவேண்டிய புஸ்தகங்களே யாயினும், இவை யெல்லாம் அவ்வத் துறையை முற்றமுடிய உரைப்பன அல்ல. ஆயினும் இக்காரணம்பற்றி இவைகளை நிறைவுறப் பாடம் பண்ணுமல், நேமிநாதம் இலக்கணவிளக்கம் யாப்பருங்கல விருத்தி மாறனலங்காரம் குவலயானந்தம் தொல்காப்பியம் ஐந்திலக்கணத்தொன்னூல் இலக்கணக்கொத்து பிரயோக விவேகம் என்னும் இவைகளையும், பாட புத்தகங்களைப் படிக்கும்போது, அவற்றுடன் கூடவே வெகு விரைவாய் ஒவ்வொன்றாய்ப் படித்துவிடவேண்டும் என்பதில்லை. உரிய எல்லா அமிசங்களையும் விஷயங்களையும் பூரணமாக உரைக்கும் நூல்களைக் காண்டல் அருமை. ஒவ்வொரு நூலாசிரியனும், தான் வரையறுத்துக்கொண்டவாறு நூலை வகுத்துரைக்கையில், பொதுவான பல அமிசங்களைத் தழுவினும், தனது கொள்கையோடு மாறுபடும் அமிசங்களையும், பிறர் கொள்கையோடு தான் மாறுபடும் அமிசங்களையும், சுருக்கியும் பெருக்கியும் விடுத்தும், நூலை அமைப்பது சகசம். எல்லா அமிசங்களும் நிரம்பிய

நூல் காணக்கிடைப்பினும், ஆரம்பத்திலே தானே சாஸ்திர சம்பந்தமான விஷயங்கள் அனைத்தையும் கிரகித்தல் மாணுக்கனுக்கு அசாத்தியம். சுருக்கமான புத்தகங்களில் தக்கதொன்றைப் பாடபுத்தகமாகக் கொள்ளலே யுக்தம். அதனைச் சிறிது சிறிதாக உவாத்தியிடத்தில் பாடங்கேட்டுப் பாராயணம் செய்து, அதன் அமைதியை நன்குணர்ந்த பின்னர், அது சம்பந்தமான ஏனை நூல்களைப் பார்வையிடுதலே முறைமை. அவைகளைப் பாடபுத்தகம்போல் பாராட்டவேண்டா. பாட புத்தகத்தில் உள்ள பல அமிசங்கள் அவைகளிலும் உரைத்திருக்கும். பாட புத்தகத்தில் கண்டிராத அமிசங்களையும்; பாட புத்தகத்தோடு ஒருபுடை ஒத்து ஒருபுடை முரணுதலான அமிசங்களையும், பாட புத்தகத்தோடு முற்று முரணுதலான அமிசங்களையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். இங்ஙனம் கற்பதில், முதனூல்களையே பாட புத்தகங்களாக முன்னர்க் கற்று, வழிநூல் சார்பு நூல்களை அப்புறம் பார்வையிடுவது தக்கதன்று. பழையன கழிதலாய்ப் புதியன புகுதலானவையெல்லாம் சார்புநூல்களிலே காணப்படுமாதலின், சார்புநூல்களில் சிறந்ததைப் பாட புத்தகமாகக் கொண்டு, கடைசியாக முதனூல்களைப் பார்வையிடுவதே, சாஸ்திரத்தை நன்கறிவதோடு, அதன் பூர்வோத்தர கதியை நன்கறிதற்கும், ஏற்ற சாதனமாகும்.

ஒரு நூலைப் பலமுறை பார்த்தெழுதுவதில் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய்ப் பார்த்து எழுதுதல் வேண்டும். இங்ஙனம் கவனித் தெழுதுவதில், பெரும்பான்மையாய் விஷயத்தின்மீதே கவனம் செல்லுதலால், எழுதும் நோக்கம் முற்றும் சித்தியாகாது. விஷயத்தை ஒரு சிறிதும் கவனியாமல் உள்ளதை உள்ளபடியே பெயர்த்தெழுதும் இலேககர்தானும், ஒருநாளைக்கு ஏழெட்டு மணி நேரத்துக்குமேல் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்ய இயலாதென்றால், விஷயத்தையும் விஷயத்தோடு வாக்கியத்தின் போக்கையும் கவனித்தெழுதும் மாணுக்கன் ஒருநாளில் ஒரு நூலில் எவ்வளவு எழுதி முடிக்கலாம்? இங்ஙனம் ஒருமுறை எழுதிமுடிக்க நெடுங்காலமாவதாயின், அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதிப் பாடம் பண்ணுவதற்கு எத்தனை காலம் செல்லும்? இங்ஙனம் செய்த

விடத்தும், நூல் முழுவதும் கெட்டிபாடமாக நின்றுவிடும் என்கிற நிச்சயம் இல்லை. ஆகவே இந்த முயற்சி மலை கல்லி எலி பிடிக்கும் அத்தனையே.

ஒரு நூலைப் பாடம் பண்ணுவதில் மாணுக்கர்கள் வெவ் வேறு முறைகளை அநுசரிக்கின்றனர். அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதுவர் சிலர். சிலர் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவர். தாம் கற்கும் நூலின் அமிசங்களை ஒழுங்காக வகைப்படுத்திச் சுருக்கம் எழுதுவர் சிலர் நூலின் வார்த் தைகளைக் கவனியாமல், போக்கையும் கருத்தையும் விஷயங் களை விளக்கும் தோரணிகளையு மாத்திரமே நன்கு சிந்தித்துக் கொள்ளுவர் சிலர்.

ஒரு நூல் முழுவதையும் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவதனுலும், அல்லது அதில் பெரும் பாகத்தை நெட் டுருப் பண்ணுவதனுலும், வெகுவாய் நன்மை உண்டாவதில்லை. சாஸ்திரங்களில் முக்கியமான சூத்திரங்களையும், இலக்கியங் களில் சொல்லழகு வாக்கிய நடையழகு பொருட்பொலிவு கற்பனை அலங்காரவிசேஷம் பக்தியாதி ரசம் முதலியன அமைந்துள்ள பகுதிகளையும், பலமுறை படித்து மனதில் பதி யவைத்துக் கொள்வது மாணுக்கனுக்கு நன்மையே. சொல் லாற்றலும் ரசஞானமும் முதிர்தலாய்த் தான் புதுவது புனை யும் நூல்களுக்கு இவைக ளெல்லாம் அநுகூல சாதனங்கள் ஆகும். இலக்கியங்களிலும் நீதிநூல்களிலும், ஒரோவிடத்து ஒவ்வொரு வாக்கியமும், சிலவிடங்களில் ஒரு கோவையான சில பாடல்களும், சம்பாஷணையில் ஒவ்வொரு சமயத்தில் தான் விளக்கி வற்புறுத்தப் புகுந்த விஷயங்களுக்குப் பிரமாண மாக எடுத்துக்காட்ட உதவும். பொருளை அறியாமல் நெட் டுருப் பண்ணுவது கேவலம் நிஷ்பிரயோசனமான பிரயாசம். பொருளறிந்து தெளிந்தவிடத்தும், சரித்திரமும் புராணமு மான நூல்களை நெடுக நெட்டுருப் பண்ணுவது, பித்தர் செய் கையே.

கடினமான நூல்களைச் சூட்சுமமாகக் கிரகிப்பதற்கும், கிர கித்ததை மனதில் நன்கு பதியவைத்தற்கும், அந்நூல்களைச் சுரு ங்கப்பிடித் தெழுதலே உத்தமமான உபாயம். ஒரு நூல் தன்ன

ளவில் ஒரு கிரமத்தை அனுசரித்ததானல், இங்ஙனம் சுருக்கம் எழுதலில் வெகுவாய்க் கஷ்டம் இராது. மாணாக்கன் அந்நூலின் ஒழுங்கையே அனுசரித்து, முக்கியமான அமிசங்களையும் உதாரணங்களையும் அதிகாரவடைவின்படி தேர்ந்துகொண்டு, அட்டவணை ரூபமாக, ஒரு விஷய சூசிகையை எழுதுவது போதும். இது செய்ய விரும்பும் தமிழ் மாணாக்கர்கள் நன்னூலைத் தொகுத்து எழுதிப் பார்க்கலாம். அந்நூலை வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்தெழுதுவதைக் காட்டிலும், இங்ஙனம் அதன் முக்கியாமிசங்களை ஆராய்ந்து தேடித் தேர்வதற்கும், அவைகளைச் சுருக்குவதற்கும் கொள்ளும் பிரயாசையினுல், அந்நூல் மனதில் நன்றாய்ப் பதிவதன்றி, நூலின் ஒழுங்கும் அமைதியும் நன்கு கிரகிக்கப்படுதலால், இந்த உபாயம் மிகவும் உபயோகமானதே. ஒரு நூலின் ஒழுங்கும் அமைதியும் சுலபமாய் அறியக்கூடாத பக்ஷத்தில், அதனைச் சுருங்கப் பிடித்தெழுதுவது மாணாக்கனுக்கு மிகவும் கஷ்டசாத்தியமான காரியமே. தொல்காப்பியத்திற்குச் சுருக்கமாக விஷய சூசிகை அமைக்க முயன்று பார்த்தால் இதன் திறம் விளங்கும். ஒரு சாஸ்திரத்தைப் படிக்கும் ஆரம்ப காலத்திலே தானே இங்ஙனம் சுருக்கங்கள் அமைக்க முயல்வது யுக்தமன்று. அந்தச் சாஸ்திர சம்பந்தமான இரண்டொரு நூல்களைத் தீர்க்கமாகக் கற்றபிறகு, பெரிய நூல்களை இங்ஙனம் பாகுபாடு செய்து சுருக்கப் புகுவது நன்மை. இது செய்தாலொழிய யாதொரு சாஸ்திரத்தையும் ஒருவர் தீர்க்கமாகக் கற்றறிந்தவர் என்றுரைத்தல் ஆகாது. ஒரு நூலுக்கு விளக்கமாய் நன்கமைத்திருக்கும் விஷய சூசிகையைப் பலமுறை கவனிப்பதனுல், நூலின் விவரங்களெல்லாம் பலமுறை நினைவில் வரும். நூலின் விஷயங்களும் மனதில் நன்றாய் நிலைத்துவிடும்.

சாஸ்திர அபிவிர்த்தி செய்பவர்கள், தங்கள் பாஷையிலும் பிற பாஷைகளிலும், தாங்கள் விரும்பிய சாஸ்திர சம்பந்தமான விஷயங்களை, உள்ளமட்டில் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். வேறு தேசங்களில் அதே சாஸ்திரம் அடைந்துள்ள அபிவிர்த்தியில் அவசியமான அமிசங்களையும் அறிதல்வேண்டும். இங்ஙனம் அறிந்து தெளிந்த பிறகு, தம்முடைய பாஷை

பில் அதே சாஸ்திரம் தற்கால நிலைமையில் எம்மாத்திரம் குறைபா டுள்ளதாக இருக்கின்றதோ என்பதைத் தேர்ந்து, அக்குறைவினை நிறைவுறுத்தல் வேண்டும். சாஸ்திர வாராய்ச்சியில், நூல்களைக் கற்றல் மாத்திரமே சாலாது. தம்மினு மிகவுங் கற்றவரும் அநுபவமுடையவரும் ஆனவர்களிடத்தில் பல அமிசங்களைக் கேட்டுத் தெளிதல் வேண்டும். அனேகசாஸ்திரங்களை அபிவிர்த்தி செய்வதில், நமது பிரபஞ்சமே போராசிரியனாக இருக்கிறது. பிராகிருத தர்மங்களின் மர்மங்களைப் பரீக்ஷித்தறிதல் வேண்டும். முதலில் சாஸ்திரங்களை இயற்றிய முதனூலாசிரியர்கள், இங்ஙனம் பிராகிருத தர்மங்களையும் சுவாநுபோகங்களையும் பிறருடைய அநுபவ நிகழ்ச்சிகளையும் பரிசோதித்தே யன்றோ, அந்தந்த சாஸ்திரத்துக்கு முக்கியாதாரமான விஷயங்களை வரையறுத்தார்கள். சாஸ்திர மர்மங்களை வரையறுப்பதற்குத் தேசாந்தரங்களில் செய்யும் பிரயாணமும் சிறந்த சாதனம்.

கல்லூரியை விட்டபிறகு, இவ்விதம் சாஸ்திராபிவிர்த்தி செய்யாவிட்டாலும், சிலர், தாங்கள் மேற்கொண்ட தொழிற்றுறையில் தீர்க்கமாக மனதைச் செலுத்தி, அந்தத் தொழிலின் திறங்களைப் பூர்வோத்தரமாக நன்குணர்ந்து, அந்தத் தொழில் மேல்மேல் விர்த்தியடைந்து சிறப்புறுநற்கும், அத்தொழில் சுலபசாத்திய மாதற்கும், அந்தத் தொழிலில் வைத்த முதற்பொருளைக்கொண்டே முன்னினும் மிக்க பயனெய்தற்கும் ஆன மார்க்கங்களைக் கண்டுபிடிப்பதில் கண்ணுங் கருத்துமாகக் காலத்தைக் கழிக்கலாம். இவைகளெல்லாம் சாஸ்திர ஞானம் இல்லாமலும் ஆவனவல்ல. இந்த நோக்கம் உடையவர்கள், பல சாஸ்திர விற்பனர்களை உசாவியும், பல சாஸ்திரங்களை அப்பியசித்தும், பலவித சாஸ்திர மர்மங்களை அறிய வேண்டும். இங்ஙனம் சாஸ்திர விற்பனர்களைப் பல விஷயங்களை உசாவுதலால், சாஸ்திர விற்பனரும் தத்தமக்குரிய சாஸ்திரத்தில் அதுவரையில் கண்டறியாத சில அமிசங்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைச் செய்யத் தொடங்குவர். அங்ஙனம் செய்யும் பரிசோதனைகள், எந்த எண்ணத்துடன் செய்யப்பட்டனவோ அவ்வளவிலே நில்லாமல், வேறு பலவித நன்மைகளுக்கும் ஆதாரம் ஆதலும் கூடும். தற்காலம் புரோ

பியர்கள் பௌதிக ரஸாயன சாஸ்திராபிவிர்த்தியால் அடைந்துள்ள நன்மையைக் காணுமிடத்தில், அவர்கள் நம்மிலும் மிக்க வித்தியாபாரகர்களாகக் காண்கின்றனர். சில வித்தைகளை அவர்கள் ஒருகாலத்தில் நம்மிடம் கற்றனரென்று சரித்திரம் கூறுகின்றது. இப்பொழுது அவர்கள் குருவுக்கு மிஞ்சின சிஷ்யர்களாகிக் கற்றவிடத்தில் தானே தங்கள் வித்தையைக் காட்ட வந்துவிட்டனர். ஜப்பானியர் யுரோபியர்களுடைய கலைகளையும் வித்தைகளையும் கற்றுத் தற்காலம் அவர்களுக்கே பூச்சிக்காட்டத் தொடங்கிவிட்டனர். நாமும் யுரோபியர்களுடைய வித்தைகளைக் கற்று நம்முடைய சௌகரியங்களை மேம்படுத்திக்கொண்டு, அவர்களிடம் என்றும் நன்றி பாராட்டுவோம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளாவிட்டால், கதிகெட்ட கடையர்கள் ஆகிவிடுவோம்.

வீரமாமுனிவர்

Constantine Joseph Beschi

வசனம்

வசனம்.

1. பிரவேசம்.

I. வசன நூல்களின் பூர்வோத்தரம்.

2. வசனம்.
3. உரை.
4. மணிப்ரவாளம்.
5. இயற்றமிழ் வசன நூல்கள்.
6. நொபிலிபஸ் & பெஸ்கி.
7. இலக்கண சித்தாந்த சாஸ்திர உரைகள்.
8. பத்தொன்பதாவது நூற்றூண்டு: முற்பகுதி.
9. தாண்டவராய முதலியார்.
10. திருச்சிற்றம்பல தேசிகர்.
11. விவகார சங்கிரகம்.
12. பத்தொன்பதாவது நூற்றூண்டின் பிற்பகுதி.
13. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்.
14. விநோதரசமஞ்சரி.
15. வேதநாயகம் பிள்ளை.
16. இராமலிங்க சுவாமி.
17. வேலாயுத முதலியார்.
18. ஸ்ரீநிவாச ராகவாசாரியார்.
19. துரைசாமி மூப்பனூர்.
20. ஜனவிநோதினி.
21. புதினமான வர்த்தமான பத்திரிகைகள்.
22. தற்கால வசன நூல்கள்.

II. வசன நடை.

1. பிரவேசம்.
2. நடை.
3. நடையின் கூறுகள்.
4. பொருளும் சொல்லும்.
5. சொல்வன்மை.
6. வாக்கி.
7. வாக்குச்சித்தி.
8. நடையின் குணங்கள்.
9. சொற்களின் திறங்கள்.
10. மொழித்திறத்தின் முட்டறுத்தல்.
11. இனிதாதல்.
12. வழுவின்மை.
13. சுருங்குதல்.
14. விளங்குதல்.
15. விழுப்பயன்றருதல்.
16. நூலெழுதலாகாதவர்.
17. நூலாசிரியன் செவ்வி.
18. நடை பழகுதல்.
19. மொழி பெயர்த்தல்.

வசனம்.

யுரோபிய பாஷைகளில், சிறுவர் சிறுமியரும் எழுத்து வாசனையுள்ள கூலியாட்களும் ஓதலான வசனநூற்கள், எளிய நடையில் எழுதப்பெற்று, நாட்குநாள் மல்கிவருகின்றன. கல்விமான்களான ஆண் பெண் பாலினர் ஆயுள் முழுவதும் படித்துவந்தாலும் படித்து முடியாத அளவாகப் பல திறப்பட்ட வசனநூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில், அவரவர் தங்கள் மனப்போக்கினுக் கேற்றவைகளைத் தேர்ந்தறிந்து வாசிப்ப தொன்றுமே, அவர்களுக்குக் கஷ்டசாத்தியமான காரியமாக இராநின்றது. செய்யுள் வடிவமான நூல்களும், விசேஷ இலக்கணப்பயிற்சி முதலிய கஷ்டங்கள் இல்லாமலே, சிறிது கல்வியுடையவர்களும், அகராதி முதலியவற்றின் உதவியால், எளிதில் ஓதத்தக்கவை. ஆகவே, யுரோபியர், மிக்க பிரயாசை யில்லாமலே அறிவு தெளிந்து, காரியநிர்வாகம் செய்யத்தக்கவர்களாய், நாகரிக நிலைமையில் நம்மினும் சில படி மேற்பட்டவ ராகிவிட்டனர். செய்யுள் வடிவமான நமது நூல்களில் உள்ள கஷ்டம், நமக்குப் பிரத்தியக்ஷ அனுபவம். கல்விமான்கள் பொழுதுபோக்காகப் படிக்கத்தக்க வசனநூல்கள் இன்னின்னவென எடுத்துச் சொல்வது நமக்கு நாணும் தருவதாகும். சிறுவர் சிறுமியர்களும் கூலியாள் வேலையாட்களும் படிக்கலான புத்தகங்கள் வேண்டுமானல், ஏதேனும் கிடைக்குமா எனப் புத்தகக் கடைகள் தோறும் சென்று கேட்டறிதல் வேண்டும். இது விஷயத்தில் நாம் எச்சரிக்கைகொண்டு, ஏழைகளுடைய கண்களைத் திறவாவிட்டால், இனி நமது நாகரிக நிலைமை மேம்படாது, நாம் கடைப்பட்டவர்களாகக் கருதப்படுவோம். இப்பொழுது தமிழ் வசன நூல்களின் பூர்வோத்தரத்தை ஆராய்வோம்.

I. வசன நூல்களின் பூர்வோத்தரம்

வசனம் என்னும் வடமொழி, சொல் என்றும், வாக்கியம் என்றும் பொருள்படும். வாசகம் என்னும் வடமொழி, வசனம் என்னும் பொருட்டு. இவ்விரண்டும், கவியின் வேறாய சொன்னடையை உணர்த்தும். வசனித்தல் என்பது பேசுதல் என்றவாறு. கவியும் வசனமும், வடமொழியில், முறையே பத்தியம் கத்தியம் என்றும் வழங்கும். பத்தியமாவது, பாதங்களால் நடைபெறுவது. கட்டுரைப் போலியும், செய்யுட் போலியுமாக வருவது, கத்தியம். கவியின் வேறாய சொன்னடை, தமிழில் உரை எனப்படும். உரை என்பது, பேச்சு என்பதற்கும், வியாக்கியானம் என்பதற்கும் வழங்கும் வார்த்தை. பேச்சு என்னும் பொருளில், உரை என்பது உலகவழக்கு என்றவாறு 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' என்பதனால் இது விளக்கமாகும். செய்யுள் என்பது, முற்கால வழக்கில், இலக்கியச் செறிவுள்ள உரையையும் தழுவியிருந்தது. 'உரைச்செய்யுள்' என்ற வழக்கு இதற்குச் சான்று.

இலக்கணம் இலக்கியம் உரையெனப் பெயர்ப்பட்
டிருக்குமென் றெண்ணுக செய்யுளின் இயல்பே.

என்றது இலக்கணக்கொத்து. உலகவழக்காகப் பேசப்படுவதும் எழுதப்படுவதும், உரைநடை உரைவாசகம் என வழங்கும். உரைவாசகம் என்பது இருபெயரொட்டு. தமிழில், வசனம் என்ற வடமொழியே, சிலகாலமாய் உரைநடையைக் குறிப்பதாய்ப் பெருவழக்கின தாயிற்று. உறுதிச்சொல் ஏற்றசொல் பொருளுள்ளசொல் எனப் பொருள்படும் கட்டுரை என்ற வார்த்தையும், உரைநடையைக் குறிக்கின்றது. இது "கட்டுரை வன்மை" என்பதனால் போதரும். "கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து" எனத் தொல்காப்பியத்திலும் வருகின்றது.

பழைய சங்கநூல்கள் எல்லாம் பாக்களால் ஆனவை: முற்றும் உரைநடையான வசனநூல் யாதொன்றும் இல்லை. அடிவரையறையின்றி வரும் செய்யுளின் வகை,—நூலும் உரையும் பிசியும் முதுமொழியும் மந்திரமும் கூற்றிடை

வைத்த குறிப்பும் என ஆறென்றும், அவற்றுள் உரைப்பகுதி வழக்கு, — பாட்டிடைவைத்த குறிப்பும் பாவின்றெழுந்த கிளவியும் பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் பொருளொடு புணர்ந்த நகைமொழியும் என நான்கென்றும், வகைப்படுத் துரைத்தார் தொல்காப்பியர். அவற்றில், பாட்டிடை வைத்த குறிப்பு என்பது, ஒருபாட்டு இடையிடை கொண்டு நிற்கும் கருத்தினுன் வருவன. "தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்ற இடத்தில், 'தொன்மை என்பது உரைவிராய்ப் பழமையவாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது. அவை பெருந்தேவனுரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன' என்ருர் நச்சினூர்க்கினியர். சிலப்பதிகாரமும் ஒருவாறு இதன்பாற்படும். பாவின்றெழுந்த கிளவி என்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவது போல்வன. இறையனூர் அகப்பொருளுரை தொல்காப்பியவுரை திருக்கோவையாருரை திருக்குறளுரை முதலியன இதற்கு உதாரணம். கத்தியத்திற்குக் கொன்றைவேய்ந்தனை உதாரணமாகக் காட்டினர் வீரமாமுனிவர். அது, முதுமொழிக்காஞ்சி போன்று, குறள் வெண் செந்துறையின்பாற் படும்.

சைனர்கள் ஸ்ரீபுராணம் முதலிய சைன நூல்களையும், வைணவர்கள் அஷ்டாதசரஹஸ்யம் குருபரம்பராப்ரபாவம் முதலிய வைணவ நூல்களையும் வசனமாக எழுதியுள்ளனர். இவர்களுடைய வசனம், பெரும்பான்மை வடமொழிகளும் வடமொழித் தொடர்களும் நிரம்பி, சிறுபான்மைத் தமிழிடைச்சொற்களும் எச்சங்களும் முற்றுக்களும் விரவி, நடைபெறுவதாயிற்று. இந்நடை மணிப்ரவாளம் எனப்பெறும் வேறுவேருன இரண்டு பாஷையின் தனிமொழிகளும் தொடர்மொழிகளும், மணியும் பவளமும் (பவளம்—ப்ரவாளம்) விரவிக்கோத்த மாலைபோன்று, விரவி நடத்தலின், இந்நடை இப்பெயர் பெறுவதாயிற்று. சைனர்களும் வைணவர்களும் தங்கள் மதச்சார்பான தமிழ்நூல்களுக்குப்பற்றிய வியாக்கியானங்களும் இந்நடையினையே கொண்டொழுகுவனவாம். இவ் வசன நூல்களையும் வியாக்கியானங்களையும் இயற்றினோர் வடமொழியில் நிரம்பிய புலமை

உள்ளவர்கள். மதச்சார்பான விஷயங்களை வடமொழியில் நின்றும் தமிழில் கொணர்ந்து கூட்டினவ ராதலின், இவர்க ளுடைய வசனப்பாங்கு இங்ஙனம் மணிப்ரவாளம் ஆயிற்று.

இயற்றமிழ் வசனநூல்கள் முதலில் கிறிஸ்தவப் பாதிரி மார்களால் எழுதவும் எழுதுவிக்கவும்பட்டன. அவையெல் லாம் தங்கள் மதக்கோட்பாடுகளைப் பரவுவித்தற் கானவை. ஆயினும், தமிழ்வசனம் உலகவழக்கை ஒட்டி உருப்படுவ தற்கு அவை துணைக்கருவிகள் ஆயின. கட்டுரைநடைக்குக் கருக்கட்டினவர்கள் நமது பழைய உரையாசிரியர்களே. ஆயி னும், கருக்களைச் சீர்செய்து கொள்வதில் பாதிரிமார்களது வசன நூல்களுக்கு நாம் ஒருவாறு கடமைப்பட்டவர்கள் ஆகிறோம். வசன நூல்களை எழுத ஊக்கம் பிறப்பித்தவர் களும் பாதிரிமார்களே.

கிறிஸ்தாப்தம் பதினேழாவது நூற்றாண்டில், கிறிஸ்தவப் பாதிரியான ராபெர்ட் டி நொபிலிபஸ் (Robert de Nobili-bus) என்பவர், தத்துவபோதக சுவாமி என்னும் மறுநாமத் துடன், கிறிஸ்தவமதச் சம்பிரதாயமாகக் காண்டம்—ஆத்தும நிரியாணம் — தூஷணதிகாரம் என்ற வசனநூல்களை இயற் றினர். பதினெட்டாவது நூற்றாண்டில் இத்தலிதேசத்தி லிரு ந்துவந்த கிறிஸ்தவமதப் பிரவர்த்தகரான கான்ஸ்டான்ஷி யஸ் பெஸ்கி (Constantius Beschi)—தைரியநாதர்—என்ப வர், வீரமாமுனிவர் என்னும் பட்டப்பெயருடன், வேதிய ரொழுக்கம் (அல்லது உபதேச ரத்நாகரம்—1727)—வேதவிளக் கம் (1728)—ஞானவுணர்த்தல்—என்னும் கிறிஸ்தவ வசன நூல்களோடு, அவிவேக பரிபூரண குரு என்னும் கதையும் எழு தினர். இந்தக் கதை நகைச்சுவை மிகவும் விளைப்பதாய்ச் சிறுவர்களும் சிறுமியர்களும் படித்து ஆனந்திக்கத்தக்கது.

வைத்தியநாத தேசிகரும் சுப்பிரமணிய தீக்ஷிதரும் சுவா மிநாத தேசிகரும் இலக்கண சம்பந்தமாய்ச் சூத்திரமும் உரையும் எழுதினவர்கள். சிவஞானமுனிவர் இயற்றியன வெல்லாம் இலக்கண சித்தாந்த சாஸ்திர வுரைகளும் கண்ட னங்களுமேயாம். வடமொழியினின்றும் தருக்க சங்கிரகம் மொழிபெயர்த்தவரும் இவரே. இவையெல்லாம் புலவர்களே போற்றத் தக்கவை.

சிவஞான முனிவர்

பதினெட்டாவது நூற்றுண்டின் இறுதி வரையில் தமிழ்ச் சிறுவர்கள் கற்கலான வசன நூல்களை விரல்விட் டெண்ணுமிடத்தில், அவிவேக பரிபூரண குரு கதை ஒன்று எனச் சுண்டுவிரல் ஒன்றை மாத்திரமே மடக்கலாம்: மற்றை விரல்கள் நிமிர்ந்தே நிற்கும். பத்தொன்பதாவது நூற்றுண்டில் வித்தியா விசாரணையை ஆங்கிலேய துரைத்தனத்தார் மேற்கொண்ட பிறகே, தமிழில் சில வசனநூல்கள் ஒவ்வொன்றுகத் தலைகாட்டத் தொடங்கின. பத்தொன்பதாவது நூற்றுண்டின் முற்பாதியில் துரைத்தன கலாசாலையில் தமிழாசிரியராக இருந்த சரவணப்பெருமாளையர் தாண்டவராய முதலியார் முதலியோர், சிறுவர் சிறுமியருக்கேற்ற வசனநூல்கள் எழுதலாயினர். சரவணப்பெருமாளையர், கல்விப்பயன் என்கிற வியாசமும், பாலபோத இலக்கணம் என்கிற சிற்றிலக்கணமும் இயற்றினர். இதற்குமுன் சிறுவர்கள் கற்கலான இலக்கணம் வசனத்தில் இல்லை. அதனுல், முற்காலத்தில் சிறுவர்களுக்கு இலக்கணப்பயிற்சி சுத்த சூனியம். பெரியர்களுக்கும், இலக்கணம் கற்பது மலைகல்லி எலி பிடிப்பதாகவே இருந்தது.

தாண்டவராய முதலியார் தொகுத்த கதாமஞ்சரியும், மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழிபெயர்த்த பஞ்சதந்திரக் கதையும், சிறுவர்க்கென்று ஏற்பட்ட வசனநூல்களில் முக்கியமானவை. பஞ்சதந்திரத்தின் முதற்பதிப்பு கி—பி. 1825-ஆல் நிறைவேறியது. அதற்குமுன் வழங்கியிருந்த பஞ்சதந்திரக் கதை, குளிக்கப் புக்கோர் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல், தமிழ் கற்கப் புகுவோர் வழுக்களையே கற்றுத் தடுமாற்றம் உறுவதாக இருந்தது. முதலியாருடைய மொழிபெயர்ப்பு, மாணாக்கர்கள் உலகநடையும் செய்யுணடையுமான தமிழ் நன்குணரத்தக்கதாய்ச் சொற்பொருள் அழகு பெறச் சுவையுற்றது. கதாமஞ்சரி ஒருகால் மறக்கப்படினும் படலாம்: முதலியாருடைய பஞ்சதந்திரக் கதையோ, உலவாப் பெரும்புகழ் படைத்துத் தமிழரும் தமிழ்நூல்களும் உள்ளளவும் நின்று நிலவுறும் என்பது தமிழ்ப்புலவர் துணிவு. பிறகு மழவை மகாலிங்கையர், போதவசனம் என்ற நூல்

இயற்றினர். கதா சிந்தாமணி, ஆதிமூல முதலியார் என்பவர் எழுதியது.

திருச்சிற்றம்பல தேசிகர் என்பவர், இவர்கட்கு முன்னரே இராமாயணம் முழுவதும் கத்தியமாக எழுதினர். உத்தரகாண்டப் பகுதியின் முதற்பதிப்பின் முகதலை யேட்டிலே, "மல்வளம் பொருந்திய மாநில முழுவதும்—சொல்வள மிருதியிற் றுதிக்குஞ் சீர்த்தி-எல்லியாட் டரச னிசைமனு நெறியே-செல்வச் செங்கோற் செலுத்துங் காலத்து, இங்கிலீசு வருடம் ௲அ௱௰௫—சாலிவாகன சக வருடம் ௲எ௱௪௰௭—இதினிகழா நின்ற—பவ வருடத்தில், அரும்பல கலைக ளாய்ந்தறி செல்வன்—தரும்புகழ்ச் சங்கத் தாரவர் தம்மால்—தமிழ்ச்சங்கத்திற் றமிழ் கற்கப் புகுமவர்கள் சொல்லும் பொருளு மெளிதினுணர்தற் பொருட் டத் தமிழ்ச்சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பல தேசிகன் கொடுந்தமிழ் நடையொடுஞ் செந்தமிழ் நடைவிரா யேனைய காண்டப் பொருளுந் தொகையுறச் செய்த விராமாயணத் துத்தரகாண்டக் கதை தொண்ட மண்டலத்தின்கண் விளங்கிய சென்னபட்டணத்துக் கல்விச் சங்கத் தச்செழுத்தாற் பதிப்பிக்கப்பட்டது" என வரைந்திருக்கின்றது.

விவகார சங்கிரகம் என்பது (1826-ஆ அச்சிற் பதிப்பிக்கப்பட்டது) துரைத்தனக் கலாசாலையில் இருந்த மதுரை கந்தசாமிப்புலவர் மொழிபெயர்த்தது. அது கற்றோரும் மற்றோரும் விவகார விஷயங்களை உணரும்படி, தேவன்ன பட்டாசாரியன் என்னும் வேதியன், மிருதி வசனங்களை எடுத்துச் சேர்த்துச் செய்ததான மிருதி சந்திரிகையின் விவகார காண்டத்திற் கூறிய (விவகார சொரூபமும் நியாயஸ்தானங்களும் நியாய விசாரணை யதிகாரிகளும் இராசசாசன சொரூபமும் பத்திரபேதங்களும் இலிகித முதலிய சாதன விசாரணையும் விசாரணையின் விவரமும் சான்றினர் பேதமும் பிணையின் பேதமும் விவகார நிச்சய வகையும் ஜயதான தண்டங்களும் இவைகளைச் சேர்ந்த) பல விஷயங்களும், முன்பின் மலைவுறாமல் விளங்கத் தமிழில் வெளிப்படையான உரைநடையால் செய்யப்பட்டது. இது இப்பொழுது கிடைப்பது அரிதாகிவிட்டது. இதன் வாசகப் பாங்கின் அருமை



ஆறுமுக நாவலர்

யைக் கருதியேனும் ஒரு பதிப்புப் பதிப்பிப்பது தமிழ் மாணவர்க்கு மிக்க பயன் விளைப்பதாகும்.

பத்தொன்பதாவது நூற்றுண்டின் பிற்பகுதியில் பாலியர்களும் பாலிகைகளும் படித்தற்கான பல வசனநூல்கள் ஏற்பட்டன. இவற்றில் கண்டதும் கேட்டதுமான சிலவற்றை எடுத்துரைப்பது தகுதி. துரைத்தனக் கலாசாலையில் சுதேச பாஷைகளின் விசாரணைத் தலைவராக இருந்த வால்டர் ஜாயிஸ் என்பவர், சில தமிழ்ப்புலவருடைய உதவியால், மூன்று வாசக பாடங்களை உருப்படுத்தினர். இரண்டாவது மூன்றுவது வாசக பாடங்களில், பல பாடங்கள், இங்க்லிஷிலிருந்து சிறுவர்களுக் கேற்றவாறுக மொழிபெயர்க்கப்பட்டவை. இவை, பல்லாண்டு பல்லாண்டாக வாழாவிடினும், பல வருஷ காலம், சிறுவர் சிறுமியர் மாத்திரமேயன்றிப் பல தமிழ்ப் புலவரும், தமிழ் வசனம் வாசிக்கவும் எழுதவும் அறியத்தக்க சாதனங்களாகி இருந்தன.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் தமது சைவப் பிரகாச வித்தியாசாலைகளின் பொருட்டுப் பிரசுரம் செய்த பால பாடங்கள் செந்தமிழ் நடையிலே செவ்விதின் எழுதப் பெற்றவை. இவைகளில், நான்காவது பாலபாடம், செம்பாகமான உரைநடையிற் பயில விரும்பும் தற்கால மாணவர்க்கு நல்ல நடைவண்டியாக இராநின்றது. தோரணியாகச் சரித்திரம் கதை முதலியன எழுதுவதற்கான நடை பயில வேண்டுவார்க்கு, நாவலருடைய பெரியபுராண வசனம், ஏற்ற வழிகாட்டியாக இராநின்றது. இவர் இயற்றிய ஏனை வசன நூல்களாவன, திருவிளையாடற் புராண வசனம் — கோயிற் புராண வசனம் — சிதம்பர மான்மிய வசனம் — இலங்கைப் பூமிசாஸ்திரம்—கந்தபுராணத்தில் ஒருபகுதி முதலியனவாம்.

தினவர்த்தமானி என்னும் பத்திரிகையில் தாம் எழுதிய விஷயங்களைத் தொகுத்து, வீராசாமி செட்டியார், விநோத ரசமஞ்சரி என்னும் பெயருடன் வெளியிட்ட நூல், சந்தர்ப்பத்துக் கேற்ற பழமொழிகள் வழங்கப்பெற்று, மிக்க திரிபின்றி, பெரும்பான்மையும் உலகவழக்கை உள்ளிட்டுத்

திராக்ஷா பாகமாக இருத்தலால், தமிழறிந்த ஸ்திரீ புமான்கள் அனைவரும் எக்காலத்தும் படித்து மகிழத்தக்கது. அதிற் கண்ட விஷயங்களாவன,—ஆஸ்திக நாஸ்திக சம்வாதமாகச் செய்யப்பட்ட தெய்வக்கொள்கை, இந்துதேசப் பெண்களைக் குறித்து எழுதப்பட்ட கற்புநிலைமை, 1856—ஸு ஜூலைமீ 28வ இரவில் மார்ட்டின் சீமன்சன் முதலானவர்கள் சென்னைக் கவர்னர் மாளிகையில் விதம்விதமாக வாசித்த கீதவாதிய விநோதம், கற்றாய்ந்தொழுகல், பயனிலுழவு, மகாபண்டிதனை யமுனைத்துறைவரான சிறுபிள்ளை வென்றது, சுபட்ச விபட்ச சம்வாதமாகச் செய்யப்பட்ட காலபேத வியல்பு, நன்றி மறவாமை, கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி, கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது, ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடியது, ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது, புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடியது, ஏகம்பவாணன் சரித்திரம், என்பன.

விநோதரச மஞ்சரிபோல் திராக்ஷாபாகமாய், இன்னும் படிக்கலாம் பின்னும் படிக்கலாம் என்று படிப்பவர் விழையுமாறு வசனம் எழுதியிருப்பவர், வேதநாயகம் பிள்ளை என்பவர். இவர் மயூரத்தில் டிஸ்ட்ரிக் முன்சிப்பாக இருந்தவர். மதானுசாரத்தில் கிறிஸ்தவ ராயினும், தமிழ் நூல்களிடத்தும் தமிழ்ப்புலவ ரிடத்தும் ஆர்த்தி மிக்கவர். இவருடைய வசனத்தில் சில பாகங்கள், வேறொரு பாஷையில் மொழிபெயர்க்க இயலாத திறம் வாய்ந்தன: கேட்கக் கேட்கத் தெவிட்டாத செவியமுதம் ஆவன. இவர் வசனத்தை வசன பூஷணம் என்னலாம்: மணிவாசகம் என்னலாம். இவருடைய வசன நூல்களாவன, பிரதாபமுதலியார் சரித்திரம்—சுகுணசுந்தரி சரித்திரம் என்னும் அபிநவ கதைகளும், பெண்கல்வி—பெண் மதிமாலை என்னும் வியாசங்களுமாம்.

இராமலிங்க சுவாமி என்பவர் (திருவருட்பாப் பாடியவர்) மனுச்சோழ னரசாட்சியான மனுமுறைகண்ட வசனம் என்ற சிறுநூல் ஒன்று எழுதியிருக்கின்றனர். இது பெரியபுராணத்திற் கண்ட சரிதமே யாயினும், இவ்வசனத்தின் சுவை, முதனூற் சுவையினும் விஞ்சியிருக்கின்றது. ஜீவகாருண்ய வொழுக்கம் என்னும் வசனநூலும் இவர் இயற்றியதே.



இராமலிங்க சுவாமிகள்



சொ. வேலாயுத முதலியார்

இவர்க்கு மாணுக்கரும் இராசதானிக் கலாசாலையில் தமிழாசிரியருமான தொழூவூர் வேலாயுத முதலியார், வேளாண் மரபியல்—திருவெண்காட்டடிகள் சரித்திரம்—பெரிய புராண வசனம்—சங்கர விஜயம்—மார்க்கண்டேய புராணவசனம் என்னும் வசனநூல்கள் இயற்றியிருக்கின்றனர். சங்கர விஜயம் வடமொழியி னின்றும் மொழிபெயர்த்தது. வேளாண் மரபியல் வேளாளர் சூத்திர ரல்லர் என வாதிப்பது. ஏனைய செய்யுள் வடிவமான புராணங்களைக் கத்தியமாக அமைத்தன. பராசர ஸ்மிருதியின் ஆசாரகாண்டமும் வசனமாக அவர் மொழி பெயர்த்திருக்கின்றனர். மேற்படி கலாசாலையில் இவர்க்கப்பால் தமிழாசிரியராக இருந்த கிருஷ்ணமாசாரியர் என்பவர் அரிச்சந்திர சரிதை எழுதினர்.

இவருக்கு முற்பட்டவ ரிருவருக்கு முற்பட்டவராய், இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் புலமை நடத்திய ஸ்ரீநிவாசராகவாசாரியர், வடமொழியில் நிரம்பிய புலமை உடையவர். உத்தர ராமாயண வசனம்—விஷ்ணுபுராண வசனம்—தசகுமார சரித்திரம் முதலிய மொழிபெயர்ப்புக்கள் இவர் இயற்றின. அநிக கதா சங்கிரகம் என்னும் வசனநூல் எழுதினவரும் இவரே. இவருடைய வடமொழிப் புலமையும் தமிழ்ப் புலமையும் இவரியற்றிய தண்டியலங்கார சாரம் என்னும் அணிநூலால் விளங்கும். இவருடைய வசனத்தில் வடமொழிகளும் வடமொழித்தொடர்களும் வெகுவாய்ப் பிரயோகித்திருக்கும். சுலபமான நடையில் மாணுக்கர்களுக்கு விஷயங்களை எளிதில் விளக்குவது இவருடைய நோக்கம்.

துரைசாமி மூப்பனர் (கபிஸ்தலம்) என்பவர் அயோத்தி மாநகரமான்மியம் — ஜானகிபரிணயம் — பிரஸந்நராகவம் முதலான சில மொழிபெயர்ப்பு வசனநூல்களை இயற்றின தன்றி, வில்லிபாரதச் சுருக்கமும் வசனநடையில் எழுதினர் இவர் கடைசியாக எழுதியது இராமபத்திரீயம் என்பது. இதில் கல்வி—அறிவு—ஒழுக்கம்—மாதா—பிதா—குரு—தெய்வம்-தர்மம்—அர்த்தம்—காமம்—இல்வாழ்க்கை-விருந்தோம்பல்-செய்ந்நன்றி-அருள்—கொல்லுதல்—நிலையாமை—துறவு—ஊழ் என்னும் விஷ

யங்கள், நாலாயிரப் பிரபந்தம் திருக்குறள் முதலியவற்றிலிருந் தெடுத்த மேற்கோள்களுடனே, அங்கங்கே சில புராண கதை களையும் தழுவி, விவரிக்கப்பட்டுள்ளன.

ஜனவிநோதினி என்னும் மாதாந்தப் பத்திரிகை, புத்தக ரூபமாய், பல வருட காலம், சுதேச பாஷாபிவிர்த்தி சங்கத் தாரால் பரிபாலிக்கப்பட்டு நடந்தேறிவந்தது. சாஸ்திர சம் பந்தமும் சரித்திர சம்பந்தமும் ஆன விஷயங்களையும், பல கல்விமான்கள் அரசர் வீரர் முதலியோருடைய வரலாறுகளை யும், விநோதமான சில கதைகளையும், இங்க்லிஷிலிருந்து மொழி பெயர்த்து விளக்குவதே, அந்தப் பத்திரிகையின் நோக்கம். இந்த நோக்கத்தை நன்கு நிறைவேற்றிவந்த தன்றி செய்யுட்போலியான கத்தியநடையை அறவே ஒழித்து, சிறு வரும் எளிதில் விஷயங்களை உணருமாறு மிகவும் தெளிவான நடையை, அந்தப் பத்திரிகை அநுசரித்துவந்தது. இந்தச் சங்கத்தா ருதவியால், சில சமஸ்கிருத நாடக கதைகளும், சில ஷேக்ஸ்பியர் நாடக கதைகளும், பாலியருக்குரிய சில கட்டுக்கதைகளும் உண்மைச் சரித்திரங்களும், மொழி பெயர்க்கப்பட்டுப் பிரசுரமாயின. சுதேச பாஷாபிவிர்த்திக்கு அநுகூலமான நூல்களை அச்சியற்றுவோர்க்கு இச்சங்கத்தார் இன்னும் இயன்ற உதவி புரிந்துவருகின்றனர்.

புதினமான வர்த்தமான பத்திரிகைகள் ஏற்பட்டுப் பல வருஷமாக நடைபெற்று வருகின்றன. இலக்கிய வாராய்ச்சி செய்ய இயலாத வர்த்தகர்களும் பெண்பாலினரும் எளிதில் பல விஷயங்களை அறிவதற்கும், பாமர சனங்கள் நாளடை வில் படிப்படியாய் அறிவு தெளிந்து நன்மை யடைவதற்கும், இவை சாதனங்க ளாகின்றன. இவை பெரும்பான்மையாய் இங்க்லிஷ் முதலிய பத்திரிகைகளின் சாராமிசங்களை அவசர கோலமாய் அள்ளித் தெளிப்பவை. ஆதலால், நடையின் செவ்வியும் பாஷாபிவிர்த்தியும் நாடுதலான வித்தியார்த்தி களுக்கு இவை ஏற்றனவாகா. ஆயினும், எல்லாச் சனங்க ளிடத்தும் காலரீதியை அநுசரித்த புது விஷயங்களும் புதுக் கருத்துக்களும் பரவுவதற்கு, வர்த்தமான பத்திரிகைகளிலும் சிறந்த சாதனம் வேறெதுவும் இல்லை.

சில வருடங்களாகச் சில அபிநவ கதைகளும் சில வசன நாடகங்களும் சில வியாசங்களும் வெறுங்கதைகளும் சிலர் எழுதிவருகின்றனர். சில நாடகங்களும் வியாசங்களும் நேரான மொழிபெயர்ப்புக்களாகவும் எழுதப்பட்டுவருகின்றன. இங்க்லிஷின் சாரமாகவும் சில எழுதப்படுகின்றன. இவற்றில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இன்னும் தீர்க்கமாக ஏற்படவில்லை. பழையன கழிதலாய்ப் புதியன புகுதலாய்க் காலதேச வியல்பு மாறிவரினும், சத்துள்ளனவாய் எஞ்சிநிற்கும் காலங்கண்ட பழம் பனுவல்களே புலவர் போற்றுவன. புலவர் போற்றுவது பழம் பனுவல்களே யாயினும், புலவர் திலகரானவர்கள் புதுக்கால் வெட்டாமல் இரார். புதுக்கால் பயன் தருவதாயின் காலக்கிரமத்தில் போற்றப்பட்டு வரும்: இல்லையாயின் தானே தூர்ந்துபோய்விடும்.

II. வசன நடை

நடையின் செவ்விக்குரிய அமிசங்களை, இங்க்லிஷில் ஆராய்ச்சி செய்து, சில ஆசிரியர்கள், சாஸ்திரரீதியாக விளக்கியிருக்கின்றனர். இங்க்லிஷ் பயிற்சி இல்லாதவர்க்கும், இங்க்லிஷில் அவ்வாசிரியர்கள் கூறியிருப்பதைத் தமிழில் ஏற்ற பெற்றி அமைத்துக்கொள்ள இயலாதவர்க்கும் உதவியாக, இங்க்லிஷ் ஆசிரியர்கள் கூறிய சில கூறுகளையும், தமிழாசிரியர்கள் கூறியிருக்கும் சில கூறுகளையும், இயையும் அளவாக இணைத்து, நடையின் செவ்வியை விளக்குவது நன்மையே. தமிழில், வசன நடையின் அமிசங்களை ஆராயப் புகுவது, புது முயற்சியாதலால், சில கூறுகளை மயங்கியுரைப்பது கூடும்; சில கூறுகள் புலனாகாது விடுபட்டிருப்பது கூடும்; சில கூறுகள் குன்றக்கூறலாக இருப்பதுங் கூடும். ஆராய்ச்சி சிறத்தலாகும்போது, இவையெல்லாம் திருத்தம் எய்தும்.

நடை என்பது தமிழிலே ஒழுக்கத்துக்கும் பெயர், செல்லும் செலவிற்கும் பெயர். வேறு அர்த்தமும் அதற்கு உண்டு. எந்த அர்த்தத்திலும் இம்மொழிக்கு நட என்பதே பகுதி. ஆகவே நடை என்பது, செல்லும் செலவு என்னும் அர்த்தத்தில் தொழிற்பெயரும், மற்ற அர்த்தங்களில் தொழிலாகு பெயரும் ஆகும். சொன்னடை வாக்கியநடை உரைநடை

செய்யுணடை நூனடை என்ற வழக்காறுகளில் நடை என்பது ஆகுபெயர்ப் பொருளதே. நூனடையாவது, நூல் செல்லும் செலவு, நூற்பொருள் செல்லும் செலவு என்பதாம். கானடையின் நோக்கமாவது, ஒருவன் ஓரிடத்திருந்து பிறி தோரிடத்துச் சென்று சேர்தல். நூனடையின் நோக்கமாவது, ஒரு கருத்து ஒருவன் மனத்திருந்து பிறனொருவன் மனத்துச் சென்று சேர்தல். ஓரிடத்திருந்து பிறிதோரிடத்தில் ஒருவன் சென்று சேர்தற்குக் கால் கருவி. ஒருவன் மனத்திருந்து பிறனொருவன் மனத்தில் ஒரு கருத்துச் சென்று சேர்தற்குக் கருவியாவது சொல்.

ஆகவே நூனடையின் கூறுகளாவன கருத்தும் சொல்லும் என இரண்டு. கருத்தாவது கருதிய பொருள்: சொல்லாவது அப்பொருளை உரைக்கும் உரை. ஒரு நூலின் நடை சிறந்தது என்பார் குறிப்பாவது, அந்நூல் தான் கருதிய பொருளை உரைக்கும் செவ்வி சிறந்தது என்பதாம். உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. கருதிய பொருளுக்குரிய சொற்களும், கருதிய பொருளுக் குரிய தொடர்களும், அவற்றிற்குரிய இடங்களில் பொருந்தி நடப்பதே, முற்றுத் தொடர்மொழி என்பதான வாக்கியநடை. கருதிய பொருளுக்குரிய சொல்லாவது, மரபு வார்த்தை. "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே." சொற்களும் தொடர்களும் உரிய இடங்களில் நிற்றலாவது, அந்தந்த பாஷையின் போக்குக்கு ஏற்றவாறாக, எழுவாய் செயப்படுபொருள் பயனிலை முதலிய அங்கங்கள், கருதிய கருத்துக் கேற்ப, வாக்கியங்களில் உரிய விடங்களில் பொருந்தி நிற்றலாம்.

வாக்கிய நடையிலே, பொருளும் சொல்லும், உள்ளிட்ட பொருளும் அதனை வெளியிட்ட சொல்லும், கருதிய கருத்தும் அதனை உரைக்கும் உரையும், — பருந்தும் அதன் நிழலும், மலரும் அதன் நாற்றமும், மணியும் அதன் ஒளியும் போல்வன. சொல்லொடுபட்டுக் கருத்து நடைபெறுவது, உடலொடுபட்டு உயிர் இயங்குவது போலாம். பொருளும் சொல்லும் அபேதம். பொருளும் சொல்லும் அபேதமாயினும், தோற்றக் கிரமத்தில் பொருள் முற்பட்டது; சொல்

அதன் வழிப்பட்டது: கருத்து முற்பட்டது; உரை அதன் வழிப்பட்டது. சட்டியில் உள்ளதுதான் அகப்பையில் வரும். பொருளின் செவ்வியே சொல்லின் செவ்வி: கருத்தின் செவ்வியே உரையின் செவ்வி. உரைக்கலான பொருள் இல்லையாயின், உரைக்கலான உரையும் இல்லை. உரைக்கலான பொருள் உள்ளத்தில் உருப்படுமாயின், அதனை உரைக்கலான உரையும் வாக்கில் உதித்தலாகும். உரைக்கும் பொருள் உசிதமாயின், உரைக்கும் உரையும் உசிதமாகும். 'நினைப்பின் வழியது உரை.'

ஒருவனது நூனடை சிறந்தது என்ற குறிப்பு, அந்நூல் அவன் கருதிய கருத்தை உரைக்கும் செவ்வி சிறந்தது என்ற குறிப்பேயாம் என்பது முன்னர்க் கூறப்பட்டது. அஃதாவது, அந்தக் கருத்தை வேறுவிதமாய் உரைக்கலான எவ்வகைத் திறத்தினுங் காட்டில், அந்நூல் அக்கருத்தை உரைத்துக் காட்டும் திறமே சிறந்தது; அந்நூல் அக்கருத்தை உரைத்துக் காட்டும் திறத்தினும் சிறந்தது வேறின்று என்பதாம். ஒரு கருத்தைப் பலவகைத் திறப்பாட்டினால் உணர்த்தல் கூடும். ஆயினும், உரைக்கும் உரையின் திறம் வேறுபட்டவிடத்துக் கருத்தின் திறமும் வேறுபடுவதாகும். கருத்தின் திறம் வேறுபடாது, அக்கருத்தைப் பிரதி சாயலாகப் பிடித்துக் காட்ட வல்ல உரையின் திறப்பாடு ஒன்றே. அத்திறப்பாட்டினை உணர்ந்து உரைப்பதே, நூனடை செவ்விபெறுதலான மர்மம். நூல் நவிற்றொறும் நயம் பயத்தலான காரணம் இதுவே. இந்த மர்மம் எல்லாருக்கும் சித்தி ஆவதொன் றன்று. ஒவ்வொரு காலவிசேஷத்தில் ஒரொருவரே இந்தச் சித்தியை அடைபவர். 'வார்த்தை பதினாயிரத் தொருவர்.' தமிழில் சொல்வன்மை நாநலம் என்பன இந்தச் சித்தியே.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

என்ற குறள், இந்த வாக்குச்சித்தியை நன்கு விளக்குகின்றது.

நூனடை செவ்வி பெறுதலான இந்தச் சித்தி, தொட்டுக் காட்டியும் சுட்டிக்காட்டியும் விளக்குவதான ஓர் வித்தை யன்று. 'தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும்

வராது' என்கிற விதி, இதற்கு முற்றும் பிரயோகமாகாது. கவிகள்போலவே, கட்டுரை எழுதுவோரும், கருவிலே திரு வுடையவர். நாநல முடைமை, பிறவிக் குணங்களில் ஒன்று. "தெய்வப் புலவனுக்கு நா உணரும் (சித்திர ஓடாவிக்குக் கை உணரும்)" என்பது கவிநடைக்கு மாத்திரமே யன்றிக் கட்டுரை நடைக்கும் பொருந்துவ தென்பது, சிறந்த வசன நடையின் திறங்களைக் கூர்ந்து உய்த்துணர்ந்தவர் கண்டபடி. வசனத்தில், உரிய சொற்களாகிய நன்மொழி புணர்த்தியும், நவின்றோர்க் கினிமை தருவதான ஓசையூட்டியும், செவ்வி செய்த நடையாகிய நவநீதம், தெய்வப்புலவர் எனப்படும் வாக்கிகட்கே கைவல்யம்.

இவ்வித அமிர்தவாக்கு இவர்கட்கு இயல்பு. ஏனையோர் இவர்களைப்போல் வாக்குச்சித்தி அடைவது, யாமைமயிர்க் கம்பலம் அடைவதேயாம். நளபாகம் வீமபாகம் என்பன அனைவர்க்கும் கைவருவதில்லை. ஆயினும், பழக்கம் வழக்கம் அன்றோ. செந்தமிழும் நாப்பழக்கம்: நடையும் நடைப் பழக்கம். ஆகையால், சிறந்த வசனநடைகளிற் பழகி, அவற் றின் சூக்குமங்களை அறிந்து கடைப்பிடித்தலால், காரிகை கற்றுக் கவிபாடுவார் போல, வசனநடையில், சிலர், ஒரு பரியாயமாக வாக்குச்சித்தி அடையலாம்.

வாக்குச்சித்தி அடைவதில் ஒவ்வொருவரும் கவனிக்கத் தக்க சில அமிசங்கள் உண்டு.

> இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
> நடைதெரிந்த நன்மை யவர்

எனுங் குறள், அமைச்சர் அவையறிந்துரைத்தலை நோக்கிய தேனும், நூலாசிரியர் நூலோதுவாரை அறிந்துரைத்தலின் மேற்றாகவும் கொள்ளக்கிடக்கின்றது. இதன்பொருள், சொற் களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினை உடையார், ஒன்று சொல்லுங்கால், அதன் செவ்வியை ஆராய்ந்தறிந்து, வழுப்படாமல், மிகவும் தெளிந்து சொல்லுக என்பதாம். சொற்களின் நடையாவது, சொற்கள் பொருள்களைப் பயக்கு மாறு. செவ்வியாவது, கேட்டற்கண் விருப்ப முடைமை. இங்ஙனம் கேட்டற்கண் விருப்ப முடைமைக்குக் காரண

மான நடையின் குணங்களாவன:—வழுவின்மை – சுருங்குதல்—விளங்குதல்—இனிதாதல்—விழுப்பயன்றருதல் என்றிவை முதலாயின என்பர் பரிமேலழகர். அமைச்சியலுக் குரிய சொல்வன்மை இவற்றை உள்ளிட் டிருக்குமாறே, நூலுக் குரிய சொல்வன்மையும் இவைகளை உள்ளிட்டிருப்பது ஒருதலை.

இங்ஙனம் திருவள்ளுவரும் பரிமேலழகரும் கூறிய கூற்றை மூலபாடமாக வைத்துக்கொண்டு, நடையின் திறங்களை ஒருவாறு விரித்துரைத்தல் ஆகும். சொற்கள் பொருள்களைப் பயக்குமாறு முன்னமே ஒருவாறு உரைக்கப்பட்டது. சொற்களின் திறங்களை முதலில் சிறிது ஆராய்ந்துகொள்வோம்.

சொற்களானவை, செஞ்சொல் ஆக்கச்சொல் குறிப்புச் சொல் என மூன்று வகைப்படும். அவற்றால் குறிக்கப்படும் பொருளும், செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருள் என மூன்று வகைப்படும். செஞ்சொல்லாவது, நேராற்றலால், அதாவது இச்சொல்லால் இப்பொருளை அறிக என்னும் சங்கேதத்தால், பொருளைத் தருவது. இடுகுறி காரணக்குறி காரணவிடுகுறி என்பவை, இதன் வகை. ஆக்கச்சொல்லாவது இலக்கணையால் பொருள் தருவது. ஆகுபெயர் உருவகம் முதலியன இதில் அடங்கும். குறிப்புச்சொல்லாவது குறிப்பால் பொருள் தருவது. குறிப்பாவது செம்பொருளும் ஆக்கப்பொருளும் அல்லாத வேறு பொருளைத் தரும் செய்கை. ஒட்டு (பிறிதினவிற்சி)—பரியாயம்—மாறுபடு புகழ்நிலை—புகழாப்புகழ்ச்சி முதலியன இங்ஙனம் குறிப்பால் பொருள் தருவன. செஞ்சொற்கள் மாத்திரமே மரபுபற்றி வருவன: இவைகளே வெளிப்படையால் பொருள் உணர்த்துவன. ஆக்கச்சொற்கள் குறிப்பால் பொருள் உணர்த்துவன வாயினும், குறிப்புச்சொற்களின் வேறானவை.

இவ்வகைப்பட்ட சொற்களைக் கையாளும் திறம், நூலாசிரியர்க்கு இன்றியமையாதது. இத்திறம், நிகண்டு திவாகரங்களை நெட்டுருப்பண்ணுவதனால் மாத்திரமே கைவருவதன்று. கல்வி கேள்விகளால் செய்யுள் வழக்கையும் உலக வழக்கையும் நுனித்தறிவதான பாஷா ஞானமே, சொற்களைக்

கையாளுந் திறத்துக்கு ஆதாரம். செய்யுள் வழக்கிற்கே உரிய திரிசொற்களை வகுத்துக் காட்டிய சதுரகராதியில் உள்ள சொற்கள் பன்னீராயிரத்துச் சில்லரை. யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ சங்கத்தார் பதித்த பேரகராதி, இயற்சொற்களையும் உள்ளிட்டு, ஐம்பத்தெட்டாயிரத் தைந்நூறு சொற்களை உடையது. ராட்லர் வின்ஸ்லோ என்னும் கிறிஸ்தவப் பாதிரிமார் பதிப்பித்த அகராதிகளில் இன்னும் பலவாயிரம் உண்டு. பாஷாஞானம் உள்ளவன் இத்தனைச் சொற்களையும் கையாள்வது இயலாது. தான் இயற்றப் புகுதலான நூற்பொருளுக்கேற்ற சொற்களையும் அவற்றின் பிரயோகங்களையும் அறிவது ஒருதலை. இங்ஙனம் சொற்களைக் கையாள்வதில் தமிழ்ச் சொற்கள் மாத்திரமே சாலா. சில பொருள்களையும் கருத்துக்களையும் சில வடசொற்களும் சில திசைச்சொற்களும் நன்கு விளக்குவனவாக இருத்தலால், அவற்றின் பிரயோகங்களை அறிவதும் ஒருதலையே. கற்போர் நெஞ்சம் கீழுறுமாறு சொற்பொரு ளுணர்த்தும் சொல்வன்மை பெறவேண்டுவான், இங்ஙனமாக மொழித்திறத்தின் முட்டறுத்தலே, முதன்மையாகக் கொள்ளத்தக்க விஷயம்.

மொழித்திறத்தின் முட்டறுத்து, அவ்வவ்விடத்துக்குரிய நன்மொழி புணர்த்தலோடு, நவின்றோர்க் கினிமை தருவதான ஓசையூட்டுந் திறமும், இனிதாதல் எனப் பரிமேலழகர் கூறிய குணத்தில் அடங்கும். செய்யுளில் எதுகை மோனையோடு சீர்களின் இயைபும் சந்தவின்பம் தருவது போல, வசனத்திலும் சந்தவின்பம் தருவனவான கூறுகள் சில உண்டு. அவையாவன, எதுகை மோனைகள் ஏற்றபெற்றி ஓரோவிடத் தியைவதும், குறில் நெடில்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப அளவுபட வருதலும், வன்கணமும் மென்கணமும் சால மிகாது முக்கணமும் விரவி வருதலும், இன்றியமையாத சந்திகளை மாத்திரம் அமைத்து இசையறுப்பதும் முதலியனவாம். இவையெல்லாம் இரசிகர்க்கே இயல்பாக இயையும். இரட்டைக்கிளவி—அடுக்குத்தொடர்—மீமிசை—மடக்கு—சிலேடை — சொற்பின் வருநிலை — விரோதவணி முதலியவற்றால் சொல்லின்பம் பெறவைப்பதும் இங்கே கொள்ளத்தகும். பொருட்சுவை இல்லாதவிடத்துச் சொற்சுவை உண்டாகாது.

பொருட்சுவை சொற்சுவை என்னும் இரண்டும் இயைந்து நடத்தலே இனிதாதலாம்.

வழுவின்மையை நடையின் செவ்விகளில் ஒன்றாக வைத்தார் பரிமேலழகர். வழு, சொல்வழு பொருள்வழு என்பன. பொருள்வழுவைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சி யின்று. சொல் வழுவாவது சொல்லின் குற்றம்: சொல் இலக்கணப் பொருத்தம் இன்றி வருவது. வழூஉச்சொற்புணர்த்தல் என்ற குற்றம் இதுவே. சந்திவழு முடிபுவழு என்னும் வழுக்களும் ஓம்பற்பாலனவே. வலி மிகுதலான இடத்தில் இயல்பாக விடுதலும் இயல்பாமிடத்தில் மிகுதலாக விடுதலும் ஆகிய வழுக்கள், கற்கறிக்குமாறு அட்ட அடிசில்போல், படிப்பவன் வாய்க்கும், அபசுவரம் கலந்த கீதம்போல், கேட்பவன் செவிக்கும், அருவருப்புத் தருவனவாகும். முடிபு வழுக்கள் வெளிப்படை. இன்னோரன்ன வழுக்களைத் தவிர்த்தற்கு எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அறிவது அவசியம்.

நடையின் செவ்விக் குரிய குணங்களில் சொல் சுருங்குதல் ஒன்று. அதாவது 'மிகைபடச் சொல்லேல்' என்பதாம். பரந்துரைத்தலும் பாரித்துரைத்தலும் ஆகா. குன்றக் கூறலும் குற்றமே. "ஒருங்கெனைத்தும், சில்லெழுத்தினாலே பொருளடங்கக் காலத்தால், சொல்லுக செவ்வி யறிந்து" என்பதே சுருங்கச் சொல்லுதலின் சூட்சுமம். இது நூலினுக்கு அழகென்று வரையறுத்த பத்தில் ஒன்று.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

சுருங்கச் சொல்லுமிடத்து, மயங்கவைத்தல் ஆகாது: நின்று பயனில்லாத சொற்களை நீக்குதல் வேண்டும். தொகுத்துச் சுட்டல்—வகுத்துக் காட்டல்—ஒப்பின் முடித்தல்—மாட்டெறிந் தொழுகல்—உரைத்து மென்றல்—உரைத்தா மென்றல்—எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்—சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்—ஒன்றின முடித்த றன்னின முடித்தல் முதலிய தந்திர வுத்திகளை அனுசரிப்பது சுருங்கச் சொல்லுதலுக்குச் சிறந்த உபாயங்களாம்.

விளங்குதல் என்பது தான் கருதிய பொருள் பிறருக்கு உள்ளவாறு விளக்கமாதல். அங்ஙனம் உரைப்பது விளங்க

வைத்தல் என்னும் அழகு: அதாவது, பொருளைச் சந்தேகத்துக்கு இடமாகாது விளங்கவைத்தல். நூனடையில் இந்த அம்சம் மிகவும் முக்கியமானது. பொருள் கருகலின்றி வெளிப்படையாகத் தெளிந்துநிற்பதே விளங்கவைத்தலின் நோக்கம். சாஸ்திர சம்பந்தமான பொருள்களை விளக்குமிடத்தில், நூலாசிரியன் எவ்வளவு விளக்கமாகக் கூறினும், அந்தச் சாஸ்திரத்துக்குரிய பரிபாஷை பயிற்சியாகிற வரையில் மாணாக்கன் நூனுதலும் பொருளை எளிதின் உணர்தல் ஆகாது. இது நூலாசிரியனுடைய குற்றம் அன்று. பரிபாஷை இன்றியும் சாஸ்திரப் பொருள்களைத் திட்பமாகவும் நுட்பமாகவும் வரையறுத் துரைப்பதும் இயலாது. அந்தந்த நூலைக் கேட்டற்குரிய அதிகாரியின் திறத்துக் கேற்ப ஐயம் திரிபுகளுக்கு இடமின்றி, பொருள் உள்ளவாறு தெளிவாக விளங்குமாறு உரைப்பதே விளங்கவைத்தலின் நோக்கம். தன்மை நவிற்சி—உவமை காட்டல்—உதாரணம் காட்டல்—மேற்கோள் காட்டல்—இன்னதல்ல திதுவெனமொழிதல் முதலியன, விளங்கவைத்தலுக் குரிய சாதனங்களாம். வாக்கியங்களையும் பங்க்திகளையும் இயல்களையும் முறையின்வைத்தலும் ஒருதலை.

விழுப்பயன்றருதல் என்பது விழுமியது பயத்தல் என்னும் அழகையே கருதிற்று. அது நுண்பொருள் (உசிதமான பொருள்) பெறும்படி நிற்றல். 'அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே' யாதலால், இந்தப் புருஷார்த்தங்களில் ஒன்று தருவதாக நிற்றலே விழுப்பயன்றருதலாம். ஒரு பயன் கருதாத நூல் இல்லை. புருஷார்த்தங்களுக்குக் கருவியான விழுப்பயன் தருதலாகக் கொள்ளலும் ஆகும்.

இங்ஙனம் இழுமென்மொழியான் விழுமியது நுதலும் நோக்கம் இல்லாதவன் நூலெழுதப் புகுதற்பாலன் அல்லன். அவன் அது செய்வது வெறுஞ்சட்டி தாளிப்பதே. தனது மனத்தின் இயல்பான போக்குக்கு மாறான பொருள்களின் கூறுபாடுகளை விரித்தற்பொருட்டும் ஒருவன் நூலெழுதப் புகுதற்பாலன் அல்லன். அவன் அது செய்தல் அகாரியமே. மனப்போக்கொடு மாறுகொள்ளாமல் பொருந்திய விடத்தும், கூறலுற்ற பொருளின் கூறுபாடுகளைப் பூர்வோத்தரமாய்த்

தீர்க்கமாக அறியாதவன் எழுதுதலான நூல், சென்றுதேய்ந் திறுதலாகும். அந்நூல் குறைகுடமே. பிறருடைய நடையின் போலியாக எழுதப் புகுவது, அன்னநடை நடக்கப் போய்த் தன்னடையும் கெடுவதே. பிறர் பின்பற்றத் தக்க நூனடை, தீர்ந்த நடையாகக் கொள்ளப்படாது. பிறர் நடையைப் பின்பற்றிய நூல், திட்பமும் நுட்பமும் இல்லதே யாகும். பிற நூற்பொருளையும் பிற நூனடையையும் பின்பற்றித்தொடுத்த நூல்கள், ஒட்டிட்டுத் தைத்த உடைகள் போலாம். அவை ரம்மியம் தருவதும் இல்லை: நூற்கணக்கில் வைத்து எண்ணப்படுவதும் இல்லை.

நூனடையின் செவ்வியால் நூலாசிரியன் செவ்வி தானே விளங்கும். உரையின் செவ்வி உரைப்போன் செவ்வியே. உரைத்தவனை உணராதவிடத்தும், உரையின் செவ்வி அவனது செவ்வியை உணர்த்தும். வெள்ளிப்பாட்டு வெள்ளிப்பாட்டே. அநுமன் மாணிவேடங்கொண்டு மறைய நின்றும், இராமன்

> ஆற்றலும் நிறைவும் கல்வி யமைதியும் அறிவும் என்னும்
> வேற்றுமை இவனோ டில்லை யாமென விளம்பல் உற்றான்.
>
> இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
> கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
> சொல்லாலே தோன்றிற் றன்றே.

என்றதிசயித்தான். ஒரு நூலை இயற்றுவித்தோன், தான் அதனை இயற்றினனாக வெளியிடினும், உள்ளபடி இயற்றினன் பெயர் வெளிவராமற் போவதில்லை. நூலாசிரியன் திறங்களெல்லாம் நூனடையால் விளங்கும். நூலாசிரியனுடைய மனத்தின் இயல்பான போக்கு—அவன் கல்வியின் தன்மை—அவனது நட்பினர் குணங்கள்—பிரபஞ்ச விலாசத்தில் அவன் சூட்சுமித் தறிந்த பிரகிர்தி விசேஷங்கள் — அவனுடைய தொழின்முயற்சி — குடிப்பிறப்பு—குடியிருக்கையின் சுற்றுச் சார்புகள் முதலிய எல்லாவற்றையும் அவனது நூல் நேர் சாயலாகக் காட்டும். ஆசிரியனும் அவன் இயற்றிய நூலும் பிம்பப் பிரதிபிம்பங்கள் 'செய்தானை ஒவ்வாத பாவையோ வில்.' ஒரு நூலாசிரியனைக் கண்டறிந்தவர்களும், அவன் ஜீவ சரிதத்தின் விசேஷாமிசங்களைக்கேட்டறிந்தவர்களும், அவன்

இயற்றிய நூலின் பொருட்டிறங்களை நன்கறிதலான காரணம் இதுவே. இருவர் ஒருசாலை மாணுக்கராய் ஓராசிரியனிடத்தே பயின்றவிடத்தும், அவர்களுடைய நூற்பொருளும் நானடையும் வேறுபடுதற்குக் காரணம், மேற்கூறிய மனத்தின் இயல்பான போக்கு முதலியனவும், பாரம்பரிய விசேடமும், அவர்களிடம் வேறுபடுவதேயாம். தான் கூறப்புகுந்த விஷயங்களுக் கேற்றபடி, ஒருவனுடைய நடையே, ஒரு நூலில் ஒருவிதமாகவும், வேறொன்றில் வேறொரு விதமாகவும், இருக்கும். ஒரே நூலில் தானும், ஒருவனுடைய நடை, அவ்வச் சந்தர்ப்பத்தில் அமைதலான இரசத்துக் கேற்றவிதமாகவும் மாறிவரும்.

கல்லூரி மாணுக்கர்கள், தமிழில் வசன நடையில் பழகி, தாங்கள் எழுதவேண்டிய வியாசங்களைச் செம்மையாக எழுதுவதற்கு ஆதாரவாகத் தக்க சில தமிழ் வசனநூல்களின் பெயர்களைக் குறித்துக் கொடுக்குமாறு, வருஷந்தோறும் தமிழாசிரியர்களைக் கேட்பதுண்டு. என்னளவிலே அவர்களை நான் ஓதும்படி சொல்வ தெல்லாம், முறையே பஞ்சதந்திரம் விநோதரசமஞ்சரி ஆறுமுகநாவலருடைய பெரியபுராண வசனம் நான்காவது பாலபாடம் என்பவை. பின்னும் படிக்கத் தக்கவைகளைக் கேட்டால், இப்பொழுது அச்சிட்டுள்ள இலக்கண விலக்கியங்களில் எழுதியுள்ள முகவுரை சரித்திரச்சுருக்கம் முதலியவற்றைப் படித்தலாம் என்பேன். அதுவும் செய்து அப்பால் வந்து உசாவுகின்றவர்களை, அவர்கள் திருக்குறளில் படிக்கவேண்டிய பாடத்தின் உரையைச் சாவதானமாகப் பலமுறை படிக்கும்படி வற்புறுத்துவேன். உள்ளபடியே இவ்வளவும் செய்தவிடத்தும் தங்கள் வசனம் செவ்வி அடையவில்லை என்பார்க்குப் பரிகாரம். இங்கிலிஷி லிருந்து மொழிபெயர்க்கத் தக்க வசன நூல்களில் சில பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தலான் அப்பியாசமே. இந்தப் பரிகாரத்தை விடாமுயற்சியாகப் பரீக்ஷித்துப் பார்ப்பவர் மிகச் சிலர்.

தாய்ப்பாஷைக்கு வேறான போக்கினையுடைய அந்நிய பாஷையிலிருந்து சில நூற்பகுதிகளை மொழிபெயர்த்தலான அப்பியாசங்களைச் சிலகாலம் செய்தலால் விளையும் நன்மைகள்

பல. அந்நிய பாஷையின் கருத்துக்கேற்ற சொற்களையும் தொடர்களையும் நமது பாஷையில் அமைப்பதில், பல சொற்களின் பிரயோகங்களையும் பல தொடர்களின் பிரயோகங்களையும் பலபடத்துருவிப்பார்ப்பதும், அவைகளில் பொருத்தமானவைகளைத் தேர்ந்துகொள்வதும் அவசியம் ஆகின்றன. இவ்வாராய்ச்சி மொழித்திறத்தின் முட்டறுப்பதற்கு மிகச்சிறந்த உபாயம். பாஷைக்குப் பாஷை முடிபின் போக்கிலே வேறுபடுவது சகசம். அந்நிய பாஷையில் உள்ள முடிபுகளை நமது பாஷையின் போக்குக் கிசைந்தவாறாகக் கருத்துச் சிதைவுறாமல் அமைப்பவர்க்கு இரண்டு பாஷையிலும் பாண்டித்தியம் வேண்டும். சொந்தப் பாஷையில் எவ்வெவ்விதமாகப் பிற பாஷையின் முடிபை அமைக்கலாகு மென்று பலபடியாக முயல்வதனால், வாக்கியநடை செவ்வியுறும். நல்ல நூல்களைப் படிப்பதோடு, இங்ஙனம் மொழிபெயர்த்தலான அப்பியாசங்களை முயன்று வருவதனால், வசனநடை நாட்குநாள் வாய்ப்புற்றுவரும்.

கம்பர்

செய்யுள்

செய்யுள்.

1. பிரவேசம்

I.

2. செய்யுள்—காரணப்பெயர்.
3. பாவலர்—கவிஞர்.
4. செய்யுளாவது மானுட சிருஷ்டியே.
5. கவிலக்ஷணம்.
6. கவித்துவம்.
7. அருள்வாக்கு.
8. கவிகள் கருவிலே திருவுடையவர்.
9. கவி வர்க்கத்தில் சேர்ந்தவர்.
10. உத்தம கவிகள்.
11. பாவிகம்.

II.

12. குணவலங்காரங்கள்.
13. நடை.
14. காவியம்.
15. மெய்ப்பாடு—சுவை.
16. கவிகற்பனை.
17. பாடுதலுற்ற பொருள்.
18. செய்யுளின் உருவம்.
19. செய்யுளின் உதயம்.
20. உத்தம கவிகளின் உள்ள நோக்கம்.

III.

21. உத்தம கவிகளின் ஊனுடைப் பழம் பாடல்கள்.
22. ஆதி கவிகள்—பிற்காலக் கவிகள்.
23. பொது ஜனங்களின் அங்கிகாரம்.
24. உத்தம கவிகளால் உண்டாகும் நன்மை.

செய்யுள்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்திலே சீராமனை நோக்கி விராதன்செய்யும் துதியை முதன் முதல் ஓதும்போது எனக்கு இன்னதென்று தெரியாத ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. நாலாயிரப் பிரபந்தத்தில் சிற்சில பகுதிகளை ஓதுமிடத்தில் உண்டாகும் ஆனந்தத்தினும் இது மிகுவதாதல் உணர்ந்து, மீண்டுமீண்டும் அத்துதியை நான் ஓதுவதுண்டு. இங்ஙனமே இராமாயணத்தில் வேறு சில சந்தர்ப்பங்களிலும், புறநானூறு கலித்தொகை முதலிய சங்கத் தொகை நூல்களின் சிற்சில பாக்களிலும், இவ்விதமான கவியின்பம் உண்டாவதைப் பின்னர் நாளடைவில் உணர்ந்தேன். சில புலவர்களுடைய தனிப்பாடல்களிலும் இது பிரத்தியக்ஷ அனுபவமாக இராநின்றது இங்ஙனம் ஜனித்தலான ஆனந்தத்துக்கு ஆதாரம் யாதோ என்று பல சந்தர்ப்பங்களில் பலகால் சிந்தித்தேன். தமிழிலும் இங்க்லிஷிலும் இது சார்பான சில நூல்களை ஆராய்ந்துபார்த்தேன். இங்ஙனம் சிந்தித்தும் ஆராய்ந்தும் குறித்துக்கொண்ட சில குறிப்புக்களை இப்போது செய்யுள் என்னும் வியாசமாக விவரிக்கிறேன்.

I.

வடமொழியில் காவியம் என்பதும் யுரோபிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் தமிழில் செய்யுள் என்பதும் ஒருபொருளனவே. தமிழில் செய்யுள் என்பது தொழிலாகு பெயர். யுரோபிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் செய்யப்பட்டது என்பதாம். வடமொழியில் காவியம் என்பது கவியாற் செய்யப்பட்டது என்பதாம். தமிழில் செய்யுள் என்பதற்கு யாப்பு-பா-பாட்டு-தொடர்பு-தூக்கு என்பன பரியாய நாமங்கள். இவைகளில் ஒவ்வொன்றும் காரணப்பெயராதல் வெளிப்படை. ஹீப்ரு பாஷையில் கவிகளுக்குப் பார்ப்

பவர் என்று பொருள்படும் பெயர் வழங்குகின்றது. இது மிகவும் பொருத்தமானதே. உலகியலை ஏனையோரிலும் கவிகள் கூர்ந்து உய்த்தறிவது எவரும் உணர்ந்தபடி. தெலுங்கில் 'ரவி எருகனி தாவுகவி எருகுனு' என்னும் பழமொழி இதனை நன்கு விளக்குகின்றது

வடமொழியில் செய்யுளைக் கவிதா என்பதும், செய்யு ளியற்றுவோரைக் கவி என்பதும், கவிகளிற் சிறந்தோரை மஹாகவிகள் வரகவிகள் என்பதும் மரபு. தமிழிலும் அவ் வழக்கையே வழக்காகக்கொண்டு உரைப்பதன்றி, செய்யுளைப் பா என்றும், செய்யு ளியற்றுவோரைப் பாவலர் என்றும் கவிஞர் என்றும், உத்தமகவிகளைக் கவிராயர்என்றும் கவிராசசேகரர் என்றும், உத்தமோத்தம கவிகளைத் தெய்வப்புலவர் என்றும் கவிச்சக்கரவர்த்தி என்றும் வழங்குவது மரபாக இருக்கின்றது. அவரவர்களுடைய ஆற்றலுக் கேற்றவாறு கவிகளை வடமொழியில் வகுத்துள்ள நாற்பாற் பகுப்பைமேற்கொண்டு, தமிழிலும் பாவலர்களைச் சித்திரகவி, மதுரகவி, விஸ்தாரகவி, ஆசுகவி என வழங்குவது மரபாக இருக்கின்றது. இந்நால் வகைத்திறனும் ஒருசேரப் பெற்றவர்கள் சிலர், நாலுகவிப் பெருமாள் என்றும், நாற்கவிராசநம்பி என்றும் விருது பெற்றிருப்பது பிரசித்தம்.

செய்யுளாவது மானுட சிருஷ்டியே என்பது இதுகாறும் கூறிய வற்றால் தெளியப்படும். புலமை மிக்கவர்கள், யாதொரு கதையை உள்ளிட்டோ, அல்லது யாதோர் அகப் புறப்பொருட்டுறையை உள்ளிட்டோ, தாங்கள் வழங்குதலான மொழியில் அமைக்கும் பாடலே செய்யுள் என்பதாம். இது, செய்யுளியலில் தொல்காப்பியர்

எழுத்து முதலா வீண்டிய வடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்

என உரைத்ததனால் உணர்தலாகும். பிரகிருதியில் (பிரமனுடைய) சீவ சிருஷ்டியைப் போன்றது கவிகளின் கவிதா சிருஷ்டி என்னும் கருத்தை உள்ளிட்டு, நன்னூலில்

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்

என விளக்கினர் பவணந்தி முனிவர். பிரமனையும் கவிகளை யும் சீர்தூக்கிக் குமரகுருபரர்

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் :—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு

எனக் கூறினர்.

கோவிந்த சதகம் பாடினவர் 'பாவுக்கழகு பொருட் சுவை சொற்சுவை' என்றார். 'சந்த மில்லாக் கவிக்கு அந்த மில்லை' என்றது ஒரு பழமொழி. ஒரு வித்தியார்த்தியான வன் பரீக்ஷையில் செய்யுள் சம்பந்தமாக எழுதிய ஒரு வியா சத்தில் 'பா பாதி பண் பாதி' என வரைந்திருக்கின்றனன். கம்பநாடர், 'கவிப்பா வமுதம் இசையின் கறியொடு கண் ணனுண்ணக் குவிப்பான்' எனச் சடகோபரைப் புகழ்வதும் இக்கருத்தேபற்றி யன்றோ? அறப்பளீசுர சதகத்தில், உதவி யின்றிக் கெடுவனவற்றில், 'வருமெதுகை மோனையில்லாத கவியும்' ஒன்றாக உரைத்திருக்கின்றது. 'அணியிலாக் கவி தை பணியிலா வனிதை' என்றார் அகத்தியர் உத்தம கவி லக்ஷணத்தை,

எற்பொரு நாகர்தம் இருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினும், கீழுறக்
கற்பக பனையவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

எனப் பம்பைப் பொய்கையை வருணிக்கின்ற இடத்திலும், அதம கவிலக்ஷணத்தை

பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்ப்போய்ப் புன்கவி யெனத்
தெளி வின்றி

என அகழியை வருணிக்கின்ற இடத்திலும் விளக்கிய கம்பர், கோதாவிரி நதியின் வருணனையில்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்த புலத்திற் ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்

என அவ்வாற்றையும் சான்றோர் கவியையும் சிலேடையுவமை யாக அமைத்துக் கூறியிருப்பதில் கவிலக்ஷணம் இன்னதென்பது அறியக்கிடக்கின்றது. அஃதாவது 'பூமிக்கெல்லாம் அலங்காரமாய் நிறைந்த அர்த்தங்களைக் கொடுத்து அறிவின் கண்ணே நிகழ்வதாய்த் தேவாமிர்தம்போன்ற அகப்பொருளின் பல துறைகளைத் தாங்கி மற்றும் ஐந்திணைப்பொருணெறிகளைச் சேர்ந்து விளக்கமும் தெளிவும் உள்ளதாய்த் தண்மையான நல்லொழுக்கம் அல்லது சொன்னடை உள்ளது' என்பதாம்.

காரிகை கற்றுக் கவிபாடுவார் சிலர் எக்காலத்தும் உண்டு. அவர்கள் கவிஞர் வரிசையில் வைத்தெண்ணுதற்கு உரியரல்லர். மகாகவிகள் யாப்பிலக்கணம் கற்றுக் கவிபாடுவதாக எம்மொழியிலும் யாதொரு வரலாறும் வழங்கவில்லை. 'தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும், அகமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்.' திருவாய்மொழியின் வியாக்கியான அவதாரிகையில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது. "இப்படி பகவத் ஸ்வரூப ரூபகுண விபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து அங்குள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்ரபந்தங்கள்; இங்ஙனே யாகில், இப்ரபந்தங்களுக்குப் பாட்டும் ஸங்க்யையும் பாட்டுக்கு நாலடி யாகையும் அக்ஷரங்கள் ஸமமாகையும் 'எழுத்தசை சீர் பந்த மடி தொடை பாவினம்' என்றாற்போலச் சொல்லுகிற ப்ரபந்த லக்ஷணங்கள் சேரவிழுந்தபடி எங்ஙனே யென்னில், சோக வேகத்தாலே பிறந்த 'மாநிஷாத' இத்யாதி சுலோகமானது 'மச்சாதா தேவ' என்கிற சுலோகத்தின்படியே, அத்திக்காயி லறுமான்போலே, பகவத் விபூதியில் ஏகதேசஸ்தனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேத மானாற்போலே, பகவத் ப்ரஸாத மடியாகப் பிறந்த இப்ரபந்தங்களுக்கு இவற்றில் கூடாததில்லை."

நம்மாழ்வாரே திருவிருத்தத்தில்

மெல்லிய லாக்கைக் கிருமிக் குருவின் மிளிர்தந்தாங்கே
செல்லிய செல்கைத் துலகையென் காணும் என்னுலுந்தன்னைச்
சொல்லிய சூழற் றிருமா லவன்கவி யாதுகற்றேன்
பல்லியின் சொல்லும் சொல்லாக் கொள்வதோவுண்டு பண்டுபண்டே

என்றும், தொண்ணூற்றேழாந் திருவாய்மொழியில்

பண்ணார் பாட லின்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடித்
தென்னா வென்னு மென்னம்மான் திருமா லிருஞ்சோ லையானே

என்றும் (இக்கருத்தை இன்னும் வேறிடங்களிலும் குறித்துக்) கூறியிருக்கின்றனர். தங்கள் தங்கள் உபாசனா மூர்த்தியின் அருளாலே பாடல்கள் புறப்படுகின்றன என்றும் அப்படிப் பட்டவை அருள் வாக்கு என்றும் நம்மவர்கள் நம்புகின்றனர். கம்பநாடர் முதலியோர் கலைமகள் அருளால் கவிபாடலாம் என்று நம்பினதாகக் காண்கின்றனர். சரஸ்வதியந்தாதியில்

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி

என்றும்,

பாவுந் தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பாள்

என்றும், கம்பர் பாடியிருக்கின்றனர். ஏகாம்பரநாத ருலாவில் ஆக்ஷேபனை செய்தவர்களை நோக்கி, 'நானும் அறியேன், அவ ளும் பொய் சொல்லாள்' என இரட்டையர் கூறியதாக ஆசிரிய பரம்பரையிற் கேட்டுவருகிறோம். ஆகவே கம்பர்

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ

என்றது பொருந்துமா றெவன்? கவித்துவத்தின் மர்மம் கவி களுக்கே புலனாகாத திரிபுடைத்துப் போலும். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்' என்று வழங்கும் பழமொ ழியின் கருத்து, மகா கவிகளுடைய சகவாசத்தால் சாதா ரணர்களும் ஒருவாறு கவித்துவம் அடைவர் என்பதே.

மன்பதைகளில் எல்லாருமே எவ்வகைத் தொழிலையும் செய்யக்கூடும்என்பதில்லை. 'எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது.' ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலுக்கேற்ற இயற்கை யமைப்பு இருக்கும். அதை யறிந்து அவரவர் அவ்வத் தொழிலில் பிரவேசித்தால், பல தொழில்களும் செவ்வி பெற்று நடக்கும். கையும் விரல்களும் மிருதுவாய்ச் சிறி யனவாய் இருப்பவர்கள் மருத்துவிச்சி வேலைக் கேற்றவ ராவர். சுருதிலயை உணர்ச்சியோடு நல்ல சாரீரமும் பெற் றவர்கள் ஸங்கீத ஸாஹித்திய ராவர். கல்வியறிவோடு உயர மும் காத்திரமுமான உடல் பெற்றவர்கள் உவாத்திமைத் தொழிலுக்கு உரிய ராவர். 'திருடன் இராஜவிழி விழிப் பானு?' 'கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவனுக்குக் கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?' 'நெல்லுக் குற்றுகிறவனுக்குக் கல் லுப் பரீக்ஷை தெரியுமா?' கருவிலே திருவில்லாதவர்களைக் கவி பாடச் சொல்வது, 'கூலிக்குக் குற்றுகிறவர்களைக் கேளிக்கை ஆடச் சொல்வது' போலாம். கவனசக்தி உள்ளவர்களிடத் தில் கவிகள் தாமாகவே சுரக்கும். 'தெய்வப் புலவனுக்கு நா உணரும்; சித்திரவோடாவிக்குக் கை உணரும்.'

நிகண்டு வாகடம் சோதிடம் முதலியன, ஞாபக நிமித்த மாக, எதுகை மோனையுடனே பாட்டில் அமைக்கப்பட்டு வந்தன வேனும், அவைகளில் கவித்துவம் என்பது ஒன்றும் இல்லை. யாப்பருங்கலம் காரிகை முதலிய இலக்கணங்களில் சொல்லியிருக்கும் விதிகளை யெல்லாம், இலக்கியப் பயிற்சி யுள்ள ஒருவன், இரண்டொரு நாளில் அறிந்துகொள்ளக் கூடியனவே. அவ்விதிகளை அறிந்த எவனும் சாஸ்திர விஷ யங்களை ஞாபக நிமித்தமாக எதுகை மோனையுடனே பாட் டில் அமைக்கலாம். எப்படியும் சதுரகராதியில் எதுகை யகராதியும் ஒன்று ஏற்பட் டிருப்பதனுல். எதுகை விஷ யத்தில் யாதொரு கஷ்டமும் இல்லை. இன்ன பொருளை இத்திறப் பாட்டில் இன்ன விதமாக அமைக்க என்ற வள விலே, அங்ஙனமே அமைத்துக் கொடுக்கின்ற ஆசுகவிகள், அந்த வித்தையை அப்பியாசம் பண்ணினவரே யாவர். கூட சதுக்கம் கோமூத்திரி நாகபந்தம் முரசபந்தம் முதலான சித் திரகவிகளைப் பாடுவதும், அப்பியாச வித்தையே யாகும்.

மதுரகவிகளும் விஸ்தாரகவிகளுமே கவிவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். தொடர்நிலைச் செய்யுள் பாடவல்லவர்கள் அகலகவிகள் அல்லது வித்தாரகவிகள் எனப்பெறுவர். ஓசையும் பொருளும் இனிதாய் முழுதுஞ் செஞ்சொல்லாய் அலங்காரமும் தொடையும் தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவது மதுரகவி லக்ஷணம்.

எடுத்த பொருளினோ டோசை யினிதாய்
அடுத்தவைசெஞ் சொல்லாய் அணியும்—தொடுத்த
தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு

என்றார் பாட்டியலார்.

யாப்பு மாத்திரம் கற்றுக் கவி பாடுவோர் கவிகள் ஆகார். கவிகள் கருவிலே திருவுடையவர். பழைய காவியங்களை வாசிப்பதும், யாப்பிலக்கணம் அறிவதும், அவர்கட்கு ஒருவாறு துணைக்கருவிகளே ஆகும். கல்விப் பயிற்சி கவித்துவத்தைப் பின்னும் மேம்படுத்துமே யன்றிக் கவித்துவத்தை உண்டாக்க மாட்டாது. கல்வியிற் பெரிய கம்பர் போன்ற கனகவிகளும் உளர். ஷேக்ஸ்பியர் போலே கல்விப் பயிற்சி வெகுவாய் இல்லாத மஹாகவிகளும் உளர். உலகியலை நன்குணர்ந்து ரஸ ஞானம் விசேஷித்த மதியூகிக ளாகையால், அவர்களுடைய கவித்துவம் தன்னாற்றலே ஆற்றலாக ஒளிர்வதாகும். கற்ற வித்தையைக் காய்ச்சிக் குடிக்கலாம்: கவித்துவம் அது செய்யலாவ தன்று. உள்ளடங்கா மகிழ்ச்சியாலும் உள்ளக் கொதிப்பினாலும் உதிப்பதே உத்தம கவிதை. உலகிற் பொருள்களைக் கண்ணாடி யன்றிக் கல்லும் சுவரும் பிரதிபிம்பிப்பதில்லை. உலகவியற்கையைக் கவிதையாகிய கண்ணாடியால் பிரதிபிம்பிக்கச் செய்பவர்களே உத்தம கவிகள். உலகவியற்கை என்பது பிரகிர்தி. மனுஷப் பிரகிர்தியையும், தேவசிருஷ்டியில் கேவலருக்கு விளங்காத பிரகிர்தி விசேஷங்களையும், உத்தமமான உலகநீதிகளையும், சுவைபட உரைப்பதே கவிலக்ஷணமாம்.

'பாவிகமென்பது காப்பியபண்பு.' அஃதாவது, "ஒரு காப்பிய முற்றிலும் கவியின் கருத்தால் அமைந்ததோர் பண்பு.

என்ருல், நூலில் தலைமையாக நின்ற சரித்திரமும், அதனைப் பற்றித் தொடர்ந்த சரித்திரமும், ஆகிய இவற்ருல், கவி கருதிய திறம் விளங்கும் வனப்பு என்றவாறு. இராமாயணத்தில், பிரதானமான இராம சரித்திரத்திஞலும், அதைத் தொடர்ந்த வாலி சுக்கிரீவாதி சரித்திரத்திஞலும், சத்தியமும் தருமமும் கருணையும் வீரமும் கற்புநிலையும் உடன்பிறந்தோரொற்றுமையும் பழியச்சமும் அதருமத்தின் விளைவும் இழிசனரியற்கையும் முதலியன, கவி கருதியாங்கு அமைந்து தோன்றுவதை, உதாரணமாகக் கண்டுகொள்க" (தண்டியலங்காரசாரம்). இனி "உலகிலும் இயற்கையான் நிலைபெருது, புலவரான் இல்லது இனியது நல்லதென நாட்டப்பட்டதோர் ஒழுக்கம்" என்பதும் இதன்பாற்படும். ஆயினும் "நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்பதை, "புனைந்துரை வகையானும் உலக வழக்கத்தானும் புலவராற் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்" என விளக்கி, "இல்லது கூறுதல் தொல்லாசிரியர் தமிழ்வழக் கன்று. புனைந்துரை வகையால் புலவர் இல்லனவுங் கூறுப எனின், உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு, நல்லோர்க் குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி, நல்லோர்க் குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூருர், இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலின். உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது" என்பர் நச்சிஞர்க்கினியர்.

II

"செய்யுள் என்பது விழுமிய பொருள் கொண்டு விளங்கிய சொற்றொடையாம். விழுமிய பொருளாவது:—'உனக்கு மகன் பிறந்தான்,' 'உன் பகைவன் பட்டான்' என்னும் இத்திறத்த வாக்கியங்களால் விளையும் இன்பத்திஞம் வேருயதோர் பேரின்பம் விளைப்பது. இதனை விளக்குவன குணமும் அலங்காரமுமாம். ஆகவே செய்யுளுக்கு அப்பொருள் உயிரும் சொற்றொடை உடம்பும் குணவலங்காரங்கள் அழகு செய்வனவுமாம் என்பது பெறப்படும். இதனை உள்ளிட்டே பவணந்திமுனிவர் 'பல்வகைத் தாதுவினுயிர்க்குடல் போற்

பல, சொல்லாற் பொருட்கிடனாக வுணர்வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்' என்று கூறினர்" (தண்டியலங் காரசாரம்). குணவலங்காரங்கள் என்பதில் குணம் என்பது குணவணி; அலங்காரம் என்பது சொல்லணியும் பொருளணி யுமாம். தொடைகளைப் பற்றிநின்று அழகு செய்வன குண வணிகள்; சொல்லையும் பொருளையும் பற்றி நின்று அழகு செய்வன சொல்லணியாகிய அலங்காரங்கள். இளமை முதலி யனபோல் ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன அவை; கடக குண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன இவை. ஒருவனுக்குள்ள திண்மை இளமை முதலிய தேக குணங்களும், தயை தைரியம் முதலிய ஆத் தும குணங்களும் அவனை விளக்குவதுபோல், குணவணி கள் செய்யுளை விளக்குகின்றன. இளமை நீங்கிய உடம்பில் ஆபரணங்கள் விளங்காமைபோல், குணவணிகள் இல்லாக் கவிகளில் உவமை முதலிய அலங்காரங்கள் விளங்கா. தக்க படியே குணவலங்காரங்கள் அமைந்துள்ள செய்யுளால் ஜனிக் கின்ற இன்பமானது. அவ்வகைச் செய்யுளைப் படிக்கும்படி உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றது. அவ்வின்பம் மனத்தை விட் டகல்வதில்லை.

குணவணியானது வாக்கியமாகிய முடிபின் நடையை நோக்கியது. இது நெறி யெனவும் பாக மெனவும் படும். அஃதாவது கவியமைப்புவகை என்பதாம். கவியமைப் பில் ஓசையுடைமையும் ஆழமுடைமையும் இருத்தல்வேண் டும். பொருள் அழுத்தமும் சொல்வன்மையும் அமைந்து நடை மிடுக்காக இருப்பதைப் புலவர்கள் போற்றுவ தில்லை. சொல்வன்மை யின்றிப் பொருள் எளிதில் விளங்குவதான செய்யுள் நடையே சிறந்த தென்பது புலவர் துணிபு. வல் லினமும் தொகைநிலைத்தொடர்களும் மிகுத லின்றி, வலி மெலியிடைகளும் நெடில் குறில்களும் கலந்து, செவிக்கின் பம் தரத்தக்க சொற்கள் வரத் தொடுத்தலால், வாக்கியங்கள். தேனூறு பாய்ச்சலாய், இனிமை பயக்கும். ஒவ்வொரு வாக் கியத்திலும் கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுவதற்கு வேண்டிய சொற்கள் அமைந்திருத்தல் வேண்டும். ஒரு பொரு ளைப் புகழுமிடத்து அசம்பாவிதமாய் உலக வொழுக்கத்

துக்கு விரோதமாகக் கூருமல் உலக வியற்கைக் கியையப் புகழ்வதே சிறப்பாகும். குறிப்பினுலே ஒரு சிறப்பு விளக்கும் பொருள்படப் பாடுவது உசிதம். சொல்லணி பொருளணியான அலங்காரங்களைக் கொள்ளுமளவாக இடமறிந்து ஏற்றபெற்றி அமைப்ப தன்றி, அமிதமாக அமைப்பது அருவருப்பே தருவதாகும்.

கவி செய்வ தெல்லாம் காவியமே யாயினும், தமிழில் உலா மடல் கலம்பகம் பரணி ஆற்றுப்படை முதலான தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தகளும் சிறு காவியங்கள் எனப்படும். தன்னிகரில்லாத் தலைவன் வரலாறு உரைப்பதாய், பல வருணனைகள் உள்ளதாய், ஒருதிறப் பாட்டாலேனும் பலதிறப் பாட்டாலேனும் அமைக்கப்பட்டு, மெய்ப்பாடும் சுவையும் தோன்ற நிற்பது பெருங்காப்பியம் எனப்படும். சிலப்பதிகாரம்—மணிமேகலை—சிந்தாமணி—கம்பராமாயணம் என்றுற்போல்வன இதற்கு உதாரணம். "உலகவியல் பறிதலும் ரஞ்சனையும் காப்பியத்திற்குப் பயன் என்பவாதலின் பல வருணனைகள் வேண்டுவனவாயின. 'தன்னிகரில்லாத் தலைவன்' என்ற கருத்து, ஒப்புயர் வில்லாத நற்குண நற்செய்கைகளுடைய தலைவன்மேல் பிரபந்தம் இசைத்தல் இம்மை மறுமைக்கு உறுதி பயக்கும் என்பதாம். இப்படிப்பட்ட தலைவன் மேம் ாட்டைச் சிறப்பிப்பதாயின், இழிந்தோன் சிறப்பும் கூறற்குரியது."

சிறுகாப்பியமாயினும், பெருங்காப்பியமாயினும், மெய்ப்பாடும் சுவையும் தோன்ற நிற்பதே செய்யுட்குச் சிறப்பிலக்கணம். மெய்ப்பாடாவது பொருட்பாடு. அஃதாவது உய்த்துணர்ச்சியின்றி, அவ்விடத்து வந்த பொருளானே, சொல்லப்படும் பொருள் தானே வெளிப்பட்டாங்கு, கண்ணீரரும்பல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலாகிய சத்துவம் படுமாற்றுன் வெளிப்படச் செய்வது. "மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சின்கண் தோன்றிய விகாரத்தின் விளைவு" என்பர் பேராசிரியர். வடநூலில் பாவம் என்பது இதுவே. இதற்கு மனநிலை என்பது பொருள். சத்துவங்க ளெல்லாம் பிறரிடத்துள்ள சுகதுக்கங்களைத் தமவாகப் பாவித்தலால் வருவன. சுவையாவது வடநூலில் ரசம்

எனப்படுவது: சந்தோஷத்தை உண்டாக்குவது என்பதாம். சுவைகளுக்கு மெய்ப்பாடுகளே அடியாம். "இவை நாடகத்திலும் காவியத்திலும் செய்திறத்தினாலும் சொற்றிறத்தினாலும் தூண்டப்பட்ட வாசனையின் திண்மையால் தம்மவையே போல அநுபவ நிலையில் வந்து ஆனந்த மயமாகவே நிற்பன." ஆகவே பாவனா சக்தியால் சுவை விளைப்பதே கவி லக்ஷணமாகும். பாவனா சக்திக்குக் கற்பனாசக்தி என்றும் ஒரு பரியாய நாமம் உண்டு.

கற்பித்தல் என்பது நியமித்தல் பிறப்பித்தல் என்பதாம். கற்பனை என்பது இல்லதை உள்ளதாக உண்டுபண்ணல். கவிகற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முன்னில்லாத சுவையைப் பிறப்பித்தல். பொய்யும் புனைந்துரையும் கவிகற்பனை யன்று. கட்டுக்கூட்டாய் மனம்போன போக்கிலே உரைப்பதும் கவிகற்பனை யன்று. உத்பிரேட்சை மாத்திரமுமே கற்பனை யன்று. வர்ணியங்களை உள்ளது உள்ளபடியே உரைப்பது வசனத்திலும் வசன ரூபமான சரித்திரத்திலும். கவிகற்பனை கலந்த போது மாத்திரமே கத்தியமும் கத்திய ரூபமான சரித்திரமும் பத்தியமாவது. வர்ணியத்தை விளக்கும் பொருட்டுப் பிரகிர்தியிலும் பிரகிர்தி சம்பவங்களிலும் மற்றவர்களுக்குக் கட்புலனாகாத ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டுவதும், வர்ணியங்களின் அந்தர்ப்பாவ சூட்சுமங்களைப் பலரும் அறிந்து வியக்குமாறு சித்திரித்துக் காட்டுவதும், சந்தர்ப்பங்களுக் கேற்றபடி கவியானவன் தற்குறிப்பேற்றி யுரைப்பதும், 'அப்பத்தை எப்படி சுட்டாளோ அதற்குள்ளே தித்திப்பை எப்படி நுழைத்தாளோ?' என்று அதிசயிப்பவனைப் போல், சொற்களை இந்தக் கவி எப்படி அமைத்தானோ அதில் ஆனந்த ரஸத்தை எப்படி ஏற்றினானோ என்று படிப்பவர் அதிசயிக்கும்படி செய்வதும் முதலான சாதுரியங்கள், கற்பனா சக்தியின் கூறுபாடுகளாம். பகுத்தறிவுக்கும் கற்பனா சக்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஏனையரிடத்தில் காணப்படாத கவியூகை ஒருவனிடத்தில் சுவபாவமாய் எவ்வளவுக் கெவ்வளவு அமைந்திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவாக அவன் கவித்துவம் சிறப்புறுகின்றது. இந்த யூகை

இல்லாத விடத்தில் கவிரஸம் ஜனிப்பதில்லை. கவிரஸத்துக்குக் கற்பனசக்தியே காரணம். கற்பனசக்தியே பாவிகத்துக்குக் காரணம். கற்பனசக்தி யில்லாதவன் கவிஞன் என்கிற பெயருக்கு அருகனுகான். இந்தச் சக்தி மிஞ்சியபேர்களே மஹாகவிகள் எனப்படுவர். வடமொழியில் 'கவி காளிதாஸ:' என்பதுபோலே, கிரீக்கில் ஹோமரும் இட்டாலியனில் டான்ட்டேயும் இங்க்லிஷில் ஷேக்ஸ்பியரும் பாரசீகத்தில் பெர்டூஸியும் தமிழில் கம்பரும் இந்தக் கற்பனசக்தி விசேஷத்தாலே லோகப் பிரசித்தமான கவிஞராயினர்.

உலகம் பலவிதம். எது செய்வது தமக்கு எளிதோ அதை ஒவ்வொருவரும் அறிந்து செய்யவேண்டும். செய்வன திருந்தச் செய்யும் உபாயம் இதுவே. கவிஞரும் தங்கள் தங்கள் திறத்துக் கேற்ப எளிதில் இயல்வதான பொருளையே தேர்ந்தறிந்து கொள்ளவேண்டும். எட்டாப் பழத்தைப் பார்த்துக் கொட்டாவி விடலாகாது. தங்களுடைய யூகையின் போக்குக் கேற்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிற கவிஞருக்கு வாக்கு வல்லபமும் பொருட் டெளிவும் தாமே வந்தடையும். ஒவ்வொரு செய்யுளின் சாரமும் உருவமும் கவனசக்திக் கேற்பக் கவி தான் பாடும்படி எடுத்துக்கொள்ளும் பொருளில் நின்றே அங்குரிக்கின்றன. இந்த மர்மத்தை உணராமையால் பல கவிகள் பாடிய பல காவியங்கள் காலாந்தரத்தில் இறந்தனவாயின. பாடும்படி எடுத்துக்கொண்ட பொருளின் திறங்களும், கவனஞ் செய்கின்றவனுடைய கற்பனையும், தம்மிற் கலந்து சமரசப்பட்டபோது, பொருட்பொலிவும் சொற்பொலிவும் தாமாகவே புறப்படும். சில காலம் சில புலவர் முக்கிமுயல்வாராகவும், கம்பர் நெடுங்காலம் ஒன்றுஞ் செய்யாமல் சும்மா இருந்த மர்மம் இதுவே.

கரு தரிக்கின்ற காலத்தில் தாய் தந்தையர்களுடைய தேக நிலைமைக்கும் மன நிலைமைக்கும் அவர்கள் உட்கொள்ளும் உண்டி வகைகளுக்கும் ஏற்ற விதமான உருவத்துடன் பிறப்பதல்லது, தாய் தந்தையர் விரும்புதலான உருவத்துடனே, பிள்ளை பிறப்பதில்லை. சகோதரர்கள் தம்மில் தேகக்கூறும் முகத்தின் சாயலும் வேறுபடுதலான காரணமும் இதுவே. கவியின் கிராஹ்ய சக்திக்கும் பாடும்படி யெடுத்துக்கொண்ட

பொருளின் திறத்துக்கும் கவியின் கவன சக்திக்கும் தற் காலத்தில் கவியின் மனநிலைக்கும் ஏற்றவாறான உருவத் துடன் புறப்படுவ தன்றி, கவி தான் முன்னதாக வெண்பா வாற் பாடவேண்டும் கலிப்பாவாற் பாடவேண்டும் என்று நியமித்துக்கொண்டவாறு செய்யுள் புறப்படுவதில்லை. நீள மான அகவற் பாவால் ஒரு நூலுக்குச் சாத்துக்கவி சொல்ல வேண்டு மென்று உட்கார்ந்த கவிராயர்கள் எத்தனை பேர் ஒரே வெண்பாவுடன் எழுந்திருப்பதைக் காண்கிறோம். கொச் சகத்தாற் சரமகவி பாட உட்கார்ந்தவர் எத்தனை கவிராயர் கள் ஆசிரிய விருத்தத்துடன் எழுவதையும் காண்கிறோம். புகழேந்திக்கு வெண்பாவும் கம்பருக்கு விருத்தமுமாகப் பாக் கள் புறப்படுவது அவரவருடைய விருப்பம் அன்று.

உரிய காலத்தில் கரு தரித்தாலும், கருவானது கர்ப்பா சயத்தில் முதலில் பிண்டாகிருதியாக ஊறிவளர்ந்து, தாயின் உடலி லிருந்து சாரத்தைக் கிரகித்து, நாளடைவில் அவயவங் கள் பூரணமாகி, பத்து மாதமும் நிறைந்த பிறகே சிசுவாக உதிக்கின்றது. பத்து மாதமும் நிறைவதற்கு முன்னே உதித்த லான பிள்ளைகள் உடலுரம் பெற்று நீடு வாழ்வது அருமை. உதித்தலான காலத்தில் உதிக்க வொட்டாமல் தடை நேர் வதும் சிசுவின் அங்க லக்ஷணம் அழிவதற்குக் காரணமாகும். கவி தான் உட்கொள்ளும் பொருளும், முதலில் பிண்டாகிரு தியாகவே மனத்தில் ஊறியிருந்து சாரம் பெற்றுவளர்ந்து, நாளடைவில் தனது திறத்துக்கும் மனத் திட்பத்துக்கும் ஏற்ற வாறாக உருவும் அழகும் நிறைந்து செய்யுளாக உதிக்கும். உதிக்கின்ற காலத்தில் கவியானவன் அதனை ஏட்டில் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுவாக உதிப்பதற்கு முன்னே அவ சரப்பட்டாலும் அது சீர்கெட்டு அழிவதாகும். அதுவாக உதிக்கின்ற சமயத்தில் அதனை ஏட்டில் ஏந்திக்கொள்ளாமல் காலதாமதம் பண்ணினாலும், அதன் அருமையும் பெருமை யும் குலைந்துபோகும். உதிக்கின்ற சமய மறிந்து பெற்றத னால்தான், கம்பராமாயணம் அழகும் ஆயுளும் பெறுவ தாயிற்று. அறுசுவைப் பண்டமும் நீரும், தீயின் வெப்பத் தால் கொதித்துக் கலந்து சமாசப்படுகின்ற சமயத்தில், குய்ப் புகை யெழுப்பி இறக்கிவிட்டால், அட்ட உண்டியானது,

அருந்துவோர்க்கு இன்பம் தருகின்றது. சமரசப்படுவதற்கு முன்னே இறக்கிவிட்டாலும், பின்னே இறக்கினாலும், அவ்வுண்டி பதங்கெட்டுப் பாழாய் விடுகின்றது. தாங்கள் சமைக்கும் கவியமுதைக் கவிகள் பதம் பார்த்து ஏட்டில் இறக்கிக் கொள்ளவேண்டும். சருக்காயும் உண்ண இயைவ தன்று: பக்குவம் முதிர்ந்த பழமும் உண்ண இயைவ தன்று. பருவ காலத்தில் கவியின் மனத்திலிருந்து தானாகக் கனிந்து விழுகின்ற பழமே உண்ணவுண்ணத் தெவிட்டாது பின்னும் உண்ணுதலான விருப்பத்தை எழுவிப்பதாகும்.

கவனம் செய்வதில் கவிகள் கருதியிருக்கும் நோக்கம் யாது? கருக்கொண்டவள் கரு முதிர்ந்த அளவிலே கருவுயிர்ப்பது இயற்கை. அவள் யாதொரு நோக்கத்தோடு கருவுயிர்க்கிறாள் என்பதில்லை. கருக்காய் முதிர்ந்து கனிந்த கனியானது, தானே உதிர்வதல்லது, யாதொரு நிமித்தம் கருதி உதிர்வதில்லை. கவியின் மனத்தை இடங்கொண்ட பொருளானது, கவிகற்பனையால் கனித லானபோது, கவிதா ரூபமாகத் தானே உதிர்வதல்லது, யாதொரு நோக்கத்துடனே உதிர்கின்ற தென்பதில்லை. இது தனிப்பாடல்களின் திறத்தில் உள்ளபடி. தனிப்பாடல்களிலும், சிறுகாப்பியமான பிரபந்தங்களிலும், கவியானவன், கருத்திற் கொண்ட பொருளில் ஈடுபட்டு, அதன் வயத்தனாய், அதுவே நோக்கமாய், அப்பொருளின் திறத்தில் தனக்குக் கட்புலனான உண்மைகளும் விசேஷ அம்சங்களும் கற்பனையால் கற்பிதமான உருவத்துடன் கவிதையைக் கருவுயிர்ப்ப தன்றித் தான் யாதொரு நோக்கத்துடன் கவனம் செய்வதில்லை. கருத்திற் கொண்ட பொருளின் காட்சியே மனத்தைக் கவர்தலால், அந்தக் காட்சியாலும் அது கவிதாரூபமாகப் புறப்படுகின்ற விதத்தாலும் ஜனித்து நிறைதலான ஆனந்தமானது, அவன் மனத்தில் வேறு நோக்கங்கள் பிரவேசிப்பதற்கு இடம் கொடாது. ஆயினும், அந்த ஆனந்தமானது நீடித்திருக்காது. தொடர்நிலைச் செய்யுளான காவியங்களைக் கவனம் செய்யும்போது, அவ்வானந்த மேலீட்டின் கொதிப்பானது சிறிது சிறிது தணிதலுறும். அந்த ஆனந்தம் முற்றும் தணியாமல் நீடுதல் வேண்டின விடத்து, யாதொரு நோக்கமும் இன்றி அதனை நீட்

திருவள்ளுவர்

டித்தல் இயலாது. பெருங்காப்பியத்தைக் கவனம செய்பவன், தன் காவியமானது கல்விமான்களுக்கு வித்தியா விநோதமாக இருக்கும் என்கிற அவ்வளவிலே அமைவு கொள்ளான். மானுடப் பிரகிர்தியை மேம்படுத்தத் தக்கனவென்று தான் பிரத்தியக்ஷ அனுபவத்தில் கண்ட நற்குண நல்லொழுக்கங் களைச் சுரோதாக்களிடத்திலே தனது காப்பியம் எழுவிக்க வேண்டும் என்கின்ற நோக்கம் உண்டாவது ஒருதலை. காப்பி யப் பண்பான இந்தப் பாவிகம் இல்லாதவிடத்தில் ஒருவன் இயற்றும் காவியமானது உயிரில்லாத உடம்பே. இம்மை நலங்களையே பெரிதாகக் கொண்டு அவற்றில் ஈடுபட் டழி கின்ற மன்னுயிர்களை உய்விக்குமாறு, உலகநிலையாமை யாக் கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவற்றைக் காட்டி, உலகமாயையினால் மறைவுண் டிருக்கும் ஆன்ம விசேஷங்களை விளக்கி, உலகில் எளியாரை வலியார் நலியாமல் எல்லோரும் அறத்தாற்றிற் பொருளீட்டி இன்பநுகர்ந்து வீடடையு மாறு ஹிதோபதேசம் செய்வதே, உத்தம கவிகளின் உள்ளநோக்க மாகும். இஃது எம்மதத்தினர்க்கும் சம்மதமான நோக்கமே. ஆகவே, இவ்வளவில் மகா கவிகளுடைய காவியங்களானவை, முப்பாலாம், மிருதியாம், மதாஹஸ்யமாம், பதிசாத்திரமாம்: உள்ளதை உரைக்குமிடத்தில் எல்லாருடைய வேதாந்தமு மாம். "அறம்பொரு ளின்பம் வீடடைத நூற்பயனே" யாகையால், சுரோதாக்கள் கவிநோக்கத்தை நிறைவுறுத்து வதே பயனும். ஒவ்வொரு காவியமும், ஒரு தேயத்தினர் ஒரு கால விசேஷத்திலே நாடுதலான நாட்டத்தையும் கொள் ளுதலான பாவனையையும் விளக்குவதாய், அளவாற் பெரிதா யிருப்பதினாலே, காவியம் இயற்றுதற்கு மிகவும் கௌரவ மான கருத்துக்களின் மிகுதி அவசியமாகின்றது. இவ்வரு மை வாய்வது அரிதாதலினன்றோ, உலகில் நடையாடும் காவி யங்கள் சிலவாய் விரல்விட் டெண்ணத்தக்கனவாகவே இருக் கின்றன.

III.

நெடுங்காலம் கர்ணபரம்பரையாக வழங்கிவந்த ஹோம ருடைய காவியம் பின்னால் கைபெழுத்துப் பிரதி செய்யப் பெற்று, இப்பொழுது யுரோபிய பாஷைகள் ஒவ்வொன்

றிலும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கிவருகின்றது. ஷேக்ஸ்பியருடைய காலத்தில் எவரும் கவனிக்காத அவருடைய நாடகங்களைப் பின்னுல் இங்க்லிஷ் புலவர்கள் எவ்வெவ்விடங்களில் தேடித் துருவிக் கண்டுபிடித்தார்கள். இந்தியாவில் படையெடுத்துவந்த முஹம்மதியர் ஹிந்துமத நூல்களைத் தேடித் தீமடுத்து வந்த காலத்தில், இராமாநுஜருடைய ஸ்ரீ பாஷியத்தை வேதாந்த தேசிகர் தமது உயிரையும் பொருட்டு செய்யாமல் காப்பாற்றி வைத்தனர். தொல்காப்பியர் இருந்த காலம் இறந்த காலமாகியும் அவரியற்றிய இலக்கணம், நிகழ்காலத்ததாய், இன்னும் எதிர்காலத்தையும் நோக்கியிருக்கின்ற தன்றோ? எங்களுக்குரியது எங்களுக்குரியது என்று அவரவர்கள் மன்றாடுவதற்கிடமான திருக்குறள், ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருடமாக எஞ்சியிருக்கின்றது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னே, எத்தனையோ கவிகள், ஏதோ ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் சொல்லிய தனிப்பாடல்கள், உருமாறியாயினும், இன்னும் உயிர் வைத்திருக்கின்றன. சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடிக் கொடுத்தும், சைவப் புலவர்கள் சீவக சிந்தாமணியை மறந்துவிட வில்லை. எத்தனை ஆபத்துக்கள் நேரிட்டாலும், சத்துடைய பொருள்கள் எவ்விடத் தாயினும் உயிர் வைத்துக்கொண்டு உய்ந்திருக்கும். சத்தில்லாத செய்யுள்கள் பூவிலும் பிஞ்சிலும் அழிவுறும்; உத்தம கவிகளுடைய ஊனுடைப் பழம் பாடல்கள் எவ்விடத்தி லாயினும் உயிர்பெற்றிருந்து உரிய காலத்தில் உலகத்துலாவுவன ஆகும். 'மலரவன்செய், வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு, மற்றிவர் செய்யு முடம்பு,' இந்த உறுதியா லல்லவோ ஔவையார் 'என்றும் கிழியாதென் பாட்டு' என்றனர். 'மனிதர்க்கு வயது நூறல்லதில்லை;' அரிய நூல்களுக்கு ஆயுள் வரையறை இல்லை காற்றும் மழையும் கலந்தடித்தாலும், அவை கரைவதில்லை. காற்றும் நெருப்பும் கலந்து வீசினுலும், அவை கரிந்துபோவதில்லை. எவ்வளவு காலம் ஆனுலும், அவை என்றும் சிரஞ்சீவிகளாகவே இருக்கும்.

தேவ சிருஷ்டியில் உலக வியற்கையும் இயற்கை விநோதங்களும் யாண்டும் எக்காலத்தும் ஒருதன்மையனவே. ஆத

லின், அவ்வத் தேயத்தில் ஆதி கவிகள் உலக வியற்கை யையும் இயற்கை விநோதங்களையும் தங்கள் செய்யுளிற் பிரதிபிம்பித்துக் காட்டிவிட்டமையால், ஆதிகவிகளே சிறப் பெய்துகின்றனர்: பிற்காலத்துக் கவிகள் அங்ஙனம் சிறப் பெய்துவதற்கான அநுகூலங்கள் இல்லை எனச் சிலர் கருதுவர். காலத்துக்குக் காலம், மனிதருடைய பாவனை கருத்தின் போக்கு முதலியன, காலரீதிக் கேற்றவாறு, மாறு பட்டுச் செல்வதே, உலக சரித்திரத்தை அறிந்தவர்கள் உணர்ந்தபடி. தொழின் முயற்சிகளிலும், உலக நடவடிக் கைகளிலும், மதக் கோட்பாடுகளிலும், பரஸ்பர சம்பந்தங்க ளிலும், தமிழருடைய மனப்போக்கு, தமிழரசர் காலத்திருந்த வாறு முகம்மதிய அரசர்காலத்தில் இருந்ததில்லை. முகம்மதியர் காலத்தில் இருந்த மனப்போக்கு இப்பொழுது இங்க்லிஷ் அர சாட்சியில் எவ்வளவோ மாறுபட்டிருக்கின்றது. ஆகவே உலக வியற்கையும் இயற்கை விநோதங்களும் எக்காலத்திலும் ஒரு தன்மையனவேயாயினும், அவற்றின் கூறுபாடுகளை நுனித்தறி யும்நோக்கமும், அவற்றைக் கிரகிக்கும் விதமும், கற்பனாசக்தி யால் அவற்றைத் கவியிலமைக்கிற விதப்பும், காலத்துக்குக் காலம் வேறுபட்டே வரும். உத்தம கவிகளின் செய்யுளை ஆராய்ந்து பார்த்தால், இவ்வுண்மை விளங்கும். ஆகவே எக் காலத்திலும் பாட்டில் அமைப்பதற்கு நவநவமான பாவங்க ளுக்கும் குறைவில்லை. அங்ஙனம் அவைகளை அறிந்து கவியில் அமைக்கும் கவிராயர்கள் அடையும் பெருமைக்கும் குறை வில்லை. தமிழில் பிற்றைநாட் புலவரில் சிவப்பிரகாசரும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் பிறர் சிலரும் கவிகள் அல்லர் என்பார் உளரோ? ஐம்பெருங் காவியங்களுக்குப் பிற்பட்டும் கம்பராமாயணம் அவற்றினும் மேன்மை அடைய வில்லையா?

உத்தரதுருவமுதல் தக்ஷிணதுருவம் வரையிலும் மானுஷ்கம் ஒரு தன்மையதே ஆகும். ஆயினும் அவ்வத்தேயத்தின் இயற்கை யமைப்பினுக்கும் துரைத்தன ரீதிக்கும் தொழிற் றுறைகளுக்கும் இவற்றால் உருப்படும் நாகரிக நிலைமைக்கும் ஏற்றவாறாக மனித சாதிகளின் மனநிலை தேயத்துக்குத் தேயம் வேறுபடுகின்றது. அம்மனநிலைக் கேற்ப அவ்வத் தேயத்தி

னர் தங்களில் பொதுவாக ஒழுக்கம் என்பதே ஒழுக்கம், நன்மை என்பதே நன்மை, தீமை என்பதே தீமை. எத்தேயத்திலும் 'வெகுசன வாக்யம் கர்த்தவ்யம்.' ஒரு தேயத்து மஹாஜனங்கள் அனைவரும் ஒரு விஷயத்தில் ஒருங்கே கொள்ளும் கருத்தானது, தகுதியும் திட்பமும் உள்ளதாகவே இருக்கும். சிற்சிலர், ஒருதலைச்சார்பாலும் பொறாமையாலும் தத்தம் நலத்தைப் பாராட்டுவதாலும் அவ்விஷயத்தைப்பற்றிக் கொள்ளுதலான அபிப்பிராய பேதமானது, பொது ஜன அபிப்பிராயத்தை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. 'உயர வுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?' கட்சிபேதத்தை அனுசரித்தவர்களும், கட்சிபேதத்தை மேற்கொண்ட பத்திரிகைகளும், ஒரு நூலை உயர்த்திப் பேசுவதனாலும், தாழ்த்திப் பேசுவதனாலும், அந்நூல் சிரஞ்சீவியாக வாழும் அல்லது பிறந்தபோதே அழிந்துபோகும் என்பதில்லை. பொது ஜனங்கள் அதன் திறத்திற் கொள்ளும் பொதுவான அபிப்பிராயமே அது நீடூழி வாழ்வதற்கும் நிமிஷ நேரத்தில் நிலைகுலைவதற்கும் காரணமாகும். ஜனங்களுடைய அபிப்பிராயத்தில் ஒரு குறைவு உண்டு. அஃதாவது இன்ன காரணத்தால் இதனை அங்கீகரிக்கிறோம், இன்னகாரணத்தால் இதனைத் திரஸ்கரிக்கிறோம் என்று சொல்லிப் பொது ஜனங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவ தில்லை. அதனைக் கண்டவளவில் உளதாகும் மனநிலையை அநுசரித்து, இது நமக்கு ஆகும் அல்லது இது நமக்கு ஆகாது என்பதே, பொது ஜனங்கள் சுருக்கமாகச் சொல்லிவிடுகிற தீர்மானம். இந்தத் தீர்மானம் தப்பெண்ணத்தினாலும் அறியாமையாலும் உண்டாயினும் உண்டாகலாம். எவ்விதத்தில் உண்டாவதாயினும், பொது ஜனங்கள், தாங்கள் கொண்ட அபிப்பிராயத்தையே பிரமாணமாகக் கொள்வர். ஆயினும் பொது ஜனங்கள் பொறாமை முதலிய துர்க்குணம் கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை உரைத்தலான நிமித்தம் இல்லாமையால், அவர்களுடைய தீர்மானம் எவ்விடத்தும் எக்காலத்தும் அக்கிரமம் ஆவதில்லை. 'வெகு ஜன வாக்யம் கர்த்தவ்யம்' ஆதலால் பொதுஜன அங்கிகாரம்பெற்ற செய்யுள்கள் அவ்வத் தேயத்தில் நிலைபெற்று நிலவும் என்பது நிச்சயம்.

ஒரு மருத்துவனுடைய கீர்த்தியைக் கேட்ட பிறகே ஒருவர் அவனிடம் நம்பிக்கை வைத்து அவனிடம் மருத்துவம் செய்துகொள்ளப்புகுவர். ஒரு வர்த்தகன் நல்ல சரக்குகளை நாணயமாக விற்பவன் என்றறிந்த பிறகே பலர் அவனிடம் சரக்குக் கொள்ளலாவர். ஒருவன் நட்புக்குரியான் என்பதை ஆராய்ந்தறிந்த பின்னரே அவனோடு தக்கவர் நட்புக் கொள்வர். பொருட் பொலிவு உள்ளன என்றும், புலவர் போற்றத் தக்கன என்றும், பொதுஜன அங்கிகாரத்தால் காலாந்தரத்தில் கீர்த்தி பெற்ற பின்னரே, உத்தம கவிகளின் செய்யுள்களைக் கல்விமான்கள் பாராயணம் செய்வர். காலங்கண்ட கவிகளின் செய்யுள்களானவை கல்வியும் கனவொழுக்கமும் உள்ள பெரியோர் வார்த்தைபோலே, அவற்றைப் படிப்பவர் மனத்தைத் திருந்தப்பண்ணும். கல்லானது உளியால் அழகிய உருவெய்துமாறு போலே, மனமானது அவர்கள் செய்யுளால் உருவெய்தும். நன்குக அட்ட அடிசில் சுவையும் உடலுக்குரமும் தருவதுபோலே, உத்தம காவியங்கள் இன்பமும் மனத்துக்கு வலிமையும் தருகின்றன. பரிசனவேதி பட்ட மாத்திரத்தில் இரும்பு தன்னியல்பு மாறிப் பொன்னாகும் என்ப. நல்ல கவிகளுடைய வாடை வீசின மாத்திரத்தில் புல்லொழுக்கம் அறவே மாறி நல்லொழுக்கம் உண்டாகும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras.—B. 10404.

Publications of

T. CHELVAKESVAROYA MUDALIAR, M.A.

ராபின்ஸன் க்ருஸோ—ஓர் இங்க்லிஷ்காரன் அமெரிக்காவை அடுத்த நிர்மானுஷ்யமான ஒரு தீவில் விடப்பட்டு அங்கே நெடுங்காலம் தனியாய் ஜீவித்திருந்ததாக இங்க்லிஷில் எழுதியுள்ள ஒரு கதையின் சுருக்கம். சிறுவர் சிறுமியர் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதியிருக்கிறது. (4 அணா)

அபிநவ கதைகள்—இதில் ஐந்து கதைகள் அடங்கியிருக்கின்றன:—கற்பலங்காரம்—ஓரரசன் தான் விவாகம் பண்ணிக்கொண்ட ஓர் எளிய மாதின் கற்பைப் பரிசோதிக்குமாறு கொடுமை செய்ததும், அவைகளுக்கு ஈடுபட்டு அவள் கற்பலங்காரியெனப் புகழ்ப்பெற்றதுமாகிய விஷயங்களை விவரிப்பது. தனபாலன்—தான் செய்துவந்த கொடுக்கல் வாங்கல் வியாபாரங்களில் கள்ளக்காசுகள் கலந்திருந்ததனால் மரணதண்டனை அடைந்த ஒரு சாவகாரியைத் தூக்கிடுகிற ஸமயத்தில், அந்த மோசத்துக்குக் காரணம் இன்னான் என்பது வெளியாகி, தண்டனையினின்றும் விடுபட்ட கதை. கோமளம்—மஹாகவி ஷேக்ஸ்பியர் ஸிம்பலின் என்னும் நாடகத்தில் அமைத்திருப்பதை ஒட்டித் தமிழ்ச் சிறுவர்களுக் கேற்றவாறு பொருத்திய ஒரு பதிவிரதையின் கதை. ஸாப்பையர்—சென்னைச் சிங்காரவனத்தில் ஒருவருஷம் சந்தைக்கடைகள் தீப்பற்றியபோது காணாமற்போன ஒருவன், உத்தரகிரியைகளெல்லாம் நடந்தபின், திரும்பிவந்த ஓர் உண்மையான கதை. கிருஷ்ணன்—விடுமுறையில் தாய் தந்தையரைப் பார்க்கப்போயிருந்த சகோதரர் இருவரில் ஒருவன், உரியநாளில் கல்விச்சாலைக்குத் திரும்பாமல் ஒரு நாள் தாமதிக்கும்பொருட்டுச் செய்த மோசத்தால் விளைந்த விபரீதத்தை விரித்துரைப்பது. (6 அணா)

அக்பர்—இந்தியாவில் அரசாட்சி செய்திருந்த மோகல் அரசரில் நடுநாயகமான அக்பர் பாதுஷாவின் குண விசேஷங்களையும், அவருடைய மந்திரிமார்களின் திறங்களையும், அரசாட்சி நீடித்திருக்குமாறு மதாவேசமின்றி அவர் செய்த சீர்திருத்தங்களையும் விரிவாக உரைக்கின்ற சரித்திரம். முகதலைப்பில் அவருடைய படம் வைத்திருக்கிறது. (12 அணா)

குசேலர் — கண்ணனுக்கு ஒருசாலைமாணாக்கரான குசேலர், மக்கள் படுகின்ற வறுமைத் துன்பத்தைக் கருதி மனைவி செய்த விண்ணப்பத்தால், துவாரகை சென்று கண்ணனைக் கண்டு அருள்பெற்ற பாகவதபுராணக் கிளைக்கதை. (4 அணா)

கலிங்கத்துப்பரணி கதாசங்கிரகம் — குலோத்துங்கச்சோழன் தன் மந்திரியான கருணாகரத் தொண்டைமானைக்கொண்டு கலிங்கதேசத்தை வெற்றிகொள்ள, ஜயங்கொண்டார் அவ்வெற்றியைச் சிறப்பித்துப் பாடிய பரணிப் பிரபந்தத்தை வசனரூபமாகச் சுருக்கியெழுதியது. (8 அணா)

கண்ணகி சரித்திரம்—மகா பதிவிரதையான கண்ணகி வரலாற்றைப் பஞ்சகாவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை ஆதாரமாகச் சொண்டுரைப்பது. (12 அணா)

வியாசமஞ்சரி—சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாகத் திமிரி சபாபதி முதலியார் என்பவர் சென்ற நூற்றாண்டின் இடையில் சில வியாசங்களை எளிய நடையில் எழுதி யச்சிட்ட நற்புத்திபோதம் என்னும் நூல், நெடுங்கால மாக இரண்டாம்பதிப் பின்றி வீணாய்ப் போவதைக் கண்டு, ஒரோவிடத்தில் சில தொடர்களையும் சில வாக்கியங்களையும் விடுத்தும், கலியாணஞ் செய்து கொள்ளுதல் என்னும் வியாசத்தில் மாத்திரம் இளைஞர்களுக்கு அவசியமில் லாத சில பகுதிகளை விடுத்தும், தர்மஞ்செய்தல் வீண்செலவு செய்தல் என்கிற வியாசங்களில் பெரும்பாகம் விட்டுவிடுவது தகுதியாகத் தோன்றினமையால் மிகுந்த பாகத்தைப் பணஞ்சம்பாதித்தல் என்கிற வியாசத்தில் சேர்த்தும், வியாசமஞ்சரி யென்னும் புதுப்பெயருடன் பதிப்பித்தது. இதில் அடங்கி யுள்ள வியாசங்கள் :—காலையில் எழுதல்-கடவுளைத் தொழுதல்-உலா வப்போதல்-கல்வி கற்றல்-சிநேகஞ் செய்தல்-பணஞ் சம்பாதித்தல்-கலியாணம் செய்துகொள்ளுதல் என்பவை. ஜனவிநோதினியிலிருந்து ஐந்து வியாசங்கள் எடுத்துப் புதுக்கியும் திருத்தியும் I-வது அநுபந்தமாகச் சேர்த்திருக்கின்றன. அவை கைத்தொழில்-மனிதர்க்குள்ள பரஸ்பரசம்பந் தம்-காலதாமதம்-சம்பாஷணை-உழைப்பின் சிறப்பு என்பன. சில் வழக் குத் தொடர்மொழிகள் அகராதியாக II-வது அநுபந்தமாய்ச் சேர்த்திருக் கின்றன. (4 அணா)

தமிழ் வியாசங்கள்—கல்வி-செய்யுள்-நட்பு-சுகாதாரம்-செல்வம்-வசனம்-சாதுரியம் என்னும் பொருள்களைப்பற்றி இங்க்லிஷ் தமிழ் நூல் களின் சாராமிசங்களையும் அநுபவத்திலறிந்த அமிசங்களையும் தொகுத்து இடையிடையே பொருத்தமான முதுமொழிகளையும் மேற்கோள்களையுங் காட்டி எழுதிய வியாசங்கள். வசனம் என்கிற வியாசத்தில் தத்துவபோதகர் வீரமாமுனிவர் என்கிற பாதிரிமார் படங்களும், சிவஞானமுனிவர் ஆறுமுக நாவலர்-இராமலிங்கசுவாமி-வேலாயுதமுதலியார் என்னும் தமிழ்ப் புலவர் படங்களும் செய்யுள் என்கிற வியாசத்தில் கம்பர் திருவள்ளுவருடைய படங்களும் வைத்திருக்கின்றன. 1·0·0

தமிழ்—முதல்பாகம் தமிழ் சுயபாஷை; இரண்டாம்பாகம் தமிழ ருடைய முற்காலநிலைமை; இவ் விஷயங்களைப் பல திறங்களால் ஆராய்ந்து விரித்துரைப்பதான ஒரு வியாசம். முகதலைப்பில் கால்ட்வெல் அத்யக்ஷர் படமும் இடையில் கம்பர் திருவள்ளுவர் சிவஞானமுனிவர் படங்களும் வைத்திருக்கின்றன. (1 ரூ.)

கம்பநாடர்—இவருடைய காலத்தையும் கவிதையையும் ஒருவாறு ஆராய்ச்சிசெய்தலான ஒரு வியாசம். முகதலைப்பில் கம்பருடைய படம். (12 அணா)

திருவள்ளுவர்—இவருடைய காலத்தையும் அவர் மதத்தையும் நோக் கத்தையும் திருக்குறளின் போக்கையும் ஒருபுடை ஆராய்ச்சிசெய்தலான ஒரு வியாசம். இவருடைய படம் முகதலைப்பில் வைத்திருக்கிறது. (10 அணா)

பஞ்சலட்சணம்—வித்தியார்த்திகள் தமிழிலக்கணத்தை எளிதில் கற்குமாறு, எழுத்தையும் சொல்லையும் வாக்கியத்தையும் பற்றிய நன்னூல் சூத்திரங்களை (உதாரணங் காட்டாமல்) முன்பின் பின்முன்னாக ஏற்றபடி கிரமப்படுத்தி, அணியையும் யாப்பையும் சுருக்கமாக உதாரணங்களுடன் வசனரூபமாக எழுதி, பொருளின் பாகுபாட்டையும் இயல்பையும் விளக்கியுள்ள இலக்கணச் சுருக்கம். சிவஞானமுனிவருடைய படம் முகதலைப்பில் வைத்திருக்கிறது. (5 அணா)

குசேலோபாக்கியானம் & அரிச்சந்திரபுராணம்—இந்நூல்களில் முக்கியமான பகுதிகளைத் தழுவியும் அவசியமில்லாத சந்திகளை விலக்கியும், உரை இடையிட்டு, வித்தியார்த்திகள் எளிதில் படித்தறியும்படி வெளியிட்ட சுருக்கங்கள். (8 அணா)

ஆசாரக்கோவை—பெருவாயின் முள்ளியார் என்பவரால் பல தர்ம சாஸ்திரங்களிலிருந்து அவசியமான ஆசாரங்களை நூறு தமிழ்வெண்பாக்களாக அமைக்கப்பட்டுச் சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கில் சேர்ந்த ஒரு நூல், இதில் உரைத்திருக்கும் விஷயங்கள்—நீராடல்—உடுத்தல்—உண்ணல்—உறங்குதல்—காலைக்கடன்—இல்லொழுக்கம்—மன்னரைச் சேர்ந்தொழுகுதல் முதலியன. இந்நூல் பழைய பொழிப்புரையுடன் புதிய பதவுரையும் குறிப்புரையும் சேர்த்து அச்சிட்டிருக்கிறது. (8 அணா)

பழமொழி நானூறு—முன்றுறையரசர் என்னும் ஜைநவரசர் ஒவ்வொரு பழமொழியை இறுதியில் வைத்துப் பாடிய வெண்பாக்கள் நானூறு கொண்டு சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கில் சேர்ந்த ஒரு நூல். வரையறையின்றி யிருந்த பாக்களை ஒருவாறு திருக்குறள்போல் பாகுபடுத்தி, பழைய பொழிப்புரையைச் சேர்த்து, பதவுரை, கருத்துரை, குறிப்புரைகளோடு அச்சிட்டது. (2 ரூ.)

முதுமொழிக்காஞ்சி—மதுரை கூடலூர் கிழார் இயற்றியது. பத்ததிகாரமாய் ஒவ்வோரதிகாரமும் பப்பத்துக் குறட்டாழிசையால் அமைந்தது. ஒவ்வோரடியும் ஒவ்வொரு முதுமொழி. பழைய பொழிப்புரையோடு, புதிய பதவுரை கருத்துரை குறிப்புரைகளைச் சேர்த்து அச்சிட்டது. (5 அணா)

அறநெறிச்சாரம்—முனைப்பாடியார் என்னும் ஜைநப்புலவர் ஜைந சம்பிரதாயங்களோடு நல்லொழுக்கம் இல்லறம் துறவறம் முதலியவைகளை விளக்கி வீடெய்தும் உபாயத்தை உரைக்கும் இருநூற்றிருபத்திரண்டு வெண்பாக்களாகப் பாடிய ஒரு நூல். (6 அணா)

Apply to:—

3412

Mr. T. P. ALAGAN,

Bookseller,

No. 12, Tolasinga Mudali Street,

Perambur, Madras, N.